7

சுவீகார புத்திரன்

சா. வே. தைரியம்
எழுதியது

பர்மா
நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்க காரியதரிசியும்
கடியாபட்டி தனவைசிய வாலிபர் சங்கத்தலைவருமாகிய
ஸ்ரீமான் - சு. பழனியப்பா அவர்களால்
வெளியிடப் பெற்றது

சென்னை
கார்டியன் அச்சேந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது
1921

[விலை அணு 12.

சத்தியமே ஜெயம். உண்மையே வெற்றிதரும். ஆனால் பொய், புரட்டுகளுக்கு உண்மைமூலாம் பூசி ஜெயத்தை எதிர்ப்பார்ப்போர் இலவுகாத்த கிள்ளையை ஒப்பர்.

தான் பிறந்துள்ள சமூகத்தை முன்னேறச் செய்வதற்காக ஒவ்வொருவரும் முயன்று உழைக்கவேண்டும்.

தனது சமூக நலத்துக்காக உழைக்கமாட்டாதவன், மற்றப் பெரிய காரியங்களுக்காகவும் உழைக்க முடியாதவனுவான்.

போதனை செய்ய மாத்திரமல்ல சாதனை செய்யவும் பழகு. சாதனையில்லாத போதனை சாரமற்ற உப்புக்குச் சமமாகும்.

நம்மிடம் காணப்படும் குற்றங்களை எடுத்துரைப்போருக்கு வந்தனங் கூறி, அந்தக் குற்றங்களை நீக்கிக் கொள்ள முயலவேண்டும்.

நல்லோருடன் நாடோறும் பழகுதல் நன்று. சற்குணசீலர் சகவாசம் நற்குணங்களை விருத்தி செய்யும்.

மாதருக்கு மரியாதை செலுத்தி, அவர்களை கௌரவமாய் நடத்தவேண்டும். சமூக மேன்மையும். தேசச்சிறப்பும் பெண்களின் நிலைமையைப் பொருத்திருக்கின்றன.

ஏழைகளிடமும். அங்கவீனர்களிடமும் அன்பு பாராட்டி அவர்களுக்கு, ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற உதவி செய்தல் வேண்டும். ஏழை களுக்கு உதவி செய்வதெல்லாம் ஈஸ்வரனுர் பற்றிலே எழுதப்பட்டிருக்கும்.



.........அவளைக்கட்டி ஆலிங்கனம் செய்ய எத்தனித்தான்.

117-ம் பக்கம் பார்க்க.

சுவீகார புத்திரன்

சா. வே. தைரியம்
எழுதியது

பர்மா
நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்க காரியதரிசியும்
கடியாபட்டி தனவைசிய வாலிபர் சங்கத்தலைவருமாகிய
ஸ்ரீமான் - சு. பழனியப்பா அவர்கள்ளால்
வெளியிடப் பெற்றது

சென்னை
கார்டியன் அச்சேந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது
1921

All Rights Reserved.] [விலை அணா 12

முகவுரை

இந்தக் கதையில் வரும் சம்பவங்களெல்லாம் கற்பனை யேயாயினும், அவை நம் வைசிய நகரங்களிலே, நம்மவர்களின் ஜீவியத்தில் நிகழும் விஷயங்களையே பிரதிவிம்பிப்பவைகளா யிருக்கின்றன. இவ்விஷயங்களை நம்மவர்கள் பார்ப்பதால் பிரயோஜன முண்டாகுமென்று எண்ணியே இப்புத்தகத்தை வெளியிடலானோம். இதனை வாசிப்பவர்கள் நமது சமுகத்தில் காணப்படும் குணங்குறைகளை உணர்ந்து, தற்காலத்தில் நம்மவர்கள் அவசியமாகக் கைக்கொள்ள வேண்டிய திருத்தங்களைக் கைக்கொள்ளுவார்களானால், அதுவே எமக்குச்செய்த நன்றியாகும். அப்படிச் செய்யும் நன்றி மறக்கற்பாலதன்று.

இன்னும் பல ரசமான விஷயங்களும் சம்பவங்களும் அடுத்து வெளிவரும் புத்தகங்களில் பிரசுரிக்கப்படும்,

இப்படிக்கு,

சு. பழனியப்பா.

உ

சிவமயம்

சுவீகார புத்திரன்

முதலாவது அத்தியாயம்

காரண மேன்னவோ?

பங்குனி மாதத்தில் ஒருநாள் ஒரு வீட்டின் தலைவாயில் சாத்தப்பட்டிருந்தது. வீட்டில் ஆளிருப்பதாக வெளிக்குத் தோன்றவில்லை. வீடுமுழுவதும் நிஸ்ஸப்தமாக விருந்தது. அந்த வீடானது, வைசிய மண்டலத்திலுள்ள முக்கிய பட்டணங்களில் முதன்மை பெற்றுவிளங்கும் தேவ கோட்டையிலே தென்பக்கத்திலுள்ள ஒரு வீதியில் இருந்தது. அது காலஞ்சென்ற இராமநாதன் செட்டியாரின் வீடென்றும் அவர் காலத்தில் மிகவும் சிறப்பாயிருந்த தென்றும், அவருக்குப்பின் அவருடைய மனைவியால் சுவீகாரஞ்செய்து கொள்ளப்பட்ட புத்திரன் ஊதாரியாக டம்ப ஜீவனம் செய்து அநேக பணங்களை அழித்துவிட்டதாகவும், அதனால் அந்தக் குடும்பம் நலிந்து போயிருப்பதாகவும் ஜனங்கள் சொல்லிக்கொள்ளுவார்கள்.

அதற்குச் சமீபத்திலுள்ள ஒரு வீட்டிலிருந்து இரண்டு பெண்குழந்தைகள் வெளியே தெருவில் வந்தனர். அடுத்த வீட்டிலுள்ள ஒரு சிறுமியைக் கூவியழைக்க அவ

ளும் வந்து சேர்ந்தாள். மூன்றுபேருமாக பக்கத்து வீடுகளிலுள்ள தங்கள் கூட்டாளிப் பெண்களை யெல்லாம் ஒவ்வொருவராகக் கூப்பிட்டழைத்தார்கள். சற்றுநேரத்துக்குள் பத்துபேர்கொண்ட ஒரு சிறுபட்டாளம் சேர்ந்து விட்டது. அவர்களில் வாய்த்துடுக்குள்ள ஒருபெண் அந்தச் சிறுமிகளுக்குத் தன்னைத் தலைவியாய் நியமித்துக் கொண்டு,

"அடியே, வாங்கடி யாத்தா போய்க் கூட்டாஞ்சோறு பொங்கி விளையாடலாம்" என்று அவர்களைப் பார்த்துச் சொன்னாள்.

"இல்லடீ, கொழுத்தாடு பிடிச்சு விளையாடலாம், வாங்கடி" என்றாள் கரும்புபோல ஒல்லியாக விருந்த இன்னொரு சிறுமி.

"இந்த வெயிலிலேதானே கொழுத்தாடு பிடிச்சு விளையாடுறது. போடிபோ, லட்சுமி அக்கா சொன்னமாதிரி சோறு பொங்கித்தான் விளையாடணும்" என்று ஒருபெண் கூறினாள். எல்லாரும் அதை ஆமோதித்தார்கள். அதன்மேல் எந்த இடத்திலிருந்து விளையாடுகிறதென்று ஆலோசனை நடந்ததில், செல்லம்மை ஆச்சிவீட்டு வெளித்திண்ணையில் போயிருந்து விளையாடலாமென்று, அவர்களுக்குத் தலைவியாக நின்ற லட்சுமி என்றபெண் சொன்னாள். உடனே எல்லாரும் மேற்குறிப்பிட்ட வீட்டுக்குப் போனார்கள். அங்கு ஆள் அரவமே இல்லாமலிருந்தது.

"ஏண்டி வள்ளியம்மை இங்கே ஒருத்தருமில்லையே. செல்லம்மை ஆச்சி எங்கே போய்விட்டாள்?" என்று லட்சுமி தன் பக்கத்தில் வந்த ஒரு பெண்ணைப் பார்த்துக் கேட்க, அவள்,

"எங்கே போய்விட்டாளென்று தெரியலையே, அடி, அவள் ஆத்தாள் வீட்டுக்குப் போய்விட்டாள்போ லிருக்கிறது" என்றாள்.

"ஒருவரும் இல்லாவிட்டால் நல்லதுதான்; நமது இஷ்டப்போல விளையாடலாம்" என்றாள் இன்னொரு பெண். இப்படிப் பேசிக்கொண்டே அவர்கள் விளையாட ஆரம்பித்தனர். சிலநேரம் சென்றதும் வீட்டுக்குள்ளிருந்து ஒரு விதச் சத்தம் கேட்டது. யாரோ வேதனை பொருக்கமாட்டாமல் அலறுவதுபோலிருந்தது. அந்தச் சத்தத்தைக் கேட்கவும் விளையாடிக்கொண்டிருந்த பெண்கள் எல்லாரும் பயந்து வெளியிலோடிப்போய் தங்கள் தங்கள் வீட்டிலுள்ளவர்களிடம் அதைப்பற்றி பிரஸ்தாபித்தார்கள். உடனே அது என்ன விசேஷமென்று பார்க்கும்படி ஸ்திரிகளும் புருஷரும் கூட்டமாய்த் திரண்டுவந்தனர். வீட்டின் தலைவாயில் கதவு சாத்தப்பட்டு உட்பக்கம் தாள்பாள் போடப்பட்டிருந்தது. உள்ளேயிருந்து ஒரு ஆள் தீனக்குரலில் அழுகிறசத்தம் மாத்திரம் கேட்டது. அந்தச் சத்தத்தினால் அந்த ஆள் ஒரு ஸ்திரியென்று அனுமானிக்கக்கூடியதாயிருந்தது. ஆகையால் காலஞ்சென்ற இராமநாதன் செட்டியாரின் மனைவி செல்லம்மைதான் அப்படி அலறுகிறவளா யிருக்கவேண்டுமென்று எண்ணி அவள் பேரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். ஒருவரும் பதில் கொடுக்கவில்லை. அலறுகிற சத்தம்தான் கேட்டுக்கொண்டிருந்தது. வீட்டின் பின்பக்கமாய்ச் சென்று பார்த்தார்கள். பின் வாயிலையும் சாத்தி உட்புறம் தாள்பாள் போட்டிருந்தது. என்ன செய்கிறதென்று தெரியாமல் எல்லாரும் திகைத்து நின்றார்கள். பின்பு அந்தக் கூட்டத்தில்

நின்ற ஒருவருடைய யோசனையின்மேல் இரண்டு ஏணிகளைக் கொண்டுவந்து, அவற்றை நீளமான ஒரே ஏணியாக இணைத்து அதன்வழியாக ஓர் பணியாளன் அவ்வீட்டுக் கூரையின்மேல் ஏறி அங்கணத்தின் வழியாக உள்ளே குதித்து வாயிலைத்திறந்தான். உடனே எல்லாரும் உள்ளே புகுந்தனர். இரண்டாங் கட்டில் ஒரு அறையின் வாயில் திறந்திருந்தது. உள்ளே ஒரு படுக்கையில் ஒரு ஸ்திரி பரிதாபப் படத்தக்க விதமாய் முனங்கிக்கொண்டு படுத்திருந்தாள்.

"செல்லம்மை அல்லவா அது?" என்ற கேள்வி சிலருடைய வாய்களிலிருந்து ஏககாலத்தில் வெளிப்பட்டது.

"செல்லம்மை, செல்லம்மை" என்று கூப்பிட்டார்கள். ஸ்திரிகள் இருவர் படுக்கைக்குச் சமீபித்துப் போய் அவள் தேகத்தின் மேல் கைவைத்துப் பார்த்து, லேசாகக் காய்ச்சல் அடிப்பதாகச் சொன்னார்கள். வைத்தியருக்கு ஆள் அனுப்பி துரிதமாய்க் கூட்டிவரச் சொல்லப்பட்டது.

சிறிது நேரத்தில் வைத்தியர் வந்து சேர்ந்தார். செல்லம்மையின் கையைப்பிடித்துப் பார்த்து அவள் மிகவும் ஆயாசமாயிருப்ப தாகவும் உடனே லேசான ஆகாரம் கொடுக்க வேண்டுமென்றும் அதற்குபின் அவசியமானால் வேறு மருந்து கொடுக்கலா மென்றும், சொன்னார். அங்கு வந்திருந்த ஸ்திரிகளில் ஒருத்தி போய் சுடச்சுடக் கஞ்சியும் ஊறுகாய்களும் கொண்டுவந்து செல்லம்மையை சாப்பிடும்படி செய்தாள். அதைச் சாப்பிட்டபின் அவள் மீண்டும் படுத்துக் கொண்டாள்.

"அவள் அப்படியே படுத்திருக்கட்டும், ஆயாசம் குறைந்து தானாகவே எழுந்திருக்கும்வரை அவளைத்

தொந்திரவு செய்யவேண்டாம். யாராவது ஒரு ஆள் பக்கத்தில் இருக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு வைத்தியர் போய்விட்டார். கூடிவந்து நின்றவர்களெல்லாரும் ஒவ்வொருவராகப் பிரிந்துபோயினர். ஒரு ஸ்திரீமாத்திரம் ஆயாசமாகப் படுத்திருக்கும் செல்லம்மையின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அவள் எப்பொழுது விழித்தெழும்புவாள் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். மூன்று மணிநேரத்திற்குபின் செல்லம்மை படுக்கையிலே புரண்டாள். சிறிது நேரத்தில் கண்ணைத் திறந்துபார்த்து 'தண்ணீர்' என்று மெல்லிய குரலிலே கேட்டாள். பக்கத்திலிருந்த ஸ்திரி தண்ணீர் கொண்டுவந்து கொடுக்க, செல்லம்மை அதைச் சாப்பிட்டு, ஆயாசம் தெளிந்து எழுந்து உட்கார்ந்து கொண்டு தன் பக்கத்திலிருக்கும் ஸ்திரியை உற்று நோக்கி,

"உமையாளா இது, எனக்கு தண்ணீரைக் கொடுத்து எழுப்பிவிட்டாயே நீ. நான் அப்படியே செத்துப் போயிருந்தாலும் நல்லது" என்று சொன்னாள்.

"ஏன் அப்படி சொல்லுகிறாய் செல்லம்மை ஆச்சி?" என்றாள் உமையாள்,

"ஐயோ அந்த அநியாயத்தை என்ன சொல்லுவேன். பிள்ளையில்லையே என்று சுவீகாரம் செய்தேன். அந்தப் பாதகன் தன் இஷ்டம் போலெல்லாம் பணத்தை அழித்துக் குடும்பத்தைக் குட்டிச்சுவர் ஆக்கிப் போட்டான். என் வயிறு எரியுதே, எரியுதே" என்று சொல்லி செல்லம்மை கண்ணீர் சிந்தினாள்.

"சரி, அதற்காக நீ பட்டினியாய்க்கிடந்து செத்தால் என்ன பலன் உண்டாகும்?"

"வீட்டிலே ஆறு மாதக்காலங் கூட சரியாய் தாமதித்திருக்காமல் அயல் தேசம்போய் என் புருஷன் தேடின சொத்தை இந்தப் பயல் இப்படி அழிக்கிறானே. அதைப் பார்த்துக்கொண்டிருக்க என் மனது சகிக்குமா? நான் எப்படிச் சாப்பிடுகிறது, சமாதானமாயிருக்கிறது? நீயே சொல்லு. அதுவுமன்றி அவனும் அவன் பெண்டாட்டியும் என் விஷயத்தில் செய்திருக்கும் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அதை யெல்லாம் என்மனம் சகிக்குதில்லையே" என்றாள் செல்லம்மை.

"என்ன செய்யலாம். நமது ஜாதியில் இப்படியெல்லாம் நடப்பது வழக்கமாய்ப் போய்விட்டதே. பொருள், பொருள் என்று பொருள் தேடுவதிலேயே கருத்தாயிருப்பதால் நம்மவர்களுக்கு குடும்பவாழ்க்கையும், சந்ததி விர்த்தியும் இல்லாமல் போகிறது. இப்படி தக்க பொருள் தேடியபின் அதை ஆண்டனுபவிக்கவும், பொருள் தேடினோர்க்குண்டாகும் புத்திரவாஞ்சையை நிவர்த்தி செய்யவும் ஒரு புத்திரனை சுவீகாரம் செய்து கொண்டால் அது பல தடவைகளில் உன் கதியைப்போல் நிர்பாக்கியமாய் முடிகிறது. என் நிலைமையோ இன்னும் விசனிக்கப்படத் தக்கதாகும். ஐந்து வருடங்களுக்குக்கு முன்னே நான் என்னென்ன வாழ்வுகளைப்பற்றி யெல்லாமோ நினைத்துக் கொண்டு மகிழ்ச்சியாயிருந்தேன். என்னை அருமையாகப் பெற்ற தாய் தகப்பன்மார் என் வாழ்க்கையையாவது, பின் நிலைமையையாவது எண்ணிப் பாராமல் தீராப்பிணியாளரான ஒரு மாப்பிள்ளைக்கு என்னை முப்பத்தையாயிரம் ரூபாய்க்கு கொடுத்துவிட்டார்கள். அந்த வியாதியால் அவர் கலியாணம் முடிந்த மூன்றுவதுவருடமே சிவ

லோகபிராப்தி யாகிவிட நான் அமங்கிலி ஆகி இரண்டு வருடமாகிறது. இன்னும் எத்தனைவருடகாலம் இந்த உயிரைவைத்துக்கொண்டு அமங்கிலியாக எவ்விதச் சுகங்களுமின்றி அவஸ்தைப்பட வேண்டுமோ தெரியவில்லை. நமது துயரத்தை அந்தப் பகவான் தான் பார்க்கவேண்டும். வேறு யார் நமக்கு ஆறுதல்கூற முடியும்.? நம்மைப் படைத்த ஈசனிடம்தான் நமது கவலைகளைச் சொல்லி, அவர் அருளை நாடவேண்டும்'' என்று உமையாள் சொன்னாள். அப்படிச் சொல்லுகையில் அவள் கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர்த் துளிகள் முத்துக்கள்போலத் தோன்றின. அதைக்கண்ட செல்லம்மையின் கண்களிலும் நீர் பெருகிற்று.

அன்று சாயங்திரம் வைத்தியர் மீண்டும் வந்தார். செல்லம்மை சாப்பிட்ட ஆகாரமும், தூங்கிய தூக்கமும் அவளை முக்கால்பாகம் குணப்படுத்தி விட்டன. என்றாலும் வைத்தியர் ஒரு மருந்தைக்கொடுத்து அதைத் தினம் இரண்டு தடவையாக மூன்று நாள் சாப்பிடவேண்டுமென்றும், நல்ல ஆகாரம் உட்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்திச் சொல்லிவிட்டுப் போனார். பக்கத்து வீடுகளிலுள்ளவர்கள் செல்லம்மையைப் பார்க்க வந்தார்கள். அவள் அவ்வாறு ஆயாசமும் இளைப்புமடையும்படி நேரிட்ட காரணமென்னவென்று சிலர் கேட்டார்கள். செல்லம்மை அந்தக்கேள்விக்கு சரியான பதில் கொடுக்கவில்லை. வந்தவர்களெல்லாரும் சிலநேரம் பேசிக்கொண்டிருந்தபின் அவரவருக்குத்தோன்றிய யோசனைகளையும், மருந்துகளையும், கைபாகங்களையும் செல்லம்மைக்குச் சொல்லிவிட்டுப் போனார்கள். அவர்கள் சொல்லிய யோசனை

களும் மருந்துகளும் ஒன்றுக்கொன்று விருத்தமாயிருந் தன. அவற்றிற்கிணங்க யாரேனும் நடக்க முற்படுவார் களானல், அப்படிப் பட்டவர்கள், பலருடைய யோசனை யின் படியும் செய்ய எத்தனித்துத் தன் கழுதையைப் போக்கடித்துக் கொண்ட மூடனை கிழவனுடைய கதி யையே அடைந்திருப்பார்கள் என்பது நிச்சயம். ஆனல் ஒரு விஷயத்தில்மாத்திரம் எல்லாரும் ஏகமானதாய் ஒன் றுபட்டிருந்தார்கள். "எல்லாம் கடவுள் செயல்". "அவ னன்றி ஓரணுவும் அசையாது" 'கடவுள் மேலேயே எல் லாப் பாரத்தையும் போட்டுவிடவேண்டும்" என்பதுதான் அவர்களெல்லாரும் ஒரே வாக்காய்ச் சொன்ன யோசனை யின் தாற்பரியம். இந்த யோசனையை மேற்கொண்டொ ழுகவேண்டுமென்று செல்லம்மை தனக்குள் தீர்மானித் துக்கொண்டனள்.

செல்லம்மையை வந்து பார்த்துவிட்டுப் போனவர் கள் அவளது நிலைமையைப் பற்றித் தங்களுக்குள் பல வாறு பேசிக்கொண்டு போனர்கள்.

"சுப்பையா, தன் பெண்டாட்டி பேச்சைக் கேட்டுக் கொண்டு செல்லம்மையைக் கவனிக்கிறதே இல்லையாமே" என்று ஒரு ஸ்திரீ சொன்னாள்.

"கண்ணம்மை இருக்கிறளே அவள் பொல்லாத மூதேவி. பேர் மாத்திரம் கண்ணம்மை என்று கொடு த்து விட்டார்கள். அவள் எப்பொழுதுமே, முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டிருப்பாள். எனக்குச் சற்றும் பிடிக்கிறதில்லை. அப்படியிருக்கச் செல்லம்மைக்கு எப்படி பிடிக்கும்?" என்று வயது முதிர்ந்த ஒரு ஸ்திரீ சொன்னாள்.

முதலில் பேசின ஸ்திரி.—"இந்தப்பெண்ணைக் கலியாணம் செய்யக்கூடாதென்று செல்லம்மை முதலிலிருந்தே ஆட்சேபனை செய்தாளாம். ஆனால் அருணாசலத்தின், பிடிவாதத்தினால் தான் இவளைக் கலியாணம் செய்யநேரிட்டதாம்"

வயோதிப ஸ்திரீ.— "அப்படித்தான் எல்லாரும் சொல்லுகிறார்கள். வேறு பல மாதிரியும் சொல்லுகிறார்கள். செல்லம்மை இவ்விஷயத்தில் தன் புத்தியைக் கடன் கொடுத்துவிட்டாள் இனி வந்ததைப் பட்டனுபவிக்க வேண்டியதுதான்."

'ஊர்வாயைமூட உலைமூடி உண்டா', என்றபடி உலகினர் பற்பலவாறு எண்ணுவார்கள்; பேசுவார்கள். ஆனால் அனுபவிப்போருக் கல்லவா கஷ்டங்களின் வேதனை தெரியும். செல்லம்மையும், இப்பொழுது அவளுடன் கூடவிருக்கும் உமையாளும் அனுபவிக்கும் மனத்துயரை மற்றோர் அறியமுடியுமா? முடியாது. செல்லம்மையின் சரித்திரம் வெளிப்படும் பொழுது அவளைப்பற்றி மேற்கண்டவாறு எளிதில் அபிப்பிராயங் கூறினோர் தங்கள் அபிப்பிராயங்களை அடியோடுமாற்றவும், அவற்றுக்காகப் பச்சாத்தாபப் படவும் நேரிடலாம்.

இரண்டாவது அத்தியாயம்

இல்லற மல்லது நல்லற மன்று

உலகத்தில் காணப்படும் எல்லா உயிர்களிலும் மனிதனே சிரேஷ்டனென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளு

வார்கள். அப்படிப்பட்ட மனிதன் ஞானவாழ்க்கையினு லும், பிறருக்கும் பிறவுயிர்களுக்கும் இம்சை செய்யாத பாம சன்மார்க்க நடத்தையினுலும் தனது சிரேஷ்ட நிலை மையைப் ஸ்தாபித்து குன்ருத மேன்மையுடன் சுயாதீன புருடனுய் இப்புவியின்கண் நிலவுதலே சிறப்பாகும். அப்ப டியில்லாமல் ஜீவகாருண்ணியத்துக்கும், சமய நெறிகளுக் கும், பகுத்தறிவுக்கும் பொருந்தாத வழக்கங்களுக்கு தங் களை அடிமைகளாக விற்றுவிட்டிருக்கிற மனிதனைப்பற்றி என்னசொல்லலாம் ? மனிதனுடைய நல்வாழ்வுக்காகவும். அபிவிருத்திக்காகவும், மேன்மைக்காகவுமே நியமம், ஒழுக் கம், கட்டுப்பாடு முதலியவை ஏற்பட்டுள்ளன ; அவற்றுக் காக மனிதன் ஏற்படுத்தப் படவில்லை; சிருஷ்டிக்கப்பட வுமில்லை. அப்படியிருந்தும் வழக்கம் என்னும் பெரிய துஷ்டதேவதை நம்தேசத்தில் வெற்றி தாண்டவமாடு கிறது. மனிதனுடைய முன்னேற்றத்தையும், மேன்மை யையும் கருதி ஏற்படுத்தப்பட்ட சாதன சாதுரியங்களெல் லாம் அந்தத் துஷ்டதேவதையின் உத்தம சேனுதிபதிக ளாகிவிட்டன. மனிதன் தன் நல்வாழ்வுக்கேற்ற நிகழ்ச்சி களுக்கு தானே அதிகாரியாயிருக்கும் உரிமையும், பகுத் தறிவும் சூறையாடப் பட்டுப் போயின. கேவலம், வழக் கத்தினுல் ஆட்டுவிக்கப் படும் ஒரு பொம்மையாக மனிதன் மாறிவிட்டனன். அவனுக்குச் சுவாதீனமே இல்லை. வழக் கம் அவன் உடலையும் உயிரையும் ஒருங்கே விலைக்கு வாங் கிக் கொண்டதென்றும், இனி அவன் தன் வாணுள் முழு வதும் வழக்கத்துக்கு அடிமையாயிருந்தே தீரவேண்டுமெ ன்றும் சொல்லலாம். இத்தகையோனை எல்லா உயிர்களி லும் சிறந்த மனிதன் என்று மதிக்க முடியுமா?

முந்தின அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்களுக்கு ஏறக்குறைய இருபது வருடங்களுக்கு முன்னுக இந்தக் கதை ஆரம்பிக்கிறது. அப்பொழுது இராமநாதன் செட்டியாருக்கு இருபது வயதிருக்கலாம். அவர் தந்தையான முத்தையா செட்டியார் பெரிய தனவந்தரல்லர்; மிதமான சம்பத்துடையவர். அவருக்கு மூன்று புத்திரர்கள் இருந்தனர். இராமநாதன் தான் தலைமகன். முத்தையா செட்டியாரின் விருப்பப்படியே இராமநாதனின் கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இருபதினுயிரம் ரூபா 'பெண்தொகை' கொடுத்து செல்லம்மை என்னும் பெயர் கொண்ட ஒரு பெண்ணைத் தெரிந்து நல்ல சுப முகூர்த்தத்தில் இராமநாதனுக்கு மணம் முடித்தனர். குத்தகைச் சமையல்காரர், சீருடமைக் காட்சிசாலை, கதா காலட்சேபம் ஆகிய வைபவங்களுடன் கலியாணம் இனிது நிறைவேறிற்று. கல்வியிலும் ஞானத்திலும் குறைந்த வாலிப மனைவியுடனும், வட்டி பெருகும் பெருந்தொகைக் கடனுடனும் இராமநாதன் செட்டியார் தமது இல்வாழ்க்கையை ஆரம்பித்தார். கலியாணம்முடிந்து ஒருவருடம் ஆயிற்று; கடன் தொகை வளர்ந்து கொண்டிருந்தது. இனிமேலும் இல்வாழ்வில் தாமதித்திருந்தால் அந்தக் கடனை ஒழிப்பதெங்ஙனம்? ஆகையால் இராமநாதன் செட்டியார் சைகோனில் கடை ஸ்தாபித்து தொழில் நடத்திவரும் தமது மாபினர் ஒருவரை அடுத்து அவருடைய கடைக்கு மேலாளாக சைகோனுக்குப் போனுர். இளவயதுள்ள தம் மனவியைக் கூட அழைத்துச்செல்ல இராமநாதனுக்கு விருப்பமிருந்ததென்றாலும், 'வழக்கம்' என்ற துஷ்டதேவதை வழிமறித்து நின்றது. வழக்கத்

தை மீறிச் செல்ல முடியாததால் மனைவியை வீட்டில் விட்டுவிட்டு அவர் தனிமையாகச் செல்ல நேர்ந்தது. அவர் சைகோன்போய் கடையின் வியாபாரங்கள், தொழில் நுட்பங்கள் ஆகிய விபரங்களை ஏற்கனவே அங்குள்ள மேலாளிடமிருந்து நன்கு தெரிந்துகொண்டார். வழக்கப்படியே முந்தின மேலாள் பின்னும் ஆறுமாதக் காலம் இராமநாதனுடனிருந்து அவ் விபரங்களையெல்லாம் செவ்வனே விளங்கும்படி சொல்லிக்கொடுக்க இராமநாதன் அவற்றையெல்லாம் வெகு துரிதத்தில் திட்டமாகக் கிரகித்து நிர்வாக சக்தி பெற்று விளங்கினர். அதன் பின் முந்தின மேலாள் தம் ஊருக்குப் பிரயாணமானர்.

பின்னர் இராமநாதன் ஆளுகையில் கடை நடந்து வந்தது. வாலிபனாயிருந்தாலும் இராமநாதன் புத்திசாலியும், தைரியநெஞ்சனு மாயிருந்ததால் விரிவாகத் தொழில் நடத்தி முதலாளிக்கு நல்ல லாபம் காண்பித்தார். 'தொட்டதெல்லாம் பொன்னுயிற்று' என்று சொல்வது போல அவர்செய்த தொழில்களெல்லாம் நல்ல லாபத்தை தந்தன. ஆரம்ப சித்தி; அதிலும் வாலிபவயது. எனவே பொருளீட்டலில் இராமநாதனுக்கு எல்லையற்ற ஆசையுண்டானதைப்பற்றி நாம் ஆச்சரியப்பட இடமில்லை. வெகு சீக்கிரத்திலேயே கடன்களை யெல்லாம் நீக்கிவிட்டுத் தான் ஒரு லட்சாதிபதி ஆகவேண்டுமென்று அவர் தீர்மானித்துக் கொண்டார். சைகோன்கடையில் மூன்று வருட காலம் தொழில் நடத்தினபின் வீடுதிரும்பினர். கடை மிகவும் செழிப்பான நிலைமையிலிருந்தது. அந்த மூன்று வருடக்காலத்தில் திரண்ட லாபம் கிடைத்திருந்தது. வழக்கமாகக் கிடைக்கவேண்டிய சன்மானம், லாபத்தில்

நூற்றுக்கு ஐந்து விதமான தொகை—இவைகளுடன் விசேஷ இனமாக ஒரு நல்ல தொகையையும் முதலாளி அவருக்குக் கொடுத்தார். லாபம் காண்பித்தால் கூட்டாளிக்கு கௌரவமும் மதிப்பும் அதிகரிக்குமல்லவா. இராமநாதன் வீடுவந்து மூன்றுமாதங்கூட சரியாக ஆகவில்லை. அதற்குள் சிங்கப்பூரில் ஒரு கடைக்கு சாமர்த்தியமுள்ள ஒரு மேலாள் வேண்டியிருந்தது. உயர்ந்த சம்பளம் கொடுப்பதாய் வாக்குக் கொடுக்கப் பட்டது. இராமநாதன் அந்த வேலையை ஒப்புக்கொண்டார். அதிலும் முன் போலவே அவருக்கு தொழில் சித்தியும், லாபமும் உண்டாயின. தன் தீர்மானம் கைவல்யமாகி விடுமென்று இராமநாதன் தனக்குள் மனோராஜ்யம் செய்துகொண்டிருந்தார். தனலட்சுமி அவர்பால் கடைக்கணித்தாள்; ஆயிரம் பதினாயிரமாக பணம் பெருகிக்கொண்டு வந்தது. மூன்றுவருட காலத்துக்கு ஒருமுறை அவர் தம் சுயவூர் வருவதுண்டாயினும், அங்கு சிலவாரங்கள் அல்லது மாதங்கள் மாத்திரம் தங்குவார். அதற்குள் மறுகணக்குக்கு இன்னொருகடைக்குப் புறப்பட ஏற்பாடாகிவிடும். இப்படியாகப் பல வருடங்கள் கழிந்தன. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கினுள் நிலையற்ற பொருளே பிரதானமென்று இராமநாதன் செட்டியார் கருதிவிட்டமையால் மற்ற மூன்றும் புறக்கடையில் தள்ளுண்டு போயின. உண்மையில் இந்தப் புருஷார்த்தங்களைப் பற்றிய எண்ணமே அவர் மனதில் உதிக்கவில்லையெனலாம். மற்றவர்களைப்போல ஓர் இளம்பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டாராயினும் இல்லறவாழ்க்கையிலிருந்து அதன் பேறுகளை அனுபவிக்க அவருக்கு சாவ

காசப் படவில்லை. இல்லறத்துக்குப் பதில் பொருளீட்டலறத்தைப் போற்றிவந்தார். அவர் போய்த் தொழில் நடத்திவந்த அயல் நாடுகளிலே பலவிலை மாதருக்கு அவரால் நல்ல வருமான மிருந்தது. ஆனால் அவ்விஷயத்திலும் அவர் பெருந்தொகைகளைச் செலவிடவில்லை, லட்சாதிபதியாக வேண்டுமென்ற தீர்மானத்தால் அதிலும் சிக்கனமாகவே நடந்து கொண்டாரென்று பிரஸ்தாபம்.

இது இப்படியிருக்க, இனி செல்லம்மை ஆச்சியின் கதியைப்பற்றி விசாரிப்போம். கலியாணமானபின் ஒரு வருடகாலம் இராமநாதன் செட்டியாரும் செல்லம்மாளும் அந்யோந்யமாய் வாழ்ந்தார்கள். அதன்பின் ஏற்கனவே விவரிக்கப்பட் டிருக்கிறபடி இராமநாதன் செட்டியார், அனேகமாய்த் தன் காலமெல்லாம் அயல் நாடுகளில் வசித்துவந்ததால் செல்லம்மை இல்வாழ்க்கையின் பேறுகளை அடையவில்லை. காட்டில் எரித்த கடுநிலாப்போலே அவளுடைய பருவகால மெல்லாம் வீணில் கழிந்தது.

வீட்டுவேலைகளைப் பார்த்தல், தனக்குப் பழக்கமான ஸ்திரிகளுடன் குடும்பப்பேச்சும், ஊர்ப்புறணியும் அளத்தல்-இவைதான் அவளுடைய அன்றாடக வேலையின் முக்கிய அம்சங்களா யிருந்தன. சில வேளைகளில் மாமியுடன் சண்டைப் பிடிப்பாள், உற்சாகம் அதிகமா யிருந்தால் கொழுந்தன்மார் பெண்சாதிகளில் ஒருத்தியைத் தெரிந்து கொண்டு அவளுடன் சண்டை தொடுப்பாள். இருவரும் ஒருவருக்கொருவர் இளையாமல் வார்த்தைகளைச் சரமாரியாகப் பொழிந்து ஒருமணிநேரம் முதல் இரண்டுமணி நேரம் வரையில் பலமான வாய்ப்போர் புரிவார்கள். பின்பு சண்டையை இன்னொரு நாளைக்கு ஒத்தி வைத்துவிட்டு

இளைப்பாற அல்லது சண்டைப் பிரதாபங்களைப்பற்றி மற்ற ஸ்திரிகளிடம் பிரசங்கிக்கும்படி பிரிந்து போவார்கள். மாதந்தோறும் பல தடவைகளில் இப்படிப்பட்ட சச்சரவுகள் நடப்பதுண்டு.

செல்லம்மை மிகவும் சிக்கனக்காரி; செட்டு என்பதே ஒருருவாய்த் திரண்டு செல்லம்மையாக அவதரித்திருந்தது என்று சொல்லலாம். புருஷன் 'தொலை'யிலிருக்கும்பொழுது தான் ரசகுழம்பும் சாதமும் சாப்பிடுவது சரியல்லவென்பது அவள் எண்ணம். ஆதலின் அனேக நாட்களில் கஞ்சியும் ஊறுகாயுமே அவள் போஜனமாயிருந்து வந்தது. அடிக்கடி சமையல் செய்வதால் வீண் செலவுண்டாகுமென்று கருதி அவள் ஒரு தடவை சமைத்த அன்னத்தைச் சிலவேளைகளில் 48 மணிநேரம் வரையிலும் சாதாரணமாக 72 மணிநேரம் வரையிலும் வைத்துக்கொண்டு தன் குக்ஷிபாதையைத் தீர்த்துக்கொள்ளுவாள். பக்கத்து வீடுகளில் கலியாணம், புதுமை, சாந்தி ஆகிய விசேடங்கள் நடக்கும்பொழுது தன் வீட்டுக்குவரும் பலகாரங்கள், பழங்கள் முதலியவைகளை யெல்லாம் விற்பனைசெய்து சிருவாட்டுப்பணம் தேடிக்கொள்ளுவாள். இந்த வியாபாரத்துக்காக ஜனப்போக்கு வரவுள்ள தெருச்சந்திகளிலும், மாத் தடிகளிலும் செல்லம்மையும், அவளைப்போன்ற வேறு பெண்களும் அவரவர் விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கும் சரக்குகளை ஓலைப் பெட்டிகளில் வைத்துக்கொண்டு யாரேனும் அவற்றை வாங்கமாட்டார்களாவென்று மீன் கொத்திப் பறவைபோல வருவோரையும், போவோரையும் கவனித்துக்கொண்டு நிற்பார்கள். எளிய ஜனங்கள் வந்து கால்மணிநேரம் வரையில் விலையைப்

பற்றி வாதாடினபின் அவர்கள் வைத்திருக்கும் தின் பண்டங்களில் சிலவற்றை விலைக்கு வாங்கிக்கொண்டு போவார்கள். சிலவேளைகளில், வேலையில்லாமல் ஊரைச்சுற்றி வரும் போக்கற்ற தடியர்கள் இந்தப் பெண்களைக் கண்டால், அவர்களுடன் பேச்சுக்கொடுத்து வேடிக்கைப் பார்க்க முயற்சிப்பது முண்டு. எங்ஙனமெனில் அந்தத் தடியர்களில் ஒருவன் வந்து “என்னென்ன பலகாரங்கள் இருக்குது ஆச்சி?” என்று கேட்பான். அவளிடம் இருக்கிற பலகாரங்களைக் காண்பித்தால் அவன் “இது ஒருமாதிரியா யிருக்கிறது, அது முந்தினநாள் செய்ததோ என்னவோ தெரியவில்லை” என்று ஒவ்வொன்றையும் பார்த்து வேண்டுமென்றே குற்றம் சொல்லுவான்.

அவன் செய்வது குறும்புத்தன மென்று உணராமல் அந்தப்பெண்கள் அவன் சொல்வதற்கெல்லாம் சமாதானம் சொல்லிக் கொண்டு நிற்பார்கள். அந்த ஊர்சுற்றித்தடியர்களும் பதிலுக்குப் பதிலாக எதையும் சொல்லி பேச்சை வளர்த்து தமாஷ் பார்த்துக் கொண்டிருப்பதுண்டு. அதனால் அந்தப் பெண்களுக்குச் சில சமயங்களில் அளவற்ற எரிச்சல் பிறந்துவிடும். அப்படி நேரிட்டால் பெரிய இரைச்சல் உண்டாக்கிவிடுவார்கள். இவ்விதமாக செல்லம்மையும், மற்றவர்களும் தங்கள் வியாபாரங்களை இனிது நடாத்திவந்தனர். இந்த வியாபார முயற்சிகளில் அவர்கள் படும் கஷ்டமும், அடையும் அவமானமும் பெருந்தொகைப் பனத்துக்கு ஈடாகுமென்றாலும், அதனால் அவர்கள் பெறும் ஊதியத்தை காசுக்கணக்கு அணுக் கணக்கில் தான் கணிக்கவேண்டும். அணுவானாலும், அதிலும் குறைவாக, கேவலம் ஒரு பைசாவானாலும் கையிற் கிடை

த்தது லாபம்தானே என்பது அவர்கள் எண்ணம். அந்த லாபத்துக்காக அவர்கள் பட்ட பாட்டையும், கெட்ட கேட்டையும் கிடைத்ததொகையுடன் ஒப்பிட்டுப்பார்த்து, அது எவ்வளவு அற்பமானதென்று உணர்ந்து கொள்ளத் தக்க மனேபக்குவம் அவர்களுக்குக் கிடையாது.

இராமநாதன் செட்டியார் வீட்டிலே அனேக மெத்தைகளும் தலையணைகளும் காற்றும், வெளிச்சமும் உட்பிரவேசிக்கமுடியாத இருட்டறைகளில் நிறைத்து வைக்கப்பட்டிருந்தன. இம்மாதிரி தண்டனையடைய அவை முன் ஜென்மத்தில் எந்தராஜாங்கத்துக்குவிரோதமாய்க் குற்றஞ் செய்திருந்தனவோ தெரியவில்லை. செல்லம்மை அந்த மெத்தைகளையும் தலையணைகளையும் உபயோகப்படுத்தினல் அவை பதனழிந்து கெட்டுப்போய்விடுமென்று நினைத்து அவைகளைத் தொட்டுக் கூடப்பார்க்கமாட்டாள். மூன்று தலைமுறைகளுக்கு முன் உருவாக்கப்பட்ட ஒரு தலையணையும், பலவருடங்கள் உழைத்து நல்ல அநுபோகமுள்ள ஒரு கோரம்பாயுமே அவள் படுக்கையாயிருந்தது.

இப்படிப்பட்ட ஜீவியத்தில் மனவெறுப்பு ஏற்பட்டால் உடனே தீர்த்தயாத்திரை செய்து சோர்வுற்ற மனதை உல்லாசப்படுத்துவது தனவைசிய மாதருக்கு வழக்கமாயிருக்கிறது. ஆண்துணையில்லாமல் பிரயாணஞ் செய்யும் சுயாதீனத்தை நமது நாட்டில் செட்டி குலப் பெண்களிடம்தான் விசேஷமாய்க்காணலாம். இரண்டொரு கார்பார் ஆச்சிகளின் தலைமையின் கீழ் ஒரு தொகையான ஸ்திரிகள் புறப்பட்டு தீர்த்தயாத்திரை செல்லுவார்கள். செல்லம்மை வருடந்தவருமல் இந்த யாத்திரைக்காரிகள் கூட்டத்தில் சேர்ந்துகொள்ளுவாள். அவர்கள் திரும்பி

வருகையில் வழியில் ஆங்காங்கு அகப்படும் வெற்றிலைச் செல்லம், சுண்ணும்புக் கரண்டகம், பாக்குவெட்டி, மைசூர் சட்டிபானை முதலிய அபூர்வ சாமான்களை வாங்கி மூட்டை கட்டிக்கொண்டு வருவார்கள். ஒரு தடவை செல்லமாள் வாங்கிவந்த மைசூர் சட்டி பானைகள் மாத்திரம் வீடுவந்து சேரவில்லையென்று தெரிகிறது. மதுரை ரயில்வே ஸ்டேஷன் வரையில் அவை பத்திரமாய் வந்து சேர்ந்ததாகவும், ஸ்டேஷனில் மேல்பாலத்தின் வழியாகக் கொண்டுவருகையில் ஜன நெருக்கத்தினுல் அந்தச் சட்டிபானை மூட்டை தவறிக் கீழேவிழுந்து பொடிப் பொடியாகப் போய்விட்டதாகவும், அதைக் கண்டு செல்லம்மை பிரலாபிக்க, மற்றஸ்திரிகளும் அவ பக்கத்துணையாய் நின்று பிரலாபித்ததினுல் பெரிய கோஷ்ட முண்டாகி, பாலத்தின் வழியாகக் கடந்துபோக மார்க்கமில்லாமல் ஜனங்கள் என்னவோ ஏதோவென்று பெரிதும் மலைத்துப்போய்விட்டதாகவும், பிறகு ஸ்டேஷன் மாஷ்டர், ரெயில்வே போலிசார் முதலானோர் வந்து விசாரித்து விஷயமின்னதென்று உணர்ந்து, பால வழியை அடைத்துக்கொண்டு நின்ற ஆச்சிமாரை சமாதானப் படுத்திப் வருத்தப்படாதுபோகச் சொல்வதற்கு நெடு நேரம் பிடித்ததென்றும் பிரஸ்தாபம். இந்த நஷ்டத்தை செல்லம்மை ஒரு நாளும் மறந்தவளல்லள். அடிக்கடி அதை நினைத்துக்கொண்டு மதுரையையும், ரெயில்வே ஸ்டேஷன் மேல்பாலத்தையும், அதன்வழியாக அன்று நடந்து சென்ற ஜனங்களையும் நெடுநேரம் திட்டிக்கொண்டிருப்பாள். இவ்விதமாக செல்லம்மையின் ஜீவியம் நடந்து வந்தது.

இராமநாதன் செட்டியார் அயல் நாடுகளுக்குச் சென்று பொருளீட்டிக் கொண்டிருந்தார். அவர் தீர்மானத்தின்படியே பல லட்சரூபாய் பெறுமான ஆஸ்தி சேர்ந்துவிட்டது. தேவகோட்டையில் "இடம் படவீடிடேல்," என்ற ஔவை பிராட்டியார் வாக்கியத்திற்கு மாருக, ஒரு பெரிய வீடு கட்டினர். சொந்தத்தில் தொழில் நடத்த ஆரம்பித்து ஒரு முதலாளி ஆனர். அதன்பின் தேவகோட்டையிலே அவர் ஸ்திரமாய் வாசஞ்செய்து வந்தார். செல்வம் பொலிந்தது ; சிநேகிதர் குழாம் பெருத்தது. தான் நினைத்தபடி ஜீவிய ஓட்டத்தில் சித்தி பெற்றதாக திருப்தியும் உண்டாயிற்று. ஆனல் இவைகளை யெல்லாம் மறைக்கத்தக்க ஓர் பெருங்குறை இருந்தது. பொருளீட்டலில் ஈடுபட்டு நின்ற இராமநாதன் செட்டியாரின் இல்வாழ்வு இனிது நடைபெருததால் அவருக்கு மக்கட்பேறு உண்கவில்லை.

"பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்
றென்னுடையரேனு முடையரோ—வின்னடிசிற்
புக்களையும் தாமரைக் கைப்பூநாறும் செய்யவாய்
மக்களை யிங்கில்லாதவர்."

இராமநாதன் செட்டியார் தமக்கு மக்கட்பேறு இல்லாத குறையை நினைந்து நினைந்து சிந்தை நொந்து வாடினர். ஆங்காலமெல்லாம் இல்வாழ்க்கையை அசட்டை செய்து அயல் நாடுகளில் திரிந்துவிட்டு சாயங்காலத்தில் பிள்ளையில்லையே என்று பிரலாபிப்பதால் பயனுண்டாகுமோ? அவ்விதம் மனம் வருந்தினதால் அவர் தேக சௌக்கியத்துக்கு பங்கமுண்டானதே தவிரவேறெவ் வித

பயனும் உண்டாகவில்லை. இவ்விதமாகப் பலமாதங்கள் கடந்தன.

இராமநாதன் செட்டியாருக்கு தம்பிமார் இருவர் உண்டென்று ஏற்கனவே அறிந்திருக்கிறோம். அவர்களில் இராமநாதனுக்கு நேரிளையவர் பெயர் அருணசலம் செட்டியார். இவர் இராமநாதன் செட்டியார் ஊரில் ஸ்திரமாக வசிக்க ஆரம்பித்தபின் எப்பொழுதும் அவர் கூடவேயிருந்து அவருக்கு மனோகரமாக நடந்து வந்தார். இராமபிரானிடம் லட்சுமணர் நடந்து வந்ததுபோல அருணசலம் செட்டியார் தம் தமையனரிடந்து நடந்துகொண்டாரென்று சொன்னல் அது மிகையாக மாட்டாது. மக்கட்பேறு இல்லாமைபற்றி தமையனர் மனம் வருந்துவதைத் தெரிந்து கொண்டது முதலே அவர் மனவருத்தத்தை மாற்ற குறிப்பாகவும், சொல்லாமற் சொல்லும் உபாயத்தாலும் அருணசலம் செட்டியார் பல விஷயங்களை எடுத்து கூறிவருவதுண்டு. "பிள்ளைகளிருந்தால், நற்குணமுள்ளவர்களாய், சன்மார்க்க சீலராய், உலகம் போற்றத்தக்கவர்களாயிருக்கவேண்டும். அதற்குமாருக துஷ்ட குணமைந்தரைப் பெற்றிருப்பதிலும் மக்கட்பேறின்றி யிருப்பதே மேல். திரிதாராஷ்டிர அரசனுக்கு நூற்றுக்கணக்கான புத்திரர்—துரியோதனாதியர் இருந்தும் அவ்வரசன் கண்ட பலன் என்ன? சாகுமளவும் துயரமும் மனவேதனையுந் தவிர வேறென்று மில்லையே, அண்ணு, பிள்ளையில்லையே என்று நீங்கள் மனம் வருந்துகிறீர்கள். நம்மூரிலும் பக்கத்தூர்களிலும் நம்மவர்களில் எத்தனையோ பேர் "குலத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்பு"களைப்போன்ற மைந்தரைப்பெற்று மனம் வருந்திக்கொண்டிருக்கிறார்கள். அதை

யெல்லாம் நாம் பார்க்கிறோமே. அப்படிப்பட்ட பிள்ளைகளைத்தந்து உலகப்பழிப்புக்கு ஆளாக்கிவிடாமல் கடவுள் இப்படி வெறுமனே யிருக்கச்செய்ததும் ஒருவகையில் நல்லதென்றே எண்ணிக்கொள்ள வேண்டும்''—என்று சமய உசிதமாகவும் சாமர்த்தியமாகவும், அருணாசலம் செட்டியார், தம் தமையனாரிடம் பேச்சுக்கொடுத்து அவரது மனக்கவலையை மாற்ற முயற்சி செய்துவந்தார். தம்மை ஆறுதல்படுத்தமுயற்சி செய்யும் சகோதரனின் அன்பைப் பற்றி இராமநாதன் செட்டியார் தமக்குள் உவப்படைந்தாரென்றாலும் அதனால் அவர் மனக்குறை மாறவில்லை. ஒரு புத்திரனைச்சுவீகாரம் செய்யவேண்டுமென்று இராமநாதன் செட்டியார் தீர்மானித்து அந்தக்கருத்தை அருணாசலம் செட்டியாரிடம் வெளியிட்டார். இவ்விதத் தீர்மானத்தைப் பலநாட்களாக எதிர்பார்த்திருந்தவராகையால் அருணாசலம் செட்டியார் சொல்லுவார்.—

"ஆம் இனி அப்படித்தான் செய்யவேண்டும். ஆனால் நற்குணங்களமைந்த பையனாகப் பார்த்துத் தெரிந்து கொள்வது அதிமுக்கியம். ஏனெனில் நமது குடும்ப மானத்தையும், வாணாளெல்லாம் பாடுபட்டுத்தேடிய ஆஸ்தியையும் அவன் கையில் ஒப்புவிக்கப் போகிறோம். அவற்றைச் சிறப்பிப்பதோ அல்லது சிறுமைப்படுத்துவதோ, எல்லாம் அவனைப் பொருத்திருக்கிறது. நம்மவர்களில் சிலர் ஊண், உடையாதி விஷயங்களில்கூட தங்களை ஒறுத்து வெகுகஞ்சத்தனமாகப் பொருள் தேடியபின், புத்திரனில்லாக் குறையை நிவர்த்திக்க, தங்கள் மனதுக்குப்பிடித்த பாலியர்களைச் சுவீகாரஞ்செய்து கொள்ளுகின்றனர். சீக்கிரத்திலேயே அந்தச் சுவீகார புத்திரர் துஷ்டராய் மாறி

சூது, தாசிகமனம் முதலிய தீயவொழுக்கங்களை அனுசரித்து, தந்தை கஷ்டப்பட்டுத் தேடிய்பொருளை அழிக்கிறார்கள். அதைக்கண்டு மனம்பொறுமல் தந்தை ஏதாவது சொன்னால் "அட கிழப்பிணமே வாயைமூடு. கஷ்டப்பட்டு இவ்வளவு பணத்தையும் சம்பாதித்து என்னிடம் கொடுத்து எனது கோலாகலமான வாழ்வைக்கண்டு களிப்படையும்படி உன் தலையில் எழுதியிருக்கிறதற்கு நானென்னசெய்வேன். போன ஜன்மத்தில் நான் கஷ்டப்பட்டு தேடியபணத்தில் எவ்வளவுபணத்தை நீசுருட்டிக்கொண்டு போனாயோ யாருக்குத்தெரியும். ஒருவேளை அதைத்தான் இப்பொழுது வட்டியும் முதலுமாக என்னிடம் திரும்பத் தந்திருக்கக்கூடும். அப்படியிருக்க அதையெல்லாம் ஆராய்ந்து பாராமல் என்னிடம் முணுமுணுக்கவாவது தொன தொனக்கவாவது செய்தால் வீட்டைவிட்டுத் துரத்திவிடுவேன். அது நன்றாய் ஞாபகத்திலிருக்கட்டும்" என்று சொல்லாமல் சொல்லிக்காட்டி பயமுறுத்துகிறார்கள். இம்மாதிரிச் சம்பவங்கள் நம் வைசியமண்டலத்தில் சாதாரணமாய் நடந்து வருகின்றன. அது எல்லாருக்கும் தெரிந்ததே. ஆகையால் பையனைத் தெரிந்து கொள்ளுகிற விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்" என்றார்.

இராமநாதன் செட்டியார்.—"அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன் நற்குணமும் புத்தி தீக்ஷண்யமுமுள்ள பையனைத்தான் தெரிந்துகொள்ள வேண்டும்."

அருணாசலம் செட்டியார்.—"அதிலும் இன்னொரு விஷயம் கவனிக்கப் படவேண்டும். சிறுவயதில் நல்லவனாய்த் தோற்றுகிற பையன் வயது வந்தவுடன் சேர்க்கை வாசனையால், அல்லது, இளமையில் மறைந்துகிடந்த துஷ்ட

தன்மைகள் பருவகாலத்தில் வெளிப்படுவதால், அல்லது, முன்னில்லைமைக்குப் பின்னில்லைமை எதிர்பாராவண்ணம் சிறப்புற்றிருப்பதை உணர்ந்து மமதை கொள்வதால் அல்லது இம்மூன்று காரணங்களும் ஒருங்கே சேர்ந்துகொள்ளுவதால், சிறு பிராயத்தில் அவர்களிடம் காணப்பட்ட நற்குணங்களுக்கு முற்றும் மாறான துர்க்குணத்தினராக மாறி விடுகின்றனர். எவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் ஒருவர் ஒரு பையனைத் தெரிந்துகொண்டிருந்தாலும் இந்தக் காரணங்களால் அப்படிப்பட்ட தெரிந்து கொள்ளுதல் எதிர்பார்த்தபடி நற்பலன்களைத் தருவதில்லை. மேலும் சொந்தப்பிள்ளையா யிருந்தால் அவன் பரமதுஷ்டனாயிருந் தாலும்" அவனுடைய நடத்தையை பெற்றோர் அன்போடுதான் நோக்குவார்கள். ஆனால் சுவீகாரபுத்திரனா யிருந்தால் அவனுக்கும் அவனது சுவீகாரப் பெற்றோருக்கு முள்ள உறவு ஏறக்குறைய ஒரு மாமிக்கும் மருமகளுக்குமுள்ள பந்தத்துவத்தையே ஒத்திருக்கும். தகப்பனார் மனோவிசாலமுள்ளவரா யிருக்கலாம்; அவர் மனித குணத்தின் தன்மையை உணர்ந்து காரியங்களுக்குத்தக்கவாறு நடந்து கொள்ளக்கூடும். ஆனால் தாயார் அப்படி இருக்க முடியுமா? தன் உதிரத்தில் உதிரமும், மாமிசத்தில் மாமிசமுமாய் உற்பவித்த தன் சொந்த புத்திரன் எத்தனை தவறுகள் இழைத்தபோதிலும் அத்தனையையும் தனது எல்லையற்ற அன்பினாலே மறைத்து, அவனைச் சர்வகுண பூஷணனாகத் தன் மனோவெளியின்கண்ணே கண்டுகளிக்கக்கூடிய ஒரு தாய் அவ்விதமே தனது மஞ்சணீர் புத்திரனையும் எண்ணமுடியுமோ? அண்ணா, நீங்களே யோசித்துப் பாருங்கள். மனித சுபாவத்தைநான் அறிந்த

வரையில் அது முடியாதென்றே என் மனதில் படுகிறது. ஆகையால் இந்த விஷயங்களையெல்லாம் ஆறத்தீரயோசித்து நடவடிக்கை செய்வதுதான் நல்லது.''

இராமநாதன் செட்டியார்—சரி, நமது சமுகத்தில் சுவீகாரம் செய்வது வழக்கமாயிருக்கிறதே. அப்படி சுவீகாரம் செய்தவர்களெல்லாரும் கெட்டுப்போய் விட்டார்களா? சொந்தப்பிள்ளைகளும் துஷ்டர்களாகமாறி பெற்றோருக்கு இன்னல் விளைப்பதில்லையா?''

அருணாசலம் செட்டியார்.—''ஆமாம், அப்படியுமுண்டு; எதற்கும் தீர ஆலோசித்து செய்வது நல்லதென்பதுதான் எனது கருத்து.''

இராமநாதன் செட்டியார்.—''ஆலோசித்துத் தான் செய்யவேண்டும். இப்படி ஒரு எண்ணம் சில நாட்களாக என் மனதில் தோன்றிக்கொண்டிருக்கிறது. அவ்விஷயமாய் உன்யோசனையைத் தெரிந்துகொள்ளுவதற்காகவே அதை இப்பொழுது வெளியிட்டேன்.''

மேற்கண்ட சம்பாஷணை நடந்த ஒரு வாரத்துக்குப் பின் இராமநாதன் செட்டியாருக்கு ஜுரம்கண்டு நாலைந்து நாட்களாக படுக்கையில் இருந்தார். தேவகோட்டையில் பெயர் பெற்றவரான ஒரு வைத்தியர் வந்து மருந்துகொடுத்தார். வியாதி சுகமாகவில்லை. ஜுரம் ஆரம்பித்த ஆறும் நாள் இரவு பத்துமணி சமயத்துக்கு ''தண்ணீர்'' என்று அவர் கூப்பிடுகிற சத்தம் கேட்டு அப்பொழுது தான் படுத்துக்கொண்ட செல்லம்மை எழுந்துபோய் ஒரு லோட்டாவில் சிறிது வெந்நீர் கொண்டுவந்தாள். அவள் இராமநாதன் செட்டியார் படுத்திருந்த கட்டிலுக்குச் சமீபித்தபொழுது அவருக்கு பிராணன் பிரிகிறதருணமா

யிருந்தது. அதைக்கண்டு செல்லம்மை அஞ்சிப் பயந்து கையில்கொண்டுவந்த லோட்டாவை தடாரென்று தரையில் போட்டுவிட்டு ஓவென்றலறிப் பிரலாபித்தாள். மறு நிமிஷத்திலே இராமநாதன் செட்டியார் உயிர் துறந்தார்.

மூன்றுவது அத்தியாயம்

புத்திர சுவீகாரம்.

இராமநாதன் செட்டியார் வீட்டில் அழுகுரல் உண்டானதைக்கேட்டு அக்கம் பக்கத்தார், உற்றூர் உறவினர் எல்லாரும் வந்துசேர்ந்தார்கள். இராமநாதன் செட்டியார் மரித்த செய்தி ஊரெங்கும் பரவிவிட்டது. பெண்டுகளெல்லாரும் செல்லம்மையைக் கட்டி அழுவதற்கு தயாராக வந்தார்கள்.

இராமநாதன் செட்டியாரின் உடலிருந்த படுக்கைக்குப்பக்கத்திலே செல்லம்மை விழுந்துவிழுந்து அலறினாள். தலையிலடித்துக்கொண்டு ஒப்பாரிசொல்லிக் கதறினாள். இதற்குள் பல ஸ்திரிகள் வந்து அவளைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர்களைக்கண்டதும் செல்லம்மையின் அழுகை அதிகரித்தது. தரையில் விழுந்து கடகடவென்று புரண்டாள்.

இவ்வளவு பிரயாசப்பட்டு அழுதபோதிலும் செல்லம்மையின் உள்மனதிலே துக்கக் குறிகள் காணப்படவில்லை. தலைவன் போய்விட்டதால் தலைவிக்கு ஏற்படக்கூடிய துயரம்-ஈடுசெய்ய முடியாத ஒரு அபார நஷ்டத்தாலுண்டாகும் ஏக்கம்—மங்கலநாளைத் துறக்க நேர்ந்த ஒரு மங்கைக்குள்ள மனச்சோர்வு ஆகிய மாறுதல்கள் அவளுடைய உள்மனதில் தோன்றவில்லை.

"ஒப்புக்கு அழுகிறேண்டி ஊரார் சிரியாமல்
இப்பவே பெண்டுகளா, என்னை அமர்த்துங்களேன்"

என்று சில ஸ்திரிகள் கேலியாகச் சொல்லிக்கொள்ளுவது போல, மேற்கண்ட அழுகையும் பிரலாபமும் வெளிமன தின் அசைவுகளாக மாத்திரம் இருந்தன. வெளிமனம் பகுத்தறிவுள்ளதாய், ஐம்புலன்களையும் தனது மந்திரிமா ராக வைத்து தர்பார் நடத்திக்கொண்டிருக்கும். அது உல கப் போக்குக்கும், சந்தர்ப்ப விசேடத்துக்கும் தக்கவேடங் களைத் தாங்கி நடிக்கும் இயல்புடையது.

வெளிமனதுக்கு ஆதாரமாகவிருக்கும் அபாரசக்தி நிறைந்த மனதின் பாகத்தையே உள்மனம் என்று மனோ தத்துவ சாஸ்திரிகள் வேறுபிரித்துக் கூறுவர். வெளிமன தின் சாதாரண கோலாகலங்களும் வியவகாரங்களும் உள் மனதைப் பாதிக்கமாட்டா. என்றாலும் உள்மனதின் பலத் தைக் கொண்டுதான் வெளிமனம் இந்த வியவகாரங்களை யெல்லாம் நடத்திவருகிறது. எந்தக் குணமாவது ஒரு வனுடைய வெளிமனம் முழுவதும் பரிணமித்து, அதன் அடிப்படையாயிருக்கும் உள்மனதுக்குள்ளும் சுவறிச் செல்லக்கூடுமாயின் அவனில் அந்தக் குணம் தலைசிறந்து விளங்கக்காணலாம். உதாரணமாக, அன்பெனுங் குணம் ஒருவனுடைய வெளிமனதைக் கடந்து உள்மனதிலும் வியாபித்து விட்டால் அவன் அன்பின் சொரூபியாய் விளங்குவான். காதலும் அப்படியே. இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு மடமாதும் ஒருவனும் தங்கள் அடி மனம்கண்ட பேரிளங்காதலால் இழுப்புண்டு நின்றால் மாத் திரமே அவ்வில்வாழ்க்கை சிறப்புற்று விளங்கும். புருட

பாரியர்கள் இணைபிரியாது இல்லறம் நடத்தாமல், அடிக்கடி நெடுங்காலம்வரை ஒருவரை யொருவர் பிரிந்திருப்பார்களாயின், அன்னவருக்குள் உள்மனங்கண்ட உண்மைக் காதல் தழைத்தெழும்பாது; அன்பு துளிர்க்காது. அதற்கு மாறாக வேண்டாவெறுப்பும், நிர்விகற்ப பான்மையுமே அவர்களின் இல்வாழ்வை இழிவு படுத்தி நிற்கும். இதற்குத் திருஷ்டாந்தங்கள் நம் வைசியமண்டலத்தில் அபூர்வமல்ல.

செல்லம்மை விஷயத்திலும் இப்படியே நடந்திருந்தது. இராமநாதன் செட்டியார் அடிக்கடி தன் மனைவியைப் பிரிந்து வருடக்கணக்காய்ப் பிரதேசங்களில் வசித்து வந்ததால், அவர்களுக்குள் அன்பு உண்டாக மார்க்கமில்லாமற் பேயிற்று. ஆகையால் கணவன் மரித்தும் போனதைப்பற்றி செல்லம்மை உண்மையில் துக்கப்படவில்லையேயென்பது ஆச்சரியப் படத்தக்கதன்று.

அருணாசலம் செட்டியாரும் தமையன் இறந்துபோனதுக்கத்தை ஆற்றமாட்டாமல் அலறிவிழுந்து வெருவாய்ப் பிரலாபித்தார். அவர் தரையிலே தலையை மோதித் தம்மைக்காயப்படுத்திக் கொள்ளாதபடி இரண்டுபேர் அவரைப் பிடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அவ்வளவு அளவுகடந்த விசனத்தை அவர் வெளிப்படுத்திக் கொண்டார்.

கடைசியில், இராமநாதன் செட்டியாரின் உடல் தகனிக்கப்பட்டு, மரண சடங்குகள் கிரமப்படி நிறைவேற்றப்பட்டுத் தீர்ந்தன. அருணாசலம் செட்டியார் குடும்பத்தலைமையை வகித்து குடும்பகாரியங்களை நடத்திவந்தார். இவருக்கும் இளையவரான வீரப்பன் செட்டியார் ஏற்கனவே

மரித்துப் போனார். அவருக்கு ஓர் ஆண் குழந்தை யிருந் தது. அந்தப்பிள்ளையுடன் அவர்மனைவி, அருணாசலம் செட்டியார் இருந்த பொதுவீட்டிலே வசித்துவந்தாள். அந்தக்குடும்ப காரியங்களை அருணாசலம் செட்டியாரே பார்த்து வந்தார். எனவே இப்பொழுது அவர் மூன்று குடும்பங்களுக்குத் தலைவனாயிருந்தார். அந்த உணர்ச்சி அவருக்கு மனோகாமா யிருந்தது.

இராமநாதன் செட்டியார் ஏறக்குறைய இரண்டு லட்ச ரூபாய்க்கு நிலங்கள் வாங்கிப்போட்டிருந்தார். உண்மையில் அவை அவ்வளவு பெறக்கூடியனவல்ல. எல்லாங்கூடி ஒரு லட்ச ரூபாதான் விலைபெறும். லேவாதேவித்தொழிலில் நிரம்பின சாமர்த்தியமுள்ள இராமநாதன் செட்டியார் இப்படி ஒற்றைக் கிரட்டிப்பாய் விலைகொடுத்து நிலம் வாங்குவானேன் என்று எல்லாருக்கும் ஆச்சரியம் உண்டாகக்கூடும். யாராவது செட்டியார் நிலம் வாங்கப்போகிறார் என்று கேள்விப்பட்டவுடனே நிலங்களெல்லாம் முன்னையைவிட இருமடங்கு அல்லது மும்மடங்கு விலையுயர்ந்து போவது நம் வைசியமண்டத்திலே சகஜமாய்ப் போய்விட் டிருக்கின்றது. இதை வைசியமண்டலப் புதுமைகளில் ஒன்றாகவே சொல்லவேண்டும்.

நல்லநிலமோ, தரிசுக்காடோ, ஏதேனும் பயிர்விளையுமோ அல்லது முள்ளும் சப்பாத்தியுந்தான் வளருமோ என்று ஒரு சிறிதும் விசாரியாமலே அனேக தனவான்கள் கண்ணைமூடிக்கொண்டு கண்ட நிலத்தையெல்லாம் வாங்கி விடுகிறார்கள். என்ன நோக்கத்துடன் அப்படிச் செய்கிறார்களென்று தெரியவில்லை. “எங்களுக்கும் போதுமான பூஸ்திதி இருக்கிறது” என்று கம்பீரமாய் மற்றவர்களிடம்

சொல்லிக் கொள்வதற்காக இருக்குமோ? ஒருவேளை இருக்கலாம். அப்படி யிருந்தாலுந் தானென்ன; பாடுபட்டுத் தேடிய பணத்தை யள்ளிக்கொடுத்துக் காடுமேடான தரிசுக்காடுகளை வாங்குவது அவசியமா? விலையாகக்கொடுத்த முதலின் வட்டிக்காவது லாபங்கொடுக்கக்கூடிய ஆற்றுப் பாசானத்திலுள்ள செழிப்பான நிலங்களை வாங்கலாமே. இதையுணர்ந்த அனேகர் பர்மாவில் நல்ல நிலங்கள் வாங்கி யிருக்கின்றனர்.

இராமநாதன் செட்டியார் இப்படியெல்லாம் சிரிதேனும் எண்ணமிடவில்லை. தான் ஒரு பூஸ்திதிவந்தன் ஆக வேண்டுமென்று அவர் சிந்தையில் நினைத்தார். கையில் வேண்டிய பணமிருந்தது. விரும்பிய பக்கத்தில் நிலங்கள் விற்பனைக்குக் காத்துக்கொண்டிருந்தன. இன்னொரு செட்டியார் அதை வாங்கப் பிரயத்தனஞ் செய்துகொண்டிருப்பதாக வதந்தி உலாவிற்று. நிலச்சொந்தக்காரன் கிரமமாக விலையை உயர்த்திச் சொல்லிக்கொண்டிருந்தான். இனிமேலும் தாமதித்தால் நிலம் மற்ற செட்டியாருடைய ஆதீனத்தி லாகிவிடும்போலத் தோன்றினது. உடனே இராமநாதன் செட்டியார் கேட்ட விலையைக்கொடுத்து நிலத்தை வாங்கிவிட்டார்.

அருணாசலம் செட்டியார் தம் தமையனாரின் சொத்துகளைப்பற்றி பரிசோதனைசெய்து வருகையில் நிலவிஷயமாய் இப்படி வீண்பணவிரயம் நேரிட்டதைப்பற்றி மிகவும் சஞ்சலமடைந்தார், நிற்க.

ஒருநாள் அருணாசலம் செட்டியார், தன் தமையனார் ஓர் புத்திரனை சுவீகாரஞ் செய்துகொள்ள நினைத்ததையும் தான் அந்த நினைவைத் தனது சாமர்த்தியத்தினால் மாற்றி

விட்டதையும்பற்றி சிந்தித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அவர் மனைவி வந்து பக்கத்தில் இருந்துகொண்டு,

"என்ன யோசனை செய்கிறீர்கள்?" என்றுகேட்டாள்.

அருணாசலம் செட்டியார் தாம் நினைத்துக்கொண்டிருந்ததை வெளியிட்டார்.

"அண்ணன் தீர்மானத்தை மாற்றிவிட்டீர்கள். ஆனால் இப்பொழுது அண்ணியாரின் நினைவு எப்படியிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?"

"ஏன், எனக்குத் தெரியாதே. அண்ணி என்ன நினைத்துக்கொண் டிருக்கிறாளென்று உனக்குத் தெரிந்ததைச் சொல்லு கேட்கட்டும்" என்றார் அருணாசலம் செட்டியார்.

"கல்யாணியின் மகன் சுப்பய்யாவைச் சுவீகாரம் செய்யவேண்டுமென்று அவளுக்குப் பிரியமிருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது சிலநாட்களாக இந்த விஷயமே அவளுக்கு முக்கிய பேச்சாயிருக்கிறது. மேல்வீட்டு உமையாள் தான் இதற்கெல்லாம் கார்பார் நடத்துகிறாள். முதவிலே செல்லம்மை தத்தெடுக்கிறதைப்பற்றி விரும்பவே யில்லை. ஆனால் நேற்றிலிருந்து அவள் மனம் மாறியிருக்கிறதுபோல் தெரிகிறது. இராத்திரியே இதைப்பற்றி உங்களிடம் சொல்லவேண்டுமென்றிருந்தேன். சாப்பிட்டதும் நீங்கள் அண்ணாமலைச் செட்டியார் வீட்டுக்குபோய் வெகுநேரஞ்சென்று திரும்பினீர்கள் அதனால் சாவகாசப் படவில்லை."

"ஓகோ, இந்த விஷயத்தோடு என்மேல் ஓர் பிராதும் கலந்து வருகின்றதோ?" என்றார் செட்டியார்.

"என்ன பிராது?"

"நான் நேற்றிரவு அண்ணுமலைசெட்டியார் வீட்டுக்குப்போய் நேரந்தாழ்த்து வந்தேனென்றது பிசாது தானே" என்று செட்டியார் சொல்ல,

அவர் மனைவி குறுநகை செய்தனள்.

"சரி, புத்திரசுவீகாரம் செய்யவேண்டு மென்று அண்ணி நினைத்துக்கொண்டிருக்கிறாள். இதை நான் எதிர்பார்த்தவன்தான். ஆனால் அதை தடுப்பது எப்படி என்று எனக்குத் தோன்றவில்லை." என்றார் அருணாசலம் செட்டியார்.

"தடுக்கமுடியுமா? ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்களே. ஜாதிவழக்கத்தை தடுப்பது எப்படி? உங்கள் தமையன் பாடுபட்டுத் தேடினசொத்து, கல்யாணிமகன் சுப்பய்யாவுக்குக் கொடுத்துவைத்திருக்கிறது. அதற்கு யாரென்ன செய்வது?" என்றாள் அவருடைய மனைவி.

அப்பொழுது யாரோ கதவு தட்டுகிற சத்தம் கேட்டது. அருணாசலம் செட்டியார் போய்க் கதவைத் திறந்து பார்க்க, வந்தவர் அண்ணுமலை செட்டியாராயிருந்தால், அவரை உவப்புடன் வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டுபோனார்.

"நல்ல சமயம் வந்தீர்கள். நான் இப்பொழுது உங்களைப் பார்க்க வரவேண்டு மென்றுதான்" எண்ணிக்கொண்டிருந்தேன் என்று அருணாசலம் செட்டியார் சம்பாஷணையை ஆரம்பித்தார்.

"ஏதாவது விசேஷமுண்டோ?" என்றார் வந்தவர்.

"விசேஷமுண்டுதான்"

"என்ன விசேஷம்?"

"என் அண்ணி ஒரு பையனைச் சுவீகாரஞ் செய்ய எண்ணமிட்டுக்கொண்டிருக்கிறாளாம்"

"அப்படியா? இது எப்பொழுது முதல்?"

"சென்ற இரண்டு மூன்று தினங்களாக பேச்சு நடந்துதாம். நேற்றுமுதல் சுவீகாரம்செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானந்தோன்றியிருக்கிறதாகத் தெரிகிறது."

"அப்படியா? உமதுயோசனை என்ன?"

"எனது யோசனையா? எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. அதனால்தான் உங்களிடம் வரலாமென்றிருந்தேன் அதற்குள் நீங்களும் வந்துவிட்டீர்கள். ஏதாவது யோசனை—யுக்தி—தந்திரம், நீங்கள் தான் சொல்லவேண்டும்" என்று அருணுசலம் செட்டியார் கேட்டார்.

"இதுவென்ன? யோசனைகளும் தந்திரங்களும் என் வீட்டில், பெட்டியில் நிறைத்துவைத்திருக்கிறேனு, நீர் கேட்டகேட்டமாதிரி அள்ளிக்கொடுப்பதற்கு?

"அல்ல, இவ்விஷயத்தில் நான் எப்படி நடந்துகொள்வதென்று எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் இந்த விஷயங்கள் என்னைப் பாதிப்பவைகளாயிருக்கின்றன. அண்ணி சுவீகாரம்செய்யாமலிருந்தால் அவளுடைய ஜீவகாலத்துக்குப்பின் என் தமையன் சொத்தெல்லாம் எனக்குக் கிடைக்கும். சுவீகாரம் செய்துகொண்டால் சொத்து முழுவதும் சுவீகார புத்திரனுகிய அன்னியப் பையனுக்குச் சேர்ந்துவிடுகிறது. இதைப்பற்றி யோசிக்கும்பொழுது என் வயிறு பற்றிக்கொள்ளுகிறது. ஆத்திர முண்டாகிறது. அதனுல் அமரிக்கையாயிருந்து ஆலோசனைசெய்ய என்னுல் முடியவில்லை. உங்களை இவ் விஷயங்கள் பாதிக்காதாகையால் நீங்கள் மனங்கலங்காமல்

ஆலோசனைசெய்து தக்க உபாயமொன்று கண்டுபிடித்துச் சொல்லலாம்." என்றார். அருணாசலம் செட்டியார்.

அண்ணாமலைசெட்டியார் சற்று நேரம் யோசனை செய்தபின் சொல்லுவார்.—"செல்லம்மைதன் தீர்மானத்தை மாற்றும்படி நீர் செய்யக் கூடுமானால் நல்லது. அப்படிச் செய்வது முடியாதானால் சுவீகாரத்தை தடுக்க வழியில்லை. அண்ணன்சொத்தை அடையலாமென்கிற ஆசையைத்தூர விட்டுவிட வேண்டியதே. ஆனால் ஒன்று செய்யலாம். செல்லம்மையின் மனோபாவத்தை அனுசரித்து நடப்பதாக நடித்துக் கொள்ள வேண்டும். சுவீகாரத்தையும் மனங்கோணாமல் நடத்தி வைக்கவேண்டும். இப்பொழுது உமது தமையன் குடும்பகாரியங்களை நீரே நடத்தி வருகிறீரல்லவா? சுவீகாரபுத்திரன் வயதுக்கு வருமுன் அனுசரணையாயிருந்து உம்மால் இயன்ற வரையில் சுற்றிவிடலாமே. அதற்குத் தந்திரமும் வேண்டாம், மந்திரமும் வேண்டாம். சர்வ காரியங்களையும் பல வருடங்களுக்கு நீரே மேற்பார்த்து வருவீராதலால் உமது சூழ்ச்சிகளுக் கேற்ற சந்தர்ப்பங்கள் எத்தனையோ உண்டாகக்கூடும். இதுதான் எனக்குத் தோன்றுகிற சிறந்த உபாயம்" என்றார்.

அருணாசலம் செட்டியார்.—"நீங்கள் சொல்வதைப் பற்றி நான் யோசித்துப் பார்க்கவேண்டும்" என்று சொல்லி அப்படியே யோசனை செய்பவர்போல மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

இந்த சம்பாஷணை நடந்த தினத்துக்கு சில நாட்களுக்கு முன் ஒருநாள் செல்லம்மை தன்வீட்டு இரண்டாங் கட்டுத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டு இருந்தாள். அவளுடைய கண்களில் ஒருவித

தூரப்பார்வை காணப்பட்டது. இரண்டொரு பெரு மூச்சுகள் விட்டாள், ஏதோ தன் ஜீவிய விஷயமாய் எதிர் காலத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பவள்போல அவள் காணப்பட்டாள்.

அப்படி யிருக்கையில் அவ்வூர்க் கார்பார் ஆச்சிகளில் ஒருத்தியான உமையாச்சி வெகு அவசரமாக வந்து செல் லம்மையின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அவள் வழக் கப்படி, ஊர்ப்புராணிகளை விவரித்தபின் "என்னசெல்லி நீ பேசாது. உட்கார்ந்திருக்கிறாயே. இப்படி வெறுமே இரு ந்தால் உனக்கு ஆவுதணைக்கு ஆள்வேண்டாமா? ஒரு பையனைச் சுவீகாரம் செய்கிறதுதானே," என்றாள்.

"இன்னும் அவ்விஷயமாய் நான் நினைக்கவேயில்லை" இதைக் கேட்டதும் உமையாச்சி தன்முகத்தை ஒருமாதிரி யாகச் சுளித்துக்கொண்டு ஏதோ விசேஷமான சங்கதி சொல்லப் போகிறவளைப்போல செல்லம்மை பக்கத்தில் நெருங்கி அவள் காதோடு காதாய்ச் சொல்லுகிறாள்.—

"என்னடீ செல்லி, சூதுவாதில்லாத சிறுகுழந்தை மாதிரி இருந்து வருகிறாய். உன் கொழுந்தனுடைய யோ சனைகள் உனக்குத் தெரியுமா? தமையன் உயிரோடிருக் கும்பொழுதே ஒரு பையனைச் சுவீகாரம் எடுக்கவேண்டு மென்று அவர் சொல்ல இவன் வேண்டாமென்று தடுத்து விட்டானும். இனி நீ ஒரு மகனை தத்தெடுக்க வேண்டு மென்றாலும் அதையும் ஆட்சேபனை செய்யவேண்டுமென் றே நினைத்துக்கொண் டிருக்கிறான். உனக்கு பிள்ளையில் லாததால் நீ சுவீகாரம் எடுப்பதையும் தடுத்துவிட்டால் சொத்தெல்லாம் அவனுக்கு ஆதினமாகி விடுமல்லவா? அதனால்தான் இந்தமாதிரி யெல்லாம் அவன் யோசனை

செய்துகொண்டிருக்கிறான். நீ ஒன்றையும் கவனியாமல் சும்மா விருக்கலாமா?" என்றாள்.

செல்லம்மைக்கு ஏற்கனவே இப்படிப்பட்ட சந்தேகம் மனதில் தோன்றியிருந்ததென்றாலும், உமையாளின் பேச்சு அவளது மனச்சஞ்சலத்தை அதிகப்படுத்திற்று.

செல்லம்மை.—"நான் சுவீகாரம் எடுப்பதை அவர் தடுக்க முடியுமா?"

உமையாள் — "இப்பொழுது அவர்தானே உங்கள் குடும்பத்துக்கு மேலாளாக இருக்கிறார். அவர் பேச்சுக்கு மதிப்பு உண்டல்லவா? அவர் வேண்டுமென்று தடுத்தால் என்ன செய்கிறது?"

செல்லம்மை.—"என்ன செய்கிறதா? தத்தெடுக்கிறதுதான் நம் ஜாதியிலே வழக்கமா யிருக்கிறதே. அப்படியிருக்க இவர் தடுக்க முடியுமா? என்னைப்போல எத்தனையோபேர் தத்தெடுத் திருக்கிறார்களே."

உமையாள்.—"நீ சும்மா விருந்தால் ஒன்றும் வெளிப்படாது. நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். நீ ஒரு பையனைச் சுவீகாரம் செய்யப் பிரியப்படுவதாகச் சொல்லு. அதற்குமேல் என்ன நடக்கிறதென்று பார்ப்போம்"

செல்லம்மை.—"அப்படித்தான் செய்யவேண்டும். ஆனால் எந்தப்பையனைக்குறித்துச் சொல்வதென்று முதலில் தீர்மானிக்க வேண்டுமே."

சம்பாஷணையை இவ்விதமாகத் திரும்பவேண்டுமென்று முதலிலிருந்தே சமயம் பார்த்துக் கொண்டிருந்த உமையாள் சொல்லுவாள். "அதற்கென்ன கஷ்டம். நமது கல்யாணி மகன் சுப்பய்யா இருக்கிறானே அவனுக்கு என்ன குறைவு? அவனைப்பற்றி ஏற்கனவே உனக்கு

நோக்க முண்டல்லவா? அவனைச் சுவீகாரம் செய்துகொள்வதாகச் சொல்லலாமே'' என்றாள்.

செல்லம்மை.—''ஆம் நான் இதைப்பற்றி யோசித்துப்பார்க்கிறேன். உமையாச்சி நீ இப்படி என் விஷயத்தில் கவலை யெடுத்துக்கொண்டதை நான் ஒருநாளும் மறவேன்''.

இப்படிப் பின்னும் சிலநேரம் பேசிக்கொண்டிருந்தபின் அவ்விருவரும் பிரிந்தனர். உமையாள் நேராகக் கல்யாணியின் வீடுசென்று தான் விதை விதைத்திருப்பதாகவும் சீக்கிரத்திலேயே முளை வெளிக்கிளம்பி விடுமென்றும் கூறி மேற்கண்ட சம்பாஷணையைப் பற்றி விவரித்துச் சொன்னாள். உமையாள் எதிர் பார்த்தபடியே இரண்டொரு வாரங்களுக்குள் அவள் விதைத்த விதை முளைத்து வெளிப்பட்டது.

செல்லம்மை தான் ஒரு மகனை சுவீகாரம் செய்ய விரும்புவதாகச் சொல்லிக் கொண்டாள்.

அந்தப்பேச்சு அருணாசலம் செட்டியாருக்கு எட்டினபொழுது அவர் செல்லம்மையிடம்பேசி அவ்வித நினைவை மாற்றிவிடத் தம்மாலான முயற்சி செய்தார். ஆனால் அவர் எண்ணத்துக்கு மாறாக, அவருடைய பேச்சினால் செல்லம்மையின் தீர்மானம் பலமடைந்து பிடிவாதமாக மாறிவிட்டது.

அப்பொழுதுதான் புத்தியீனமாய் தாம் நடந்துவிட்டதாக அருணாசலம் செட்டியார் மனதில் பட்டது. ஆனால் நடந்துபோன காரியத்தை மாற்றுவது எளிதா? இனி செல்லம்மையின் தீர்மானத்துக்குத் தலைசாய்ப்பதே தக்க உபாயமென்று நினைத்தார். சிலநாட்களுக்குள் கல்யாணி

யின் புத்திரன் சுப்பய்யா செல்லம்மையின் சுவீகார புத்திரன் ஆனான்.

நான்காவது அத்தியாயம்.

கலியாணப் பேச்சு.

மூந்தின அத்தியாயத்தில் விவரிக்கப்பட்ட சம்பவங்கள் நடந்து பத்து வருடங்கள் ஆயின. செல்லம்மையின் சுவீகார புத்திரனாகிய சுப்பையா பதினெட்டு வயதுள்ள வாலிப குமாரன் ஆகிவிட்டான். செல்லம்மை அவனை வெகு செல்வமாக வளர்த்து வந்தாள். "வெளியே போகாதே மகனே வெய்யல் அடிக்கும். கொல்லைப்பக்கம் போகாதே கோழி கூவும். அங்கே போகாதே எலி வரும். இங்கே நில்லாதே எறும்பு ஊறும்." என்று சொல்லிப் பையனை வெகு பதனமாகக் காத்து வந்தாள். பகல் வேளையில் வெளிக்கதவை யாரேனும் தட்டினால் சுப்பையா துணிந்துபோய்க் கதவைத் திறக்கமாட்டான். செல்லம்மையை ஒரு பெரிய அரணாக நினைத்து அவளுக்கு பின்னாலேபோய் மறைந்து கொள்வான். செல்லம்மையாவது வேறு யாராவது போய் கதவைத்திறந்து தட்டின ஆளுக்கு பதில் சொல்லி அனுப்பின பின்னர் தான் மோசமில்லை என்று தெளிந்து முன் வாயில் பக்கம் காலெடுத்து வைப்பான். புத்தியீனமான 'செல்ல' வளர்ப்பினால் பையனின் நெஞ்சில் வீரகுணம் தழைக்கவில்லை; பயங்காளியாக வளர்ந்திருந்தான். ஆனால் செல்லம்மையிடத்தில் அவன் காட்டிய துடுக்குத் தனத்துக்கும், இடும்புக்கும் எல்லையே கிடை

யாது. பிள்ளையாசையினால் செல்லம்மை அவளைப் பிரிய மாய் நடத்தவே பையன் தாயின் இளக்காரங்கண்டு அவ ளைத் தன் மனம் போல அல்லற்படுத்தி வந்தான். கல்வி வாசனையற்ற செல்லம்மைக்கும் பையனை கண்டித்து நற் புத்தி புகட்டி சீராய் வளர்க்கத் தெரியவில்லை. சொந்தத் தாய் வீட்டிலிருக்கும்பொழுது சுப்பய்யா ஒழுங்காக பள் ளிக்கூடத்துக்குப் போய் மற்றப் பையன்களைப்போல பாடங்களை நன்றாய் படித்து வந்தான். ஆனால் சுவீகார புத்திரனாக செல்லம்மை வீடு வந்தபின் அவனுக்குப் பள் ளிக்கூடமென்றால் வெறுப்பாய் விட்டது. உபாத்தியாயர் ஏதாவது தப்புக்கண்டு அடித்தாரானால் அதைப்பற்றி செல்லம்மையினிடம் பெரிய முறைப்பாடு செய்து விட்டு அடிபட்ட வருத்தம்தீர இரண்டொரு நாட்கள் வேலை நிறுத்தம் செய்துகொள்வான். அதனிடையில் செல்லம்மை உபாத்தியாயர் மீது படையெடுத்துச் சென்று பெரும் போர் புரிந்து இனிமேல் பையனை அவ்வாறு அடிப்பதில்லை யென்று உபாத்தியாயரிடம் உடன்படிக்கை செய்து கொண்டுதான் திரும்புவாள். இப்படி இரண்டொரு தடவை நடக்கவே உபாத்தியாயர் மனஞ்சலித்து சுப்பய் யாவைக் கண்டிப்பதை அறவே நிறுத்தி விட்டார். அதன் பின் பையன் தன்னிஷ்டம்போல பாடங்களைப் படித்து வந் தான். பாடம் படிக்காமல் ஆடித்திரிவது தான் அவனுக்கு இஷ்டமாகையினால் அவனுக்கு படிப்பு ஏறவில்லை என்பது சொல்லாமலே விளங்கும். எனவே வைசியப் பையன்களுக் குச் சாதாரணமாகப் பயிற்றுவிக்கப்படுகிற கல்வியில் கூட அவன் தேர்ச்சி பெற்றிருக்கவில்லை.

இப்படி வளர்ந்து வரும் நாளில் சற்றுப் பெரிய

பையன் ஆனவுடனே சுப்பய்யா தன்னிலும் பெரிய வாலி பர்களுடன் கூடிக்கொண்டு வண்டி விரட்டுதல், பைசிக்கில் ஏறிச் சவாரி விடுதல் முதலிய விளையாட்டுகளில் பயிற்சி பெற்று வந்தான். சீட்டுக் கச்சேரிகளில் போய் உட்கார்ந்துகொண்டு அங்கு நடைபெறும் ஆட்டங்களைக் கூர்மையாய்க் கவனித்து அந்த விளையாட்டுக்கு வேண்டிய ஞானத்தை கிரகித்துக் கொள்வதில் மிகவும் சுறுசுறுப்புக் காட்டினான். வருடங்கள் கழிந்து வயதும் பதினெட்டு ஆகி விட்டது.

இப்பொழுது செல்லம்மை தன் சுவீகார புத்திரனுக்குக் கலியாணம் செய்து கண்டு களிக்க வேண்டுமென்று சிந்தையில் கருதினாள். அவள் பந்துக்களுள் ஒரு நல்ல பெண்ணின் உருவம் அவள் மனவெளியின் கண்ணே தோன்றுவதும் மறைவதுமாயிருந்தது. அந்தப் பெண்ணைக் குறித்து தன் உற்றார் சிலரிடத்தில் விசாரணை செய்து, அவளையே தன் சுவீகாரமைந்தனுக்கு மணமுடிக்க வேண்டுமென்று செல்லம்மை தனக்குள் தீர்மானம் பண்ணிக் கொண்டாள்.

இப்படியிருக்கையில் ஒரு நாட்காலை அருணாசலம் செட்டியார் தன் அண்ணியாராகிய செல்லம்மையைப் பார்த்துச் சொல்லுவார்.— "பையன் சுப்பையாவுக்கு வயது ஆகிவிட்டது. அவன் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டுமே. உங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

செல்லம்மை.—"நானும் பல நாட்களாக அதைப் பற்றி யோசனை செய்து உங்களிடம் சொல்லவேண்டுமென்றிருந்தேன். அதற்குள் நீங்களே சொல்லிவிட்டீர்கள்.

பையனுக்கு சீக்கிரத்தில் கலியாணம் செய்துவிட வேண்டியதுதான். பெண்ணும் நமது லட்சுமணன் அண்ணன்..." என்று மேலே சொல்வதற்குள் அருணாசலம் செட்டியார் திடீரென்று குறுக்கிட்டுச்சொல்வார்.—"பெண்ணைப் பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். ஒரு நல்ல பெண்ணைப்பார்த்து நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். முத்துப்பட்டணம் சொக்கலிங்கம் செட்டியார் மகள் இளையவள், கண்ணம்மை என்ற பெண்ணையே தீர்மானித்திருக்கிறது. பெண் நல்லபிள்ளை; குணவதி; அழகுக்கும் குறைவில்லை. சொக்கலிங்கம் செட்டியார் குடும்பம் நல்ல அந்தஸ்துள்ள குடும்பம். தமையனுருக்கு நன்ருய்த் தெரிந்தவர். தமையனுரிருந்தால் இந்தச் சம்பந்தத்தைப் பற்றிப் பெரிதும் மகிழ்வடைவார். ஆகையால் இந்தச் சம்பந்தம் நமக்குக் கிடைத்தது கணேசரது அனுக்கிரகம் என்றே நினைக்கவேண்டும். ஒருவகையில் அவர்கள் நமக்கு சற்று எட்டின பந்துக்களும் ஆகிருர்கள்" என்ருர்.

செல்லம்மை இதைக்கேட்டதும் திகைத்துப் பின்வாங்கினுள். என்ன சொல்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. நினைவு தடுமாறியது. அப்படி நிமிஷநேரம் நினைப்பற்று நின்றபின் செல்லம்மைக்குத் தன்னுணர்வு பிறந்தது. உடனே அவள்,

"முத்துப் பட்டணத்திலா பெண் பார்த்திருக்கிறீர்கள் ?" என்று கேட்டாள்.

"ஆம் முத்துப் பட்டணத்தில்தான்"

"நான் லட்சுமணன் செட்டியார் மகள் வள்ளியம்மையைப் பற்றியல்லவோ நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

சமீபத்தில் நல்ல பெண்ணிருக்க அந்தவிட்டு தூரத்துக்குப் போவானேன்? " என்று கேட்டாள் செல்லம்மை.

"க. ரு. லட்சுமணன் செட்டியார் மகளா? நல்ல இடம் தான். ஆனால் அது நமது நோக்கத்துக்குச் சரிவருமென்று நான் எண்ணவில்லை. அவர் கொஞ்சம் பெருமைக்காரர். நமது சுப்பையாவுக்கு அவர் பெண் கொடுக்க இசைவாரோ என்பதுதான் எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. ஆகையால் அப்படிப்பட்ட இடத்திலே வாய்திறந்துவிட்டு அவமானமடையக்கூடாது. உங்களுக்குப் பிரியமானால் நான் அதைக்குறித்து விசாரித்துப்பார்க்கிறேன்" என்று அருணாசலம் செட்டியார் வெகு நிதானமாகக் கூறினார்.

"நான் சாடையாகப் பெண்களிடத்தில் விசாரித்ததில் அவர் சம்மதிப்பார் என்றே சொன்னார்கள். அதைத் தான் நானும் பெரிய நினைவாக நினைத்திருக்கிறேன். எதற்கும் நீங்கள் விசாரித்துப் பாருங்கள். மற்றக்காரியத்தைப் பற்றிப் பின்பு யோசித்துக் கொள்ளலாம்."

"சரி, நான் இந்த விஷயமாய் விசாரிக்கிறேன். இது அமைந்தால் நல்லதுதான். கணேசப் பெருமான் கடாட்சம் இருந்தால் எல்லாம் முடியும்" என்று கூறிவிட்டு அருணாசலம் செட்டியார் எழுந்துபோனார். அவர் போனபின் செல்லம்மை, அங்கு உட்கார்ந்திருந்த படியே கலியாண விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள். அருணாசலம் செட்டியாரின் ஆலோசனை அவளுக்குப் பிடிக்கவில்லை. சமீபத்தில் லட்சுமணன் செட்டியார் வீட்டில் பெண்ணிருக்க, முத்துப்பட்டணத்துக்குப் பெண் தேடி போவானேன்? அதில் ஏதோ சூது இருக்கவேண்டும்

என்ற எண்ணங்கள் அவள் மனதில் எழும்பின. அதற்கு அவள் என்ன செய்யவேண்டும்? ஒருயோசனையும் தோன்ற வில்லை. கடைசியில் அவள் எழுந்து உமையாள் வீட்டுக் குச் சென்றாள்.

உமையாள் அவளைக்கண்டதும் அன்பாய் வரவேற் றுப் பக்கத்தில் உட்காரச் சொல்லி வந்த விஷய மென்ன வென்று கேட்க, செல்லம்மை சுப்பையாவுக்கு கலியாணம் செய்யும் விஷயமாய் அருணாசலம் செட்டியாரின் பேச்சை விவரித்துக் கூறி தன் கருத்தையும் வெளியிட்டாள். உமையாள் அவ்விபரங்கள் அனைத்தையும் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்து விட்டுச் சொல்லுவாள்.—"அரு ணாசலத்தின் உள்ளெண்ணத்தைப்பற்றி எனக்கு முன்ன மேதெரியும். உனக்கும் சொல்லியிருக்கிறேன். நீ சுவீகா ரம் எடுத்த விஷயமாய் அவனுக்குக் கொஞ்சமும் சம்மதம் கிடையாது. அதைத் தடுக்க வழியில்லாமையால் தான் சுவீகாரத்துக்குச் சம்மதித்தான். இப்பொழுது அவன் செய்வதெல்லாம் நயவஞ்சக நடிப்பு. பக்கத்திலே பெண் ணிருக்கும் பொழுது முத்துப்பட்டணத்தில் இவன் ஏற் பாடு செய்வதென்ன! நீ சந்தேகிக்கிறபடி திட்டமாகவே இதில் ஏதோ சூதிருக்கிறது. முத்துப்பட்டணம் முத்தம் மாளுக்கு அந்தச் சொக்கலிங்கம் செட்டியாரையும் அவர் குடும்பத்தையும் பற்றித் தெரிந்திருக்கலாம். முன்னொரு நாள் அவள் என்னிடம் அவ்விடத்திலுள்ள ஒரு சொக்க லிங்கம் செட்டியார் குடும்ப விஷயமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தாள். இது அந்த சொக்கலிங்கம் செட்டி யாராயிருந்தால் இந்தக் கலியாணத்தால் கேடு சூழுமென் பதற்குத் தடையேயில்லை" என்றாள்.

உமையாள் சொன்னதைக் கேட்கவும் செல்லம்மைக்கு பெருந்திகில் உண்டாயிற்று. "அருணாசலம் செட்டியார் சம்பந்தம் பேசியிருக்கிற சொக்கலிங்கம் செட்டியாரும், உமையாள் குறிப்பிட்ட சொக்கலிங்கம் செட்டியாரும் ஒரே ஆளாயிருந்தால்"— என்று எண்ணினாள். அதற்கு மேல் அவளுக்கு நினைவு செல்லவில்லை. "அவ்விருவரும் ஒரே ஆளாயிருந்தால்" என்ற நினைவே அவள் மனதில் மீண்டும் மீண்டும் எழும்பிற்று. தன்மைத்துனனே தன் குடும்பத்துக்கு தீங்கிழைக்க முயற்சி செய்வதைப் பற்றி அவளுக்குப் பயங்கரமுண்டாயிற்று.

"நீசொல்லுகிற சொக்கலிங்கம் செட்டியாராகத்தான் இருக்குமோ உமையாச்சி?" என்று செல்லம்மை கேட்டாள்.

உமையாள்.—"திட்டமாகச் சொல்லமுடியாது"

செல்லம்மை.—"முத்தம்மாளை விசாரித்தால் தெரியவாராதா?"

உமையாள்.—"அவளை விசாரித்துப் பார்க்கவேண்டும். நான் உடனேபோய் விசாரித்துக் கொண்டுவருகிறேன். நீ வீட்டுக்குப்போ" என்று சொல்லிக்கொண்டு உமையாள் எழுந்து முத்தம்மாள் வீட்டுக்கு சென்றாள். செல்லம்மையும் தன்வீடு திரும்பினாள்.

ஐந்தாவது அத்தியாயம்.

சதியாலோசனை.

கலியாண விஷயமாய் செல்லம்மையிடம் பேசிக்கொண்டிருந்து எழுந்துபோன அருணாசலம் செட்டியார்

தமது வீட்டுக்குள்போய் உட்கார்ந்து சிறிதுநேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்தார். அதன் பின் ஏதோ தீர்மானித்துக் கொண்டவர் எழுந்து வெளியே சென்று அடுத்த வீதியிலிருக்கும் அண்ணாமலை செட்டியார் வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினார்.

உள்ளே பட்டகசாலையில் உட்கார்ந்து வெற்றிலை மென்று கொண்டிருந்த அண்ணாமலை செட்டியார் "யார் அது" என்று அதட்டிக் கேட்டுக்கொண்டே வந்து கதவைத் திறந்து பார்த்து, அருணாசலம் செட்டியாரென்று கண்டதும் புன்னகையுடன் அவரை உள்ளே அழைத்துக் கொண்டு போனார்.

அண்ணாமலை செட்டியாருக்கு ஏறக்குறைய முப்பத்தைந்து வயதிருக்கும். உருண்டு திரண்ட தோள்களும் விரிந்த தொந்தியும், வெற்றிலையால் சிவந்த உதடுகளும், பிரகாசமான கண்களும், வசீகரமுகமுள்ளவர். யாருடனும் எளிதில் பழகிக்கொள்ளத்தக்க சக்திவாய்ந்தவர். மற்றவர்கள் காரியங்களில் தலையிட்டு செயல் செய்வதென்றால் அவருக்கு பரம ஆனந்தம். ஆனால் அவருடைய செய்கைகளில் பல வெளிப்படுமேயானால் அவை அவருக்குக் கௌரவத்தையும் புகழையும் உண்டாக்கமாட்டா. அப்படிப்பட்ட அண்ணாமலைச் செட்டியார் நமது அருணாசலம் செட்டியாருக்கு அருமைச் சிநேகிதராயிருந்தார். ஏற்கனவே அண்ணாமலை செட்டியாரைப் பற்றி ஒருவாறு நம் வாசகர்களுக்குத் தெரியும்.

அருணாசலம் செட்டியார் உட்கார்ந்த பின் "என்ன விசேஷம்?" என்று அண்ணாமலை செட்டியார் கேட்டார்.

அருணாசலம்:—"விசேஷம் சுப்பையாவின் கலியாணத்

தைப் பற்றியது தான். அண்ணியார் வேறொரு பெண்ணைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது."

அண்ணுமலை:—ஏன், முத்துப்பட்டணம் சொக்கலிங்கம் செட்டியார் மகள்மேல் இஷ்டமில்லையோ? வேறு யாரைத் தெரிந்திருக்கிறுள்?

அருணுசலம்.—"நமது லட்சுமணன் செட்டியார் மகள் வள்ளியம்மையைத் தெரிந்திருக்கிறுள். ஏற்கனவே அந்தப் பெண் விஷயமாய்ப் பெண்டுகள் மூலியமாய்ப் பேச்சு நடந்து லட்சுமணன் அதற்குச் சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது. அது நமது எண்ணத்துக்குப் பொருந்தாது. ஆகையால் இந்த ஏற்பாட்டை எப்படியாவது கலைக்கவேண்டும்."

அண்ணுமலை:—"நீர் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. 'நமது எண்ணத்துக்குப் பொருந்தாது' என்று சொல்வதின் அர்த்தமென்ன? "எனது எண்ணத்துக்குப் பொருந்தாது" என்றல்லவா நீர் சொல்ல வேண்டும்"

அருணுசலம்:—"சரி! எனது எண்ணத்துக்குப் பொருந்தாது. அதை மாற்றுவதற்கு வழியென்ன? அதைப்பற்றிச் சிந்தியுங்கள்"

அண்ணுமலை (சிரித்துக்கொண்டு):—"ஆடல் புரிவதெல்லாம் நீர்—ஆலோசனை செய்வது நானு? நன்றுயிருக்கிறது. இப்பொழுது என்ன நேரிட்டு விட்டதென்று இவ்வளவு ஆத்திரப்படுகிறீர்? செல்லம்மை லட்சுமணன் செட்டியார் மகள் வள்ளியம்மையை சுப்பையாவுக்கு கலியாணஞ் செய்ய வேண்டுமென்று விரும்புகிறுள். லட்சுமணன் செட்டியார் அந்த சம்பந்தத்தை ஆட்சேபிக்கவில்லை. இவ்வளவு தானே விஷயத்தின் உண்மை."

அருணாசலம்:—"ஆமாம். நீங்கள் விஷயத்தை வெகு திட்ட வட்டமாகச் சொல்லி விட்டீர்கள். லட்சுமணன் செட்டியார் இந்தச் சம்பந்தத்தை ஆட்சேபிக்காமலிருப்பது அல்லது அதற்கு அநுகூலமாயிருப்பது தான் எனக்கு சஞ்சலத்தைக் கொடுக்கிறது. அவர் இந்தச் சம்பந்தத்தை வெறுக்கும்படியாக என்ன உபாயம் செய்யலாம்? நான் அவருடைய பெண்ணைக் கொள்ளுவதற்காகவே பிரயாசைப்படுவதாக வெளிப்பார்வைக்குக் காட்டிக் கொள்ளுவேன். ஆனால் கடைசியில் அவர் பெண்ணைக்கொடுக்க மறுத்து விடவேண்டும்."

அண்ணாமலை.—"ஓகோ தெரிந்து கொண்டேன். உறவாடிக் குடிகெடுக்கிற வித்தை செய்யப்போகிறீர். செல்லம்மைக்கும் நல்ல பிள்ளையாக நடந்துகொள்ளவும் வேண்டும்; அவளுடைய பிரியப்படி கலியாணம் நடக்காமல் தடுக்கவும் வேண்டும் என்பது உமது விருப்பமோ. பேஷ்! நல்ல யுக்திதான்."

அருணாசலம்.—"ஆம், நீங்கள் கூறுகிறபடியே"

அண்ணாமலை.—"சரி, பையனுடைய யோக்கியதை என்ன?"

அருணாசலம்.—"பையன் செல்லம்மையின் 'செல்வ' வளர்ப்பினால் சீர்கெட்டுப் போய்விட்டான். நமது பையன்களுக்குப் பயிற்றுவிக்கப் படுகிற படிப்பில் அரைவாசிகூட அவனுக்குக் கிடையாது. சுத்தமண்டூகம். ஆனால், சூதாட்டம், வண்டி ஓட்டுதல், பைசிக்கில் விடுதல், ஊர்சஞ்சாரம் செய்தல், நாடகம் பார்த்தல் முதலான வாலிப வைசிய வித்தைகளில் அதிகக் கவனஞ்செலுத்தி வருகிறான். சூதாட்டத்தில் பணந் தோற்றுவிட்டால் செல்லம்மை அவனைக்

கோபிப்பாள். அப்பொழுதெல்லாம் நான் அவனுக்கு ஆதரவாக யிருப்பதாக நடித்து வருகிறேன், அதனால் அவனுக்கு என்மீது நல்ல மதிப்புண்டு.''

அண்ணாமலை.—''மதுவருந்தல், தாசிவீடு செல்லல் முதலிய வேலைகளில் இன்னும் இறங்கவில்லையோ?''

அருணாசலம்.—''இல்லை. இன்னும் அந்த இரண்டு தொழில்களிலும் அவன் ஈடுபடவில்லை. ஆனால் இப்பொழுது அவன் அதற்குவேண்டிய பக்குவமடைந்து வருகிறதாகச் சொல்லலாம். ஏன் அப்படிக் கேட்டீர்கள்?''

அண்ணாமலை —''தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமானதால் கேட்டேன். இப்பொழுது நான் சொல்லும் உபாயத்தைக் கவனமாய்க் கேட்கவேண்டும். பையனுடைய யோக்கியதையைப்பற்றி—திட்டமாய்க் கூறவேண்டுமானால், அயோக்கியதையைப்பற்றி—லட்சுமணன் செட்டியார் அறியும்படி செய்தல் வேண்டும். பையன் மதுவருந்துகிறான், தாசிவீடு செல்லுகிறான், மேகவியாதி, முதலிய சன்மானங்களைப் பெற்றிருக்கிறான், ஆகையால், அவனுக்குப் பெண் கொடுப்பது கூடாது; என்று லட்சுமணன் செட்டியார் மனதில் படும்படி செய்தல் வேண்டும். அவசியமானால் பையன் மதுவருந்துதலையாவது, தாசிவீடு செல்லுவதையாவது அவருக்கு கண்ணெதிரில் காட்டும்படியான சூழ்ச்சியும் செய்யவேண்டும். அப்புறம் ஆயிரம் பேர் சிபாரிசு செய்தாலும் லட்சுமணன் செட்டியார் சுப்பையாவுக்குப் பெண்கொடுக்கவே மாட்டார்.''

அருணாசலம்.—''நான் பெண் விசாரிப்போனுடைய வேஷம் போடவேண்டி யிருப்பதால், நான் இந்த உபாய

த்தை செய்யமுடியாது. நீங்களே இதைச் செய்து முடிக்க வேண்டும். என்மேல் எரிச்சல் படுவதில் பிரயோசனமில்லை.

அண்ணாமலை.—"(சிரித்துக்கொண்டு) இப்படி வருமென்று எனக்கு ஏற்கனவே தெரியும். உபாயம் சொல்லிக்கொடுத்தால் சொன்னவன்தானே அதை நடத்தித் தீர்க்கவேண்டும்போலிருக்கிறது!"

அருணாசலம்.—"அப்படியல்ல. ஒருவர் சொல்லிக் கொடுத்த உபாயத்தைச் செய்துமுடிக்க, சொல்லிக்கொடுக்கப்பட்டவனுக்கு அவகாசமில்லாதிருக்கும்பொழுது, அவன் தன் அருமைச் சிநேகிதனுடைய உதவியை நாடுவது குற்றமா? ஆனால் உபாயம் சொல்லிக்கொடுத்தவரும் அப்படிச் சொல்லிக் கொடுக்கப்பட்டவனுடைய நண்பனும் ஒரே ஆளாயிருந்தால் அதற்கு அவன் என்னசெய்ய மாட்டுவான்? ஆகையால் என்மேல் அணுவளவும் குற்றமில்லை. என்னமோ இப்படி லபித்துவிட்டது. நானென்ன செய்வேன்? நீங்கள் தான் இப்பொழுது இந்த விஷயத்தை முடித்துத் தரவேண்டும்."

அண்ணாமலை.—"சரி, இந்த விஷயத்தை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீர் என்னென்ன செய்யப்போகிறீர் சொல்லும்."

அருணாசலம்.—"நான் இந்த லட்சுமணன் செட்டியார் பெண்ணைக்கொள்ளும்படி பிரயத்தனம் செய்வதாய் நடிப்பேன். பையனுக்கு முத்துப்பட்டணம் பெண்மேல் விருப்பமுண்டாகும்படி செய்யலாமென்றும் யோசனை. மற்றக் காரியத்தை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டியது."

ஆருவது அத்தியாயம்

பேண்கள் சபை

முத்தம்மாளிடம் போய் விசாரித்து வருவதாக சொல்லிக்கொண்டு வெளிப்பட்ட உமையாள் விரைவாக நடந்து சில நேரத்திற்கெல்லாம் ஒரு மாடிவீட்டை யடைந்தாள். முத்தம்மாள் தனியாக இருப்பாள், கண்டு பேசி போன காரியத்தை முடித்துக்கொண்டு துரிதமாய் வீடு திரும்பிவிடலா மென்பது அவள் எண்ணம். ஆனுல் அவள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்த பொழுது அங்கு பட்டக சாலையிலே பத்துப்பேர் பெண்கள் சபைகூடி பிரசங்கம் செய்துகொண் டிருப்பதைக் கண்டாள். வந்தகாரியம் தாமதமாகுமே யென்றும், தான் ஒரு கார்பார் ஆச்சியா யிருந்தும் தனக்குத் தெரியாமல் அவர்கள் சபைகூடி பேசிக்கொண் டிருக்கிருர்களே யென்றும் அவளுக்கு சிறிது எரிச்சலுண்டாயிற்று. அவளைக்கண்டதும் முத்தம்மாளும், மற்ற ஸ்திரிகளும் “வா வா உமையாச்சி” என்று உவப்புடன் வரவேற்று உட்காரும்படி உபசரித்தார்கள். அவ்வுபசாரத்தினுல் உமையாள் மனதில் எழுந்த எரிச்சல் ஒருவாறு தணிந்தது. அவர்களுடன் உட்கார்ந்து கொண்டு அவர்கள் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் விஷயம் என்னவென்று கவனிக்கலாஞள். நாட்டுக்கோட்டை நகர வைசியப்பெண்கள் இரவிக்கை தரித்துக்கொள்ளலாமா என்பதைப்பற்றியே அவர்கள் தர்க்கஞ்செய்து கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் இரவிக்கை தரித்துக்கொண்டிருந்த இரண்டு சிறுபெண்கள் இரவிக்கை

போடுவது அவசியமென்று வற்புறுத்தினார்கள். அவ்விருவரும் கல்வியபயின்றுள்ள சிறுமிகளாக காணப்பட்டனர். மற்ற ஸ்திரிகளில் அனேகர் அதை ஆட்சேபித்தனர்.

இரவிக்கை அணிந்திருந்த இரங்கநாயகி என்னும் பெண் சொல்லுவாள்:-அங்கங்கள் மறைய அழகாய் உடுத்திக்கொள்ளுவதற்காகவே சேலை ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்க அரையில் மாத்திரம் சேலையைச் சுற்றிக்கொண்டு மேலாடையைக் காற்றில் பறக்கவிட்டு தேகம் முழுவதும் சரியானபடி சேலையால் மூடி அலங்காரம் செய்யத் தெரியாமல் அலங்கோலமாகத் திரிந்தலைவது அழகாயிருக்கிறதா? அப்படியானால் நமக்கும், அரையில் சுற்றிய துணி தவிர வேறு ஒருவகை உடையுமில்லாமல் காட்டில் ஜீவிக்கும் வேடுவப் பெண்களுக்கும் வித்தியாசமென்ன? இதையுணர்ந்து தான் இதர வகுப்பு பெண்கள் இரவிக்கைகளையும், சட்டைகளையும் உபயோகித்து வருகிறார்கள். நம்மவர்களும் அவர்களைப்பின்பற்றி இரவிக்கைகளை அணிந்துகொள்வதுதான் நாகரீகமும் கவுரவமுமாயிருக்கும்" என்றாள்.

கண்ணம்மாள் (எரிச்சலுடன்) "இரங்கநாயகி சொல்லுகிறது ஒவியமாகத்தான் இருக்கிறது. நாங்கள் என்ன கூத்தாடிச்சிகளா இரவிக்கை போட்டுக் கொள்ளுகிறதற்கு? இரவிக்கை போடாதவர்கள் எல்லாரும் பெண்பிள்ளைகளல்லபோ லிருக்கிறது"

இரங்கநாயகி.—"ஸ்திரிகள் மேனிமறைய உடைதரித்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக இரவிக்கை போட்டுக்கொள்வதே ஒழிய வேறொன்றுக்குமல்ல. அப்படிச் செய்வதால் ஒருவரும் கூத்தாடிச்சிகள் ஆகிவிடமாட்டார்கள். சரியானபடி சேலை உடுத்தாததால் கேவலமுண்டா

குமே தவிர, அலங்காரமாக ஆடையணிந்து கொள்ளுவதால் சிறுமை உண்டாகவே மாட்டாது."

சிட்டாள்.—"நமது சாதியிலே இரவிக்கைபோடுகிற வழக்கம் கிடையாது. இரவிக்கை சட்டை முதலியன தரித்துக் கொள்வது சாதியாசாரத்துக்கு விரோதமானது. அதென்ன! வழக்கமில்லாத வழக்கம் உண்டாக்கலாமா? என்ன நினைக்கிறாய் வள்ளியாச்சி?

வள்ளியாச்சி.—"எங்கள் காலத்திலேயெல்லாம் இந்த வழக்கம் கிடையாது. அப்பொழுது சேலைதான் கட்டிக் கொள்ளுகிறது. இரவிக்கையும் சட்டையும் போடுவதில்லை. இந்தக்காலத்தில் தான் விதவிதமான சேலைகளும் இரவிக்கைகளும் வேண்டுமென்கிறார்கள். இனிமேல் மேல்ஜாதி கீழ்ஜாதி யென்றும் தாரதம்மியமே இல்லாமல் போய் விடும்போ லிருக்கிறது. நாட்டுக்கோட்டைப் பெண்களுக்கு இதெல்லாம் சரியல்ல.

சுந்தரி (இரவிக்கை தரித்திருந்த இன்னொருபெண்)— வள்ளியாச்சி கூறுவது நன்றாயிருக்கிறது. உங்கள் காலத்தில் இல்லாததொன்றும் இந்தக் காலத்தில் தோன்றக் கூடாதென்று சொல்லுகிறீர்கள். உங்கள் காலத்திலிருந்ததை விட இப்பொழுது செல்வம் அதிகரித்திருக்கிறது. சிங்கார மாளிகைகள் அதிகரித்திருக்கின்றன. பலவித செலவுகள் அதிகரித்திருக்கின்றன. இதற்கெல்லாம் என்ன சொல்லுகிறீர்கள்? அவற்றைப்பற்றி ஒன்றும் சொல்லாத நீங்கள், பெண்கள் மேனி மறைய சேலையுடுத்திக் கொள்ளவேண்டும் என்பதைப் பற்றி யேன் இவ்வளவு வெறுப்புக் காட்டுகிறீர்கள்? நாட்டுக்கோட்டை வைசியப் பெண்கள் அழகாகவும் மார்பு, வயிறுமுதலிய அங்கங்க

லேச் சரியானபடி மறைத்தும் சேலை தரித்துக்கொள்ளுவ தால் ஜாதிகெட்டுப்போய் விடுமா? இதென்ன வேடிக்கை யான பேச்சு. பிராமணஸ்திரிகளும், வேளாள ஸ்திரிக ளும் மற்றவகுப்பு ஸ்திரிகளும் இரவிக்கைபோட்டு எவ்வ ளவு அடக்கமாகவும், அலங்காரமாகவும் சேலை தரித்துக் கொள்ளுகிறார்கள். அதனாலே மேல்ஜாதி, கீழ்ஜாதி இல் லாமல் போய்விடவில்லையே. செட்டிப் பெண்களெல்லா ரும் செம்மையாக அங்கங்கள் மறையச் சேலை தரித்துக் கொள்ளுவதால் செட்டி குலத்துக்குப் பெருமையே யுண் டாகும். இப்பொழுதுபோல அலங்கோலமாக நம்மவர் கள் ஆடைதரித்துக்கொள்ளுவதனாலேதான் நமக்கு சிறு மையுண்டாகி வருகிறது.''

உமையாள்.—“நான் இரவிக்கை போடுகிறவளல்ல. ஆனாலும் சிறுபெண்கள் இரவிக்கை தரித்துக்கொண்டிருப் பது பார்க்க லட்சணமாய்த்தானிருக்கிறது. சுந்தரி சொன்னதுபோல பிராமண ஸ்திரிகளும், வேளாள ஸ்திரிகளும் இரவிக்கை தரித்துக்கொள்ளுகிறார்களே. அத னாலே அவர்களுக்கு அழகு குறைந்துபோயிற்றா? ஜாதி கெட்டுப்போயிற்றா? அப்படி ஒன்றும் நேரிடவில்லையே. ஆகையால் இந்தக் காலவழக்கப்படி பெண்கள் இரவிக்கை தரித்து அலங்காரமாக சேலை உடுத்துக்கொள்ள வேண்டு மென்றே நினைக்கிறேன். ஜாதி வளமைக்குப் பொருந்தா தென்று சொல்வது எனக்குப் பிடிக்கவில்லை. ஏனென்றால் ஜாதி வளமைக்கு விரோதமான பல காரியங்களை நம்மவர் கள் இப்பொழுது செய்துவருகிறார்கள். முன்பு பெண் கிரயம் கிடையாது. இப்பொழுதோ அது ஏழரை நாட்டு சனியன்போல நமது குலத்தவரைப்பிடித்து அலக்கழிக்

கிறது. மோட்டார் வண்டிகளும், மின்சார விளக்குகளும் இப்பொழுது வந்தவைதானே. அதுபோகட்டும், இசை குடி மானத்தில் கண்டெழுதாத பண்டம் பாடிகளும், மெத்தை தலையணைகளும், சீருடைமைச் சாமான்களும் நமது ஜாதி வளமைக்குப் பொருந்தியவைதானா? இவ்விதம் புதுப்புது விஷயங்கள் நமது ஜாதி வளமையில் சேர்ந்துகொண்டு வருகையில், பெண்கள் உடை விஷயத்தில் மாத்திரம் மாறுதல் உண்டாகக்கூடாதென்று சொல்வது சரியா ?

அடைக்கலம்மை.—நமது பெண்டுகள் சேலை தரித்துக்கொள்ளுகிற ஓவியமும் அப்படித்தான். உடுத்துகிற சேலையை உடம்புமறைய உடுத்தினால் என்ன கெட்டுப் போகும்?''

இப்படியாக ஒருமணிநேரம்போல் பெருந் தர்க்கம் நடந்தது. கடைசியில் சபாநாயகியாக வீற்றிருந்த முத்தம்மாள் பின் வருமாறு அக்கிராசன உரை கூறலானாள்.— “இரண்டொருவர் தவிர மற்றவர்களெல்லாரும் பெண்களின் உடைமுறையில் மாறுதல் காணவேண்டுமென்று சொல்லுகிறார்கள். தற்சமயம் நமது பெண்கள் சிறப்பாக உடைதரித்துக்கொள்ளும் ஒழுக்கத்தை கைக்கொள்ளவில்லை. பெரும் பணம் போட்டு வாங்கிய துணிமணிகள் இருட்டறைகளில் கிடந்து பூச்சிவெட்டியும் பூஷணம் பூத்தும் போகின்றன. ஆனாலும் நாம் சரியானபடி உடை தரிக்க தெரிந்துகொள்ளவில்லை. முடியவுமில்லை. முற்கால மலையாளஸ்திரிகள் அரையில் ஒரு வஸ்திரம் மாத்திரம் தரித்துக்கொள்வார்களாம். சில வேளைகளில் மாத்திரம் இன்னொரு வஸ்திரத்தை மேல் ஆடையாக போட்டுக்

கொண்டு வெளிப் புறப்படுவார்களாம். இப்பொழுதோ அதெல்லாம் மாறிவருகிறது. அவர்கள் இரவிக்கை, சட்டை முதலியன அணியவும், அலங்காரமாக சேலை தரித்துக்கொள்ளவும் ஆகிவிட்டனர். ஆனால் நமது நாட்டுக் கோட்டைப் பெண்களோ இன்னும் முற்கால மலையாள ஸ்திரிகளின் உடை முறையில் ஆசைகொண்டவர்களைப் போல காணப்படுகிறார்கள். முழுவதும் முற்கால மலையாளி உடைமுறையை நம்பெண்கள் அநுசரிப்பதில்லையென்றாலும், அப்படி அநுசரிக்க இஷ்டமுள்ளவர்கள் போல அலங்கோலமாக ஆடைதரித்துக் கொள்ளுகிறார்கள். இதனால் நம் பெண்களைப் பற்றி பிறர் கேவலமாய் நினைக்க இடமுண்டாகிறது. நமது குலத்துக்கே அகௌரவமாயிருக்கிறது. ஆகையால் உடை விஷயமாய் மாறுதல் ஏற்பட வேண்டியது அத்தியாவசியம். பிராமண, வெள்ளாள ஸ்திரிகளைப்போல இரவிக்கை தரித்துக் கொள்வது உசிதமென்று தோன்றுகிறது. அதனால் ஜாதிவளமைக்கு கெடுதிவரும், ஜாதிகெட்டுப்போகும் என்று சொல்வதெல்லாம் வீண்பேச்சு. ஏற்கனவே பலர் அற்குத் தக்க பதில் நியாயம் கூறி அந்த ஆட்சேபனைகளை அடக்கிவிட்டார்கள். இவ்விஷயம் பெண்களைச் சார்ந்தாகையால் பெண்கள்தான் முன்வந்து இவ்விஷயமாய்ச் சீர்திருத்தம் செய்யவேண்டும். இப்பொழுதுள்ள பெரிய பெண்பிள்ளைகளை இவ்விஷயமாய் சீர்திருத்துவது முடியாதென்றாலும், சிறு பெண்கள் தகுந்த உடை தரிக்கும்படி அவர்களைப் பயிற்றுவிக்கலாம். இந்தச் சீர்திருத்தம் நமது குலப்பெருமையைப் பொருத்தது. ஆகையால் ஒவ்வொரு நாட்டுக் கோட்டை நகரவைசியப் பெண்மகளும் இது விஷயத்தில்

சித்தை காண்பிக்கவேண்டும்" என்று தன் பிரசங்கத்தை முடித்தாள். அதன்பின் சபைகலைந்து அவர்கள் எல்லோரும் அவரவர் வீடு சென்றனர். உமையாள் மாத்திரம் தாமதித்து நின்றாள். எல்லோரும் போனபின் உமையாள் முத்தம்மாளை யணுகி "நான் உன்னிடம் ஒருகாரியம் பேசவேண்டுமென்று வந்தேன். கூட்டமாயிருந்ததால் இவ்வளவு நேரம்தாமதமாகிவிட்டது" என்றாள்.

"அப்படியா, என்னகாரியம் உமையாச்சி? நான் கொஞ்சம் தண்ணீர் சாப்பிடவேண்டும் வா இப்படி" என்று சொல்லி முத்தம்மாள் அவளைக்கூட்டிக் கொண்டு பின் கட்டுக்குச் சென்றாள்.

ஏழாவது அத்தியாயம்

சோம்பேறிப் பிராமணர் சூழ்ச்சி

தேவகோட்டையின் வடபக்கத்தில் பிராமணர்களின் குடியிருப்பு ஒன்றுண்டு. அதில் ஏறக்குறைய 50-60 வீடுகள் இருக்கின்றன. அவ்வூர் பிராமணர்கள் இந்தக்கதை நடந்தகாலத்தில் சூதாட்டம், ஊர்வம்பு, கோள் குண்டுனி பற்றவைத்தல், வைசிய சீமான்களுக்கு இதம் சொல்லுதல், குற்றேவல் புரிதல் முதலான உத்தியோகங்களை செய்துகொண்டு தங்களைவிட பெரியார் ஒருவருமில்லை என்ற இருமாப்புடன் சுயாதீனமாக வாழ்ந்து வந்தனர். செட்டிநாட்டிலே பிராமணர்களுக்கு எளிதாக வருமானம் கிடைப்பதால் அவர்கள் இவ்விதம் சோம்பேறிகளாகி தேசத்துக்கும் பொது ஜனங்களுக்கும் ஒருவிதத்தி

லும் பிரயோஜனப்படாமல் போகிருர்கள். அவர்களுக்கு மாத்திரம் அன்ன சத்திரம்வைத்து சோறுபோடுதலாலும், நன்மை தீமைகளில் பூரிபணம்கொடுத்தலாலும் தனவைசிய சமுகத்தாரே அவர்களை இவ்வாறு கெடுத்து விடுகிருர்கள் என்று கூடச் சொல்லவேண்டும்.

இங்ஙனம் சோம்பேறிகளாக, ஊரைச் சுற்றிவரும் அந்தப் பிராமணர் ஊரில் நடக்கும் சங்கதிகளை யெல்லாம் ஒன்று விடாமல் தெரிந்து கொள்வார்கள். அவற்றின் தன்மைக் கேற்ப தங்கள் நடத்தையை மாற்றிக்கொண்டு அவற்ருல் ஏதும் ஊதியம் சம்பாதிக்கலா மென்று முயற் சிப்பர். இப்படித் திரிவோரில் வெங்கடராம ஐயர் என்று ஒருவர் இருந்தனர். எங்கே வழக்குவம்பு ஏற்படுகிறது, யாராருக்கிடையில் மனஸ்தாபம் நிகழ்கிற தென்று எங்கி யலேவதே அவருடைய எழிலான தொழிலாகும். அப் படி ஏதேனும் தென்பட்டால் அக்கணமே சென்று அவ் விரு கட்சிக்காரரையும் தரிசித்து மேல்வேஷ்டியை எடு த்து அக்குளில் வைத்துக் கொண்டு வெகு அன்பாக வார்த்தை சொல்லுவார். ஒருகட்சிப்பேச்சை எதிர்க் கட்சியாரிடம் உண்மையாளர் போல உரைத்திடுவார். அந்தக் கட்சிக்காரரிடமே அநுதாப முள்ளவர்போல, அந்தரங்கத்தி லிருந்து அனேக காரியங்களைச் சாதித்துக் கொடுப்பதாகக் கூறிப் பாசாங்கு செய்து பசப்பி நகை புரிந்து அன்ஞர் சற்றே எமாந்திருக்கும் தருணங் கண்டு தமக்கு செலவுக்காக ஏதும் கொடுக்க வேண்டுமென்று பரிந்து கேட்டு பணம் பறித்துக்கொள்வார். இதே வித்தையை மற்றக் கட்சிக்காரரிடமும் செய்து அவர் களிடமிருந்தும் ஏதேனும் பணம் வாங்கிக்கொள்ளுவ

துண்டு. இப்படியாக இனிது வாழ்ந்து வருகிறார் ஸ்ரீமான் வெங்கட்டராமஐயர். இவருக்கு சுமார் நாற்பதுவயதிருக்கலாம். பெருத்தலையும், அதைத்த கன்னங்களும், ஊதின கைகளும், அண்டாபோன்ற வயறும், யானையினது போன்ற கால்களு முள்ளவராயிருந்ததால் அவரை எல்லோரும் யானைக்குட்டி வெங்கட்டராம ஐயர் என்று கூப்பிடுவது வழக்கம்.

அவர் இன்று காலையில் வழக்கம் போல வெளியே போகாமல் வீட்டிலிருந்தார். அதைக் கவனித்த அவர் மனைவி "என்ன இன்றைக்கு நாழிகை பத்தாகிறது. இன்னும்தேர் வெளிக்கிளம்பல்லையே" என்று சொல்லி நகைத்தாள்.

"பஞ்சாங்கக்கார நாராயண ஐயரை அவசரமாகக் காணவேணும். அதனாலே வெளியிலே போகல்லே. அவர் காலையிலே எழுந்து எங்கோயோ சேவகத்துக்கு போய் விட்டார்." என்று சொல்லிவிட்டு வெங்கட்டராம ஐயர் எழுந்து அடுத்த தெருவிலிருந்த சுப்பையர் காபி கிளப்புக்குச் சென்றார். அங்கு பஞ்சாங்கக்கார நாராயண ஐயர் வேறு சிலருடன் உரத்த சத்தத்தில் சம்பாஷணை செய்து கொண்டிருப்பதாய்த் தெரிந்தது. சமீபித்து பார்க்கும் பொழுது நாராயண ஐயர் கௌரவ சம்பாஷணையில் ஈடுபட்டிருக்கவில்லை யென்பது வெளிப்பட்டது. அவர் எங்கெல்லாமோ சுற்றியலைந்து கையிலிருந்த புலிப் பாக்கெட் பஞ்சாங்கத்தின் உதவியால் கேட்டோருக்கு பஞ்சாங்க விவரங்களை எடுத்துக் கூறி அதற்குப் பிரதியாகக் கிடைத்த சில வாழையிலைகளையும் கத்தரிக்காய்களையும் ஒரு நீண்ட புடலங்காயையும், தமது ஒற்றை மாட்டுவண்டி

யில் வைத்துக்கொண்டு வரும்வழியில், காபி சாப்பிட்டுவிட்டுப்போகலாமென்று சுப்பையர் கிளப்பில் இறங்கினர். அங்கு, பிராமணரல்லாதவர்களெல்லாரும், பிராமணருக்குத் தாழ்ந்தவர்கள் என்று சுட்டிக்காண்பிக்கும்படி அமைக்கப்பட்டிருந்த ஒரு மறைவு தட்டிக்குப் பின்னுலிருந்து நாராயண ஐயர் காபி சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், அந்த மறைவு தட்டிக்கு வெளியிலிருந்த ஒரு வாலிபன் அவர் வண்டியிலிருந்த புடலங்காயை எடுத்து இன்னொரு பையனிடம் கொடுத்து அதனை ஒளித்து வைக்கும்படி செய்து விட்டான்.

காபி சாப்பிட்டுவிட்டு வெளிவந்த நாராயண ஐயரிடம் இன்னொருவர் ஒருபுது வீட்டுக்குப் போவதற்கு நாள் பொருத்தம் பார்த்துச் சொல்லும்படி கேட்க, அவர் தமது கையிலிருந்த புலிப்பாக்கெட் பஞ்சாங்கத்தைத் திறந்து பார்த்துவிட்டு அந்தமாதம் இருபத்தைந்தாம் தெய்தி நல்ல சுபதினம் என்று கூறினர். மற்றவர் தாம் இருபதாம் தெய்திக்கு முன்னரே புதுவீட்டுக்குப் போக வேண்டி யிருப்பதால் அதற்குள்ளாக ஒரு நல்லதினம் பார்த்துச்சொல்ல வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொண்டார். இவரது அவசியத்தை உணர்ந்த நாராயண ஐயர் இனி பஞ்சாங்கம் கூறுவதைக் கவனித்தால் காரியம் பலிக்காது, இருபதாம் தெய்திக்குள் ஒரு தினத்தை,—அது எப்படிப்பட்ட தினமாயிருந்தாலும் சரி-சுபதினமாக்கி சொல்லிவிட வேண்டுமென்று தமக்குள் தீர்மானித்து ஒரு கனைப்பு கனைத்து இருமிக்கொண்டு, "பதினேழாந் தெய்தியும் நல்ல நாள்தான். சூரியன் அஸ்தமித்த பிறகு புதுவீட்டுக்கு குடிபோகலாம்" என்று அனு

யாசமாய்க் கூறினர். புடலங்காயை ஒளித்து வைக்கும்படி செய்த வாலிபன் இதைக் கவனித்து, "ஏன் சுவாமிகளே! பதினேழாம் தேதி சுபதினமென்று பஞ்சாங்கத்திலே சொல்லி யிருக்கிறதா? அல்லது இவருடைய அவசரத்தைக் கவனித்து நீங்களே அதை நல்ல நாளாக்கி விட்டீர்களா?" என்று பரிகாசமாகக் கேட்டான்.

"ஒருவர் புதுவீடு குடிபோகவேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கும்பொழுது இந்த மாதிரி யெல்லாம் கேட்கப்படாது" என்று சொல்லிக்கொண்டு நாராயண ஐயர், எழுந்து புறப்பட்டார். வண்டியில் போய் பார்க்கையில் புடலங்காயை காணவில்லை. யார் புடலங்காயை எடுத்ததென்று அவர் அங்கிருந்தவர்களைப் பார்த்துக்கேட்க, மேற்குறிப்பிட்ட வாலிபனும் அதே கேள்வியை தன் பக்கத்திலுள்ளவர்களிடம் கேட்க ஆரம்பித்தான். சிலர் தாங்கள் எடுக்கவில்லை என்று கூறினர்கள். ஒருவர் அதோ அந்தப் பக்கத்தில் தெரிகிறதே அதுவென்ன என்று மறைவுதட்டியின் ஓர் மூலைப்பக்கத்தைச் சுட்டிக்காண்பித்தார். நாராயண ஐயர் ஓடிவந்து அவர் காண்பித்த இடத்தில் பார்த்து ஏமாற்றமடைந்தார். "நீங்கள் உட்கார்ந்து காபி சாப்பிட்ட பக்கம்போய்ப் பாருங்கள்" என்று அந்த வாலிபன்கூற அப்படியே அங்கும் போய்ப்பார்த்தார். புடலங்காய் அகப்படவில்லை. தம்மை பரிகாசம் பண்ணுகிறார்களென்று அவர் மனதில் படவே, உரத்த குரலிலே "யாராவது என் புடலங்காயை எடுத்திருந்தால் கொடுத்திடுங்கள். நேரமாகிறது நான் போகவேணும். பிராமணனைப் பரிகாசம் பண்ணுதேயுங்கள். அதெல்லாம் சரியல்ல" என்று கூறிக்கொண்டு ஆத்திரத்துடன் அங்குமிங்கும்

போய் புடலங்காயைத் தேடிக்கொண்டிருந்தார். இந்தப் பேச்சுதான் இவர் ஏதோ மதுர சம்பாஷணை செய்வது போல தூரத்தில் வந்த வெங்கட்டராம ஐயருக்குத் தோன்றியது. அவர் காபிக் கிளப்புக்குள் வந்ததும் பஞ்சாங்க நாராயண ஐயர் புடலங்காய் விசாரணையில் வெகு சிரமப் படுவதையும், மற்றவர்கள் பரிகாசமான வார்த்தைகள் சொல்லிக்கொண்டு ஆநந்தமா யிருப்பதையும் கண்டு, தமக்கு அவசரமா யிருப்பதால் புடலங்காயைக் கண்டு பிடித்துக்கொடுத்து நாராயண ஐயரை உடனே அழைத்துக்கொண்டுபோய் விடவேண்டுமென்று எண்ணினார். யானைக்குட்டி வெங்கட்டராம ஐயர் தேகம் பெருத்தவரா யிருந்தாலும் சற்றே புத்தி நுட்பமுள்ளவரா யிருந்ததால், அங்கிருந்தவர்களைச் சிறிதுநேரம் கவனித்து பார்த்தபின் புடலங்காயை எடுத்து ஒளித்து வைத்துள்ள வாலிபனைக் குறிப்பினாலுணர்ந்து அவனையணுகி பஞ்சாங்க ஐயரிடம் தனக்கு அவசரமான காரியமிருப்பதால் புடலங்காயைக் கொடுத்து அவரை சித்த சுவாதீனப்படுத்தி அனுப்பி வைக்கவேண்டுமென்று பக்குவமாகக்கூறி, ஒளித்து வைக்கப்பட்டிருந்த புடலங்காயை வெளிப்படும்படி செய்து, அதை நாராயண ஐயரிடம் கொடுத்துத் தன்னோடு அழைத்துக்கொண்டுபோனார்.

வெங்கட்டராம ஐயர்.—"கேட்டீரோ நாராயண ஐயர் நான் இன்று காலைமுதல் ஓரிடமும் போகாமல் உமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன்."

நாராயண ஐயர்.—(ஆத்திரத்துடன்) "அப்படியா, என்ன விசேடம்? ஏதாவது வசூலுக்கு வழியுண்டோ? சொல்றதைச் சீக்கிரம் சொல்லுமேன்."

வேங்கட்டராம ஐயர்.—"என்னகாணும் இவ்வளவு ஆத்திரப்பட்றீர். சொல்றேன் பதறாதேயும். இராமநாதன் செட்டியார் மனைவி செல்லம்மை ஆச்சி இருக்காளில்லையோ, அவள் சுவீகாரபுத்திரன் சுப்பய்யாவுக்கு கலியாண ஏற்பாடு நடக்கிறது. அருணாசலம் செட்டியார் முத்துப் பட்டணத்திலே பெண்பார்த்து எல்லாம் முடிவு செய்து வைத்திருக்கிறாராம். செல்லம்மைக்கு அவருடைய ஏற்பாடு பிடிக்கவில்லை என்று தெரிகிறது. அவளுக்கு நமது லட்சுமணன் செட்டியார் மகள் வள்ளியம்மையைச் செய்யவேண்டுமென்று எண்ணமிருக்கிறதாம் லட்சுமணன் செட்டியாருக்கும் அது இஷ்டமென்று தெரிகிறது. அருணாசலம் செட்டியாருக்கு இந்தச் சம்பந்தம் சிறிதேனும் இஷ்டமில்லை. ஆனால் தான் செல்லம்மையின் விருப்பத்தை வெளிப்படையாக ஆட்சேபிக்கவும் பிரியமில்லை என்று தோன்றுகிறது. அவர் செல்லம்மையின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சிப்பதாக வெளிக்குக் காட்டிக்கொண்டு அந்தரங்கத்தில் வேறுவிதமாக, லட்சுமணன் செட்டியார் தம்பெண்ணை சுப்பய்யாவுக்குக்கொடுக்க மறுத்துவிடச் செய்யவேண்டுமென்று முயற்சிக்கிறார். இவ்விஷயமாக அவரும் அண்ணாமலையும் கலந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்."

நாராயண ஐயர்.—"இதெல்லாம் சரிதான். ஆனால் இதிலென்ன நமக்கு அநுகூலமிருக்கிறது. எனக்கு ஒன்றும் புரியவில்லை."

வேங்கட்டராம ஐயர்.—"ஆத்திரப்படாதேயும், நான் சொல்லுவதை கவனித்துக்கேளும். இதில் வருமானம் சம்பாதிக்க ஒரு மார்க்கமிருக்கிறது."

நாருயண ஐயர்.—"அதைச் சொல்லும் சீக்கிரம், கேட்கட்டும்."

வெங்கட்டராம ஐயர்.—"பொறும், பொறும், அவ்வளவு எளிதில் என் கைச்சரக்கை வெளியே காட்டுவேன் என்று எண்ணுதேயும். நீர் பழம் பெருச்சாளியென்று நான் நன்ருயறிவேனே. இவ்விஷயமாய் பணம் பிடுங்கத் தக்க மார்க்கத்தையும், அதற்கான உபாயத்தையும் சொல்லித் தருகிறேன். ஆனுல் கிடைக்கிற லாபத்தில் பாதி எனக்குக் கொடுத்துவிடவேண்டும். அப்படிச் செய்வதாக கைபோட்டுக் கொடும். அப்பறம் எல்லாம் விபரமாகச் சொல்றேன்."

நாருயண ஐயர்.—(தனக்குள்)"அடடா, இந்தத் தடிக் கழுதைக்கு கிடைக்கிறதிலே அரைவாசி கொடுத்திடவா? ஐயோ என் வயிறு எரிகிறதே. சீ, என்ன பேராசை இவனுக்கு. இவனும் ஓர் பிராமணனு? ஆனுல் இதின் இரகசியம் இவனிடம்தானிருக்கிறது. இவன் கேட்கிறபடி கிடைக்கிறதில் பாதியை இவனுக்கு வாய்க்கரிசிபோட்டுத் தான் தீரவேண்டும். வேறு வழியில்லையே. என்ன செய்யறது (என்று எண்ணிக்கொண்டு வெளியரங்கமாக) ஆகா, அதற்கென்ன ஆட்சேபனை? இந்தாரும் கைபோட்டுக் கொடுக்கிறேன்."

வெங்கட்டராம ஐயர்.—"சரி, இனி கவனமாய்க் கேளும். காரியம் மிகவும் எளிதானது. பிரமாதமான பிரயத்தினங்களொன்றும் செய்யவேண்டுவதில்லை. நான் சொல்லுகிறபடி நடந்துகொள்ளவேண்டும்"

இவர்கள் இப்படிபேசிக்கொண்டிருக்கையில் அருணுசலம் செட்டியாரின் தம்பி மகன் முத்தையா அந்த வழி

யாக வந்தான். அவனைக் கண்டதும் வெங்கட்டராம ஐயர் "வாரும் வீட்டில்போய் பேசிக்கொள்ளலாம்" என்றுசொல்ல, இருவரும் நாராயண ஐயர் வீட்டுக்குப் போனார்கள்.

எட்டாவது அத்தியாயம்

சொக்கலிங்கம் செட்டியார் வரலாறு.

"ஏதோ காரிய மிருக்கிறதென்று சொன்னாயே, அது என்ன காரியம், சொல்லு உமையாச்சி" என்று முத்தம்மாள் கேட்க, உமையாள் தான் வந்த விஷயத்தை விவரித்துக்கூறி முத்துப்பட்டணம் சொக்கலிங்கம் செட்டியார் குடும்பநிலை எப்படிப் பட்டது, இந்தச் சம்பந்தம் நல்லதா? என்று பல கேள்விகள் கேட்டாள்.

முத்தம்மாள்.—'சொக்கலிங்கம் செட்டியாரின் குடும்ப சங்கதிகள் சொல்லப்போனால் ஒரு நாளெல்லாம் பிடிக்குமே. நான் என்ன சங்கதி சொல்லவேணும் உமையாச்சி?

உமையாள்.—"அவர் குடும்பம் யோக்கியமானதா? அவர் மகளை, செல்லம்மை மகன் சுப்பய்யாவுக்குச் செய்தால் அது நல்ல சம்பந்தமாகுமா? இதைப்பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்லேன்.

முத்தம்மாள்.—"சொக்கலிங்கம் செட்டியாருக்கு பணம் அதிகமாயில்லாவிட்டாலும் பெண் மக்கள் நாலு பேர் இருக்கிறார்கள். முதல் குமாரத்தியை முத்துப் பட்டணத்திலே வீரப்பன் என்று ஒரு வாலிபனுக்கு கலியாணம் செய்துகொடுத்தார். அந்தப் பையனுக்கு இரண்டு

லட்ச ரூபாய்க்கு அதிகமான ஆஸ்தியிருந்தது கலியாண மாகி ஆறுமாதம் ஆகிறதற்குள் "சொக்கலிங்கம் செட்டி யார் தமது மருமகனிடமிருந்து ரொக்கமாய் நாற்பதினாயி ரம் ரூபா கடன்வாங்கிக்கொண்டாராம். அந்தப்பணத்தை அவர் திரும்பிக்கொடுக்கவேயில்லை. வீரப்பன் தன் மனைவி யின் சொற்படியும், மாமனார் ஆலோசனைப்படியுமே நட ந்து வந்தான். மூன்று வருடங்களுக்குப்பின் அவன் திடீ ரென்று வியாதிப்பட்டு இறந்துபோனான். வியாதிப் படு வதற்குமுன் அவனுக்கும் அவன் மனைவிக்கும் மனஸ்தாப முண்டாயிருந்ததென்றும், அதனால் அவள் ஏதேனும் செய்திருக்கக் கூடுமென்றும் பலவாறு பேசிக் கொண் டார்கள்."

உமையாள்.—"பலவாறு பேசிக்கொண்டார்களென் றால் அவள் மருந்துகிருந்து, போட்டு புருஷனைக் கொன்று விட்டதாகவா சொல்லுகிறாய்?"

முத்தம்மாள்.—"அப்படித்தான் பேச்சு நடந்தது. ஆனால் சொக்கலிங்கம் செட்டியார் என்ன தந்திரம் செய் தாரோ தெரியாது-அந்த வதந்தி துரிதத்தில் மறைந்து போயிற்று. அதன்பின் எல்லாரும் அவளைக்குறித்து தான் பரிதாபமாய்ப் பேசினார்கள். புருஷன் முரட்டுக் குண முள்ளவனென்றும், எப்பொழுதும் பெண்டாட்டியை திட்டி ரோதனை செய்து கொண்டிருப்பானென்றும் அதற்கெல் லாம் பொறுத்துக்கொண்டு அந்தப் பெண் மகா உத்தமி யாக நடந்துகொண்டாளென்றும் பலரும் சொல்லிக்கொ ண்டார்கள். புருஷன் ஆஸ்தி முழுவதும் அவளுடைய ஆதீனத்தில் வந்தது. இப்பொழுது சொக்கலிங்கம் செட் டியார் அதற்கெல்லாம் மேலாளாயிருந்து நடத்தி வருகி

ரூர். அவருடைய இரண்டாவது மகள் கண்ணம்மை என்பவளை அவ்வூரில்தானே முத்தையா என்னும் வாலிபனுக்குச் செய்துகொடுத்திருக்கிறது. அவன் காசிச்செட்டியார் என்பவரது மனைவி சோலையாச்சியின் சுவீகார புத்திரன். நல்ல குணசாலியான பையன். சோலையாச்சி அவனை வளர்த்தவளர்ப்பு அப்படி இப்படி என்று சொல்லிமுடியாது. அப்படி வளர்த்து, இந்த இடத்தில் கலியாணமும் செய்து வைத்தாள். கலியாணமான மூன்றும் மாதத்திலிருந்தே மருமகளுக்கும் அவளுக்கும் சண்டைசச்சரவுகள் சதா நடந்துகொண்டேயிருந்தன. சிலமாதங்களுக்குள் சோலையாச்சி திடீரென்று வியாதிப் பட்டு இறந்துவிட்டாள். அவள் போனபின் கண்ணம்மைதான் எல்லாவற்றையும் கண்காணித்து வருகிறாள். முத்தையா அவள் சொற்படிதான் நடந்து வருகிறான். அவன் சொத்துக்களில் அரைவாசி சொக்கலிங்கம் செட்டியார் கைக்கு வந்து விட்டதாகக் கேள்வி. இந்தமாதிரி ஆண்சந்ததியற்ற இடங்களில் சம்மந்தம் செய்து கொள்ளத்தான் அவருக்கு இஷ்ட மென்று தெரிகிறது. அவர் வீட்டில் சம்பந்தம் செய்து கொண்டால் இந்தமாதிரி துன்பங்கள்தான் உண்டாகும். என் பிள்ளைக்கானால் நான் அவர் பெண்ணைக் கொள்ளவே மாட்டேன்''

உமையாள்.—''நீ சொல்லுகிறதை பார்த்தால் இந்தச் சொக்கலிங்கம் செட்டியார் பணவாசைபிடித்த பாதகன் என்றல்லவா தெரிகிறது. அருமையாகப் பெற்றெடுத்த மக்களைக்கொண்டு ஊரார் சொத்தைக் கட்டியாளப் பார்க்கிறானே பஞ்சமா பாவி. நாட்டுக்கோட்டையார் மரபிலே இப்படிப்பட்டவர்களும் உதிக்கவேண்டுமா? நல்ல

5 †

இடமாக தெரிந்து, பெண்பார்த்தான்! இந்த ஏற்பாட்டில் ஏதோ சூதிருக்கிற தென்று, எனக்கு முன்னமே தெரியும்."

முத்தம்மாள்.—"இப்பொழுது தான் நமது நாட்டுக் கோட்டையர்கள் பலவித காரியங்களில் கைதேர்ந்துபோயிருக்கிறார்களே. பொய், நம்பிக்கை மோசம், ஏமாற்றல், பெண்களை விற்றல் முதலிய காரியங்களை சொல்வதில் நாட்டுக்கோட்டையார் நிகரில்லா நிபுணர்களாயிருக்கின்றனர். முந்தின காலங்களில் இப்படியெல்லாமில்லையாம். எல்லாரும் சமய ஆசாரப்படி ஒழுங்காய் நடந்துவந்தார்களாம்; எங்க அப்பத்தாள் நம்முன்னோர் நடபடிகளைப்பற்றி இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கக் கேட்டிருக்கிறேன்."

உமையாள்.—"நான் போகணும். செல்லம்மை, நான் வருவேன், வருவேனென்று காத்துக்கொண்டிருப்பாள்."

என்று சொல்லிவிட்டு, புறப்பட்டு செல்லம்மை வீட்டுக்குப் போனாள். நிற்க,

செல்லம்மை தன்வீட்டுக்குப்போய் வழக்கப்படி வீட்டுவேலைகளைச்செய்யலாமென்று ஆரம்பித்தாள். ஆனால் ஒரு வேலையிலும் அவள் மனது தரிக்கவில்லை. அது சுப்பையாவின் கலியாண விஷயத்திலே சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தது. அருணாசலம் செட்டியார் தன் நன்மையைக் கோருபவரல்ல என்ற எண்ணம் உதயமாகி பலத்து நின்றது. என்னசெய்வதென்று நினைத்து நினைத்து அவள் மனம் கலங்கினது. சமையல் புரையிலிருந்து இரண்டாங் கட்டுக்குப் போவதும், அங்கிருந்து முதல் கட்டுக்கு வருவதுமாக நடந்து திரிந்தாள். கடைசியில் ஒரு அறையின் கதவைத்திறந்து பார்த்தாள். அங்கு வேலையொழிந்த

நேரங்களில் அவள் செய்த ஓலைப்பாய்களும், பெட்டிகளும் அடுக்கிவைக்கப்பட் டிருந்தன. அவைகளைப்போய் எடுத்துப் பரிசோதித்தாள். அவற்றில் பெரும்பாகத்தை கரையான்கள் விலாப்புடைக்கவுண்டு கொழுத்து, கவலையின்றி வாழ்ந்துகொண்டிருந்தன. செல்லம்மைக்கு, அதைக்காணவும் கடுங்கோப முண்டாயிற்று. தன் பாய்களையும் பெட்டிகளையும், உப்புமா, ரவா தோசைபோல உண்டு கொழுத்திருக்கும் உணர்வற்ற கரையான்களை உடனே கொன்றுவிட வேண்டுமென்று எண்ணி அந்தப்பாய்களையும் பெட்டிகளையும் அள்ளியெடுத்து தரையிலே மோதிவிட்டாள். அதனால் அந்தப்பாய்களிலும் பெட்டிகளிலும் கரையான்கள் கட்டிவாழ்ந்த சிங்கார மாளிகைகளும், சின்ன சின்ன மண்டபங்களும் சின்னபின்னமாய்ச் சிதறுண்டு வீழ்ந்தன. இருக்குமிடம் அழிபடவே, அந்தக் கரையான்களெல்லாம் பரப்பரப்பாய் அங்குமிங்கும் ஓடத்தலைப்பட்டன. செல்லம்மை கோபித்து அவைகளைக் கையால் அடித்தும் காலால் தேய்த்தும் தரையோடு தரையாய் மண்ணோடு மண்ணாக்கி எமபுரம் குடியேற்றி வைத்தாள். அருணாசலம் செட்டியார்மேல் அவளுக்கிருந்த கோபத்தை யெல்லாம் அந்தக் கரையான்கள்மேல் காட்டினாள். அந்தச்சமயம் அருணாசலம் செட்டியாரின் தலை அவள் காலின்கீழ் அகப்பட்டிருக்குமானால் அந்தக்கரையான்கள் அடைந்த கதியையே அதுவும் அடைந்திருக்குமென்பது திண்ணம். இப்படிக் கரையான் சம்மாரம் செய்தபின், செல்லம்மை அந்த அறையை அடித்துக்கூட்டி சுத்தம் செய்துவிட்டு, பாய் முடைவதற்கென்று அரும் பாடுபட்டு கொண்டுவந்து கிழித்துத் தயாரிக்கப்பட்

டிருந்த ஓலைகளை எடுத்துக்கொண்டு ஓர்பாய் பின்ன ஆரம்பித்தாள்.

சிலநேரத்துக் கெல்லாம் உமையாள் அங்குவந்து தான் விசாரித்துவந்த விஷயங்களை யெல்லாம் விவரித்துக் கூற இருவரும் அதைக்குறித்து நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம்.

சுப்பையா சென்னைக்குச் சென்றமை.

சொக்கலிங்கம் செட்டியாரின் குடும்பவிஷயங்களைப் பற்றிக் கேள்விப்பட்டபின் செல்லம்மைக்கு அருணுசலம் செட்டியாரின் அயோக்யதை நன்கு விளங்கலாயிற்று. உள்ளூரில் உத்தம குணங்கள் வாய்ந்த ஒருபெண்ணிருக்க, அதைக் கவனியாமல் முத்துப் பட்டணத்திலே அதுவும் துர்க்கீர்த்தி வாய்ந்த ஒரு குடும்பத்திலே சம்பந்தத்துக்கு ஏற்பாடு செய்தது அருணுசலம் செட்டியாரின் வஞ்சகச்செயலென்று உணர்ந்து, சொல்லொணுக்கோபம் கொண்டாள். அதனுல், சுப்பையாவுக்கு உள்ளூர் லட்சுமணன் செட்டியார் மகளையே கலியாணம் செய்துவைக்க வேண்டும். அருணுசலத்தின்மோச ஏற்பாட்டுக்கு இடங்கொடுக்கவேகூடாது, என்று மனோராஜ்யம் செய்துகொண்டிருந்தாள்.

இப்படிச் சிந்தனைசெய்து கொண்டிருக்கையில் அவளுடைய இளைய மைத்துனர் அதாவது அருணுசலம் செட்டியாரின் தம்பி மகன் முத்தையா அங்கு வந்தான்.

அவனுக்கு இருபது வயதிருக்கும். நற்குணங்கள் அமைந்தவனாயும் புத்திசாலியாயுமிருந்தான். அவனுக்கு செல்லம்மையினிடம் பரம விசுவாசம். பெரியாத்தாள் என்று பெரிதும் அன்பு பாராட்டி வந்தான். ஆகையால் செல்லம்மை துக்கமுகத்தோடிருப்பதைக் காணவும் அவன் ஆத்திரத்துடன் "என்ன பெரியாத்தா, ஒருமாதிரியாயிருக்கிறையே, என்ன சேதி?" என்று கேட்டான்.

முத்தையா களங்கமற்ற மனமுள்ளவனாயிருந்ததால் அவனுக்கு வீட்டுக்குள் நடந்துவரும் கோரணிகள் விளங்கவில்லை. தனது பெரியப்பார், வீட்டுக் காரியங்களை செவ்வையாய் நடத்தி வருகிறாரென்றும், சுப்பையாவுக்குக் கலியாண ஏற்பாடுகள் நடக்கிறதென்பதும் அவனுக்குத் தெரியுமேயொழிய, அருணாசலம் செட்டியாரின் மோச நடவடிக்கைகளைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாமலிருந்தது. செல்லம்மை அவனிடம் எல்லா விஷயங்களையும் விபரமாகக் கூறினாள். அதையெல்லாம் கேட்கவும் முத்தையாவுக்கு மிகவும் திகைப்பாயிருந்தது. உள் வீட்டில் இவ்வித விபரீதச் சம்பவங்கள் நிகழ்ந்தும் தனக்கு இதுவரைத் தெரியாமலிருந்ததே என்று எண்ணினான்.

"ஏன் லட்சுமணன் செட்டியின் மகளை செய்யக்கூடாது" என்றான்.

"அதுதான் எனக்கும் விளங்கவில்லை. உங்கள் பெரியப்பச்சியின் உட்கருத்து நல்லதாயிருந்தால்தானே அவர் இந்தமாதிரி இடங்களில் சம்பந்தம்செய்ய விரும்புவார்," என்று செல்லம்மை சொன்னாள்.

"சுப்பையா என்ன சொல்லுகிறான்?" என்றான் முத்தையா. "அவன்தானே, அப்பா, சொன்னசொல் கேட்கிறு

னில்லே. சீட்டாடுகிறதும், வண்டி விரட்டுகிறதும், அங்கே போறதும் இங்கே போறதுமாக அலேகிருன். இவரும் அவனைத் தடுத்துச் சொல்லாமல் பார்த்துக்கொண்டே இருக்கிருர். அவனேக் கைக்குள் போட்டுக்கொண்டுதான் இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்கிருர்போலிருக்கிறது. அவன் இதற்கு உடன் பட்டால் கெட்டான் என்று வைத்துக்கொள்ளவேண்டியதுதான். நீயாவது அவனுக்கு புத்திசொல்லி இந்த விஷயத்துக்கு உடன்படாமலிருக்கச் செய்யப்பா" என்று பரிதாபகரமான முகத்தோடு செல்லம்மை கூறினுள்.

"என்னிடம் இதை முந்தியே ஏன் சொல்லவில்லே. நான் இப்பொழுதேபோய் முத்தையாவைக் கண்டு பேசுகிறேன்," என்று சொல்லிவிட்டு சுப்பையா வெளியே வந்தான்.

செல்லம்மை ஆச்சி வீட்டுக்கு வடக்கே இரண்டுவீதிகளுக்கு அப்பால் ஒரு காபிக்கடை இருக்கிறது. அதை வைத்து நடத்தும் ஐயாசாமி ஐயர் அடிநுனி தெரியாதபடி அம்மிக்குளவிபோல ஏகவுருவாய்ப் பெருத்த தேகத்தினே யுடையவர். அந்தக் கடையில் பிராமணர் மாத்திரமிருந்து காபி சாப்பிடுவதற்கென்று உட்கட்டுக்கு பக்கத்தில் தனியிடம் விடப்பட்டு, அது, ஒரு மூங்கில்பாய் தட்டியினுல் மறைக்கப்பட்டிருந்தது. இந்திய ரெயில்வண்டித் தொடர்களில் ஐரோப்பியர், ஆங்கிலோ—இந்தியர்களுக்கென்று பிரத்தியேகப் படுத்திவைக்கப்பட்டிருக்கிற வண்டிகள் எப்படி இந்தியரைத் தாழ்ந்தவர்களென்று குறிப்பிடுகிறதோ, அப்படியேஅந்த மறைவுதட்டிக்கு இப்பாலிருந்து காபி, பலகாரம் அருந்தும் பிராமணரல்லாத வகுப்

பினரைப் பார்த்து, அவர்கள் பிராமணருக்குத் தாழ்ந்தவர்களென்றும், தட்டிக்கு வெளியிலிருந்து சாப்பிடப்பட்டவர்களென்றும் ஒருவருக்கும் விளங்காத 'தட்டி' பாஷையிலே, அந்த மறைவு தட்டி சதா சொல்லிக் கொண்டிருக்கும். இந்த பாஷை ஒருவருக்கும் விளங்காதாகையால் ஒருவரும் இதுவரையில் இவ்விஷயத்தைக் கவனித்ததில்லை. அங்கு தினந்தோறும் காலை 9-மணியிலிருந்து மாலை 3-மணிவரையில் சீட்டுக்கச்சேரியும் நடைபெறுவதுண்டு. அதற்கு தனவைசிய வாலிபர்கள் சிலர் விஜயஞ் செய்வார்கள். செல்லம்மை ஆச்சி மகன் சுப்பையா, நாள் தவறுமல் வந்துவிடுவான். இன்று வழக்கம்போல சீட்டுக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. சுப்பையாவும் சீட்டாடிக் கொண்டிருந்தான். அவன் பக்கம் அடிக்கடி தோல்வியடைந்து கொண்டிருந்தது. அப்படி பத்து தடவை தோற்றுப்போகவும், வழக்கம்போல ஈருள்ளியும் மிளகு வத்தலும் சேர்த்துக் கோர்க்கப்பட்டுள்ள ஒரு சிறு மாலையை சுப்பையாவின் வலது காதில் மாட்டிவிட்டு, ஜெயித்த பக்கத்தாரும், பார்த்துக்கொண்டிருந்தவர்களும் கைகொட்டி ஆராப்பரித்தனர். அவர்களுடன் கூட சுப்பையாவும் சிரித்துக்கொண்டிருந்தான். இப்படி வாரத்தில பல தடவைகளிலும் நடைபெற்று வந்தது. சுப்பையாவின் பங்காளியாயிருந்து விளையாடுபவர் அவனுக்கு வயதில் மூத்தவராகையால் தோற்ற சமயங்களிலெல்லாம் ஈருள்ளி மாலை இவன் காதிலேயே போடப்படுவது வழக்கம். அதைப்பற்றி அவன், "எத்தனைபேர் சீட்டாடினலுமென்ன, மாலைபெறுவது நானல்லவா," என்று ஒவ்வொரு சமயங்களில் பெருமையாய்ச் சொல்லிக் கொள்ளுவதுமுண்டு.

இவ்விதம் கோலாகலமாக சுப்பையா சீட்டாடிக்கொண்டிருக்கையில், முத்தையா அங்கு வந்து அவனைத் தனியே அழைத்துக்கொண்டு போய் அவனிடம் கலியாண விஷயங்களை விவரித்துக்கூறி அவன் அபிப்பிராயம் என்னவென்று கேட்டான். சுப்பையா அதற்கு நேரான மறுமொழி கூறாமல், "எல்லாவற்றையும் சிற்றப்பர் யோசித்து ஏற்பாடு செய்யமாட்டாரா? நான் ஏன் கவலைப்படவேண்டும்?" என்றான்.

"நீ சொல்வது நியாயமே. ஆயினும் லட்சுமணன் செட்டியார் மகள் வள்ளியம்மையை உனக்கு கலியாணஞ் செய்யவேண்டுமென்பதே உன் தாயாருக்கு விருப்பமாயிருக்கிறது. அந்தப் பெண் உனக்கு தகுந்த மனைவியாவாள். பெரியப்பச்சி பேசியிருக்கிற முத்துப்பட்டணம் சம்பந்தத்தைவிட இது நல்லதாய்த் தெரிகிறது. சொக்கலிங்கம் செட்டியார் குடும்பத்தைப் பற்றி பலவித அபவாதமான பேச்சுகள் வந்திருக்கிறது. ஆகையால் எல்லாவற்றையும் தீர விசாரணை செய்துதான் மேல் நடவடிக்கை நடத்தவேண்டும். இந்தக் கலியாணத்தின் சுகதுக்கங்களை அனுபவிக்கப் போகிறவன் நீயாதலால், இவ்விஷயத்தில் நீ எவருக்கு வந்த விருந்தோவென்று பாராமுகமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது சரியல்ல. பெரியாத்தாளுடன் இதைக் குறித்து பேசி தக்க ஏற்பாடு செய்யவேண்டும்." என்று முத்தையா கூறினான். அதற்கு சுப்பையா "என்ன அண்ணே, நீஇப்படி சொல்லுகிறாய். போன சனிக்கிழமை நான், சிற்றப்பர் அண்ணாமலை செட்டியார், மூவரும் மோட்டார் வண்டியில் முத்துப்பட்டணம் போயிருந்தோம் அங்கு சொக்கலிங்கம் செட்டியார், எங்களைகண்டு வீட்டுக்கு

வரும்படி பரிந்து அழைத்தார். சிற்றப்பர் சாக்கு போக்கு சொல்லிப் பார்த்தும் அவர் விட்டாரில்லை. வந்து விட்டுத் தான் போக வேண்டுமென்று பிடிவாதமாக எங்களைக் கூட்டிக் கொண்டுபோய் பெரிய விருந்து நடத்தி நன்றாய் உபசரித்தார். பின்னர் நாங்கள் திரும்பி வருகையில் அவர் மிகவும் நல்லவரென்றும் எனக்கு அப்படிப்பட்ட குடும்பத்தில் பெண் கிடைப்பது என் அதிர்ஷ்ட மென்றும் சிற்றப்பரும் அண்ணாமலை செட்டியாரும் பேசிக்கொண்டு வந்தார்கள். அப்படி யெல்லாருமிருக்க, அந்தச் சம்பந்தம் கெட்டது என்று நீ சொல்வது எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது" என்று சொன்னான். இதைக்கேட்டதும் முத்தையா, "ஓகோ, சூழ்ச்சி பலமா யிருக்கிறது. பெரியப்பச்சி பெரிய வேலைகளெல்லாம் செய்கிறார்போல் தெரிகிறது. ஏற்கனவே பையனை சொக்கலிங்கம் செட்டியார் வீட்டுக்கு அழைத்துப்போய் மோட்டார் சவாரி, விருந்து முதலியவைகளால் மயக்கி இவனைத் தம் ஏற்பாட்டுக்கு இணங்கும்படி செய்திருக்கிறார். இவன் ஒரு மண்டூகம். வேடிக்கைப் பராக்கில் யோசனை செய்யாமல், அவர் சூழ்ச்சிக்கு உட்பட்டுப் போயிருக்கிறான். இப்பொழுது இவனிடம் உண்மையைக் கூறினால் ஒப்புக்கொள்ள மாட்டான். சூழ்ச்சியைச் சூழ்ச்சியால்தான் வெல்லவேண்டும்." என்று தனக்குள் எண்ணிக்கொண்டு "அப்படியா காரியம். ஆனால் "கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், தீரவிசாரித்ததே மெய்" என்றொரு பழமொழி யுண்டு. ஆகையால் எந்தக் காரியத்தையும் தீர விசாரித்தே செய்யவேண்டும். உன் நன்மையைக்கோரியே நான் இவ்விதம் பேசுகிறேன். நான் கூறியதில் உண்மை

யை வரவர நீயே அறிந்துகொள்ளுவாய். நான் இதைக் குறித்து உன்னிடம் விபரமாய்ப் பேசவேண்டும். இப்பொழுது இங்கு ஒருவரைக் காணப்போகிறேன்'' என்று சொல்லிவிட்டு வேறு பக்கமாக திரும்பிச்சென்ருன். சுப்பையா சீட்டுக்கச்சேரி என்னவாயிற்றென்று பார்க்கும்படி, ஐயாசாமி ஐயர் காபி கிளப்புக்கு துரிதமாய்த் திரும்பினுன். இவர்கள் பிரிந்து சென்றபின், இவர்கள் பேசிக்கொண்டு நின்ற இடத்துக்குப் பக்கத்திலிருந்த ஒரு சுவரின் மறைவிலிருந்து ஒரு ஆள் வெளிப்பட்டு முத்தையா சென்ற பக்கமாய்ப்போனுன். அவனுடைய தோற்றத்திஞல் அவன் ஒரு நகர வைசியன் என்று விளங்கினது.

முத்தையா அங்கிருந்து நேராக தனது நண்பனுன இராமநாதன் வீட்டுக்குப் போனுன். இராமநாதன் வைசியகுல வாலிபர்கள் அருமையாகக் கற்றுக்கொள்ளும் வண்டி ஓட்டுதல் வித்தையில் கைதேர்ந்தவன். இதனுல் இராமநாதனுக்கும் சுப்பையாவுக்கு நெருங்கின சிநேகமுண்டாயிருந்தது. ஒரு வண்டியும், 300 ரூபாயில் ஒரு ஜதை காளைகளும் வாங்கி, இராமநாதனையே தனக்கு குருவாக வைத்துக்கொண்டு சுப்பையா இந்த வித்தையைப் பழகி வந்தான். அப்படி பழகி வருகையில், ஒரு தடவை ஒரு விபத்து நேரிட்டது அதன்பின் வண்டியோட்டுதலை நிறுத்தி வைத்திருந்தான். அதெப்படியெனில், ஒருநாள் சுப்பையா தன் வண்டியை, வழியில் போகிற மற்றவண்டிகளை யெல்லாம் கடந்து முன்னுல் போகும்படி விரைவாய்ச் செலுத்திக்கொண்டு போனுன். விலக்கியோட்ட ரஸ்தாவில் போதிய இடசௌகரிய மில்லாதிருந்தமையால் பக்கத்திலுள்ள, குண்டுங்குழியும், கல்லும் சப்பாத்தியும் நிறை

ந்த தரிசுக்காட்டில் வண்டியை இறக்கி, காளைகளின் வாலைப்பிடித்து முறுக்கியும், தாரினால் குத்தி ஊறு செய்தும், சாட்டையால் சாடியும், அதட்டியும் அவைகளைத்தூத்திச் செலுத்திக்கொண்டு போனான். இராமநாதன் வண்டிக்குள்ளிருந்து அவனை உற்சாகப் படுத்திக்கொண்டிருந்தான். அப்படிப் போகையில் ஒரு பள்ளத்துக் கருகில் ஒருகாளை அடிசருக்கி கீழேவிழவே வண்டியும் குடைகவிழ்ந்து விழுந்துவிட்டது. அடிசருக்கி விழுந்த காளையின் வலது முன்னங்கால் ஒடிந்து போயிற்று. மற்றொரு காளையின் கண்களொன்றில் சப்பாத்திமுட்கள் தைத்து அந்தக் கண் குருடாயிற்று. சுப்பையாவின் தலையில் ஒருகல்பட்டு இரத்தம் பிரவாகமாய் வெளிப்பட்டது. இராமநாதன் சொற்பகாயங்களுடன் தப்பினான். இந்த சம்பவத்திற்கு பின் சுப்பையா வண்டியோட்டுதல் வித்தையை ஒருபக்கமாய்க் கட்டிவைத்திருந்தான். ஆனாலும் அதன்மேல் அவனுக்குள்ள மோகம் குறைவுபடவில்லை. ஆகையால் இராமநாதன் பேச்சுக்கு அவன் மயங்குவானென்பது முத்தையாவுக்கு நன்றாய்த் தெரியும். இராமநாதனிடம் இந்தவிஷயங்களை தெரிவித்து, அவன் மூலமாய் சுப்பையாவுக்கு உண்மையை விளங்கவைக்க வேண்டுமென்பது முத்தையாவின் கருத்து. அப்படியே இராமநாதனைக்கண்டு கலந்துபேசினதில் அவன் இவ்விஷயமாய் முத்தையாவுக்கு வேண்டிய உதவி செய்வதாகக் கூறினான்.

அன்றிரவு நல்ல நிலாவானதால் சாப்பாட்டுக்குமேல் சுப்பையாவைக் கூட்டிக்கொண்டு முத்தையா ஊரின் கீழ் பாகத்திலுள்ள மைதானத்துக்கு வரவேண்டுமென்றும், தான் அங்கு வருவதாகவும், அங்குவைத்து சுப்பையாவு

க்கு விஷயங்களின் உண்மைநிலையை விளக்கி வைக்கலா மென்றும் இராமநாதன்கூற, முத்தையா நல்லதென்று கூறி விடைபெற்றுக்கொண்டு தனது வீடுசென்று போ ஜனமருந்தி அடுத்த வீதியிலுள்ள தன் நண்பன் நாராய ணன் வீட்டுக்குப்போய்விட்டான். சாயங்காலம் வீட்டுக்கு வந்து சுப்பையா எங்கே என்று விசாரித்ததில், அவன் சாப்பாட்டுக்கு மேல் சென்னபட்டணத்துக்கு புறப்பட் டுப்போய் விட்டதாக அவனுக்குச் சொல்லப்பட்டது. காலையில், தான் அவனோடு பேசிக்கொண்டிருந்தபொழுது அவன் சென்னபட்டணத்துக்கு போகிறதாக ஒரு வார்த் தையும் சொல்லவில்லையே என்று அவனுக்கு ஆச்சரிய முண்டாயிற்று. உடனே அவன், ஐயாசாமி ஐயர் காபிக் கடைக்குச்சென்று சுப்பையாவைப்பற்றி கேட்க, "நீர் வந்து சுப்பையாவைக் கூட்டிக்கொண்டு போனீரல்லவா. அதற்குப் பிறகு கொஞ்சநேரம்பொருத்து அவன் திரும்ப வும் இங்குவந்து ஒருமணிநேரம்போல சீட்டாடிக்கொண் டிருந்தான். அப்போது அருணாசலம் செட்டியார் அழை த்துக்கொண்டு வரச்சொன்னாரென்று ஒரு ஆள் வந்து அவனைக் கூட்டிக்கொண்டு போனான்," என்று அம்பிக் குளவி ஐயாசாமி ஐயர் சொன்னார். அவன் சென்னபட் டணம் போகிறதாகச் சொல்லிக்கொண் டிருந்தானோவெ ன்று முத்தையா கேட்டதற்கு, ஐயாசாமி ஐயர் அப்படி யொன்றும் சொல்லவில்லை. அவன் போகிறதாயிருந்தால் அவசியம் என்னண்டை சொல்லியிருப்பான் என்று கூறி னார். முத்தையாவின் ஆச்சரியம் அதிகரித்தது. இதிலும் ஏதாவது தந்திரம் இருக்குமோ என்று சந்தேகம் உண்டா யிற்று. எதற்கும் தன் பெரியப்பச்சி நடவடிக்கைகளை

இனி நன்றாய்க் கவனித்து வரவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு முத்தையர் வீடுதிரும்பினான்.

பத்தாவது அத்தியாயம்.

சோதிட மகத்துவம்

முந்தின அதிகாரத்தில் கூறின சம்பவங்கள் நடந்த அன்று காலை 11-மணி இருக்கும். அண்ணாமலைச் செட்டியார் மகன் குமரப்பன் வெகுவேகமாய் நடந்து சென்று தன் வீட்டுக்குள் நுழைந்தான். அப்பொழுது அங்கு பட்டகசாலையில் அவன் தந்தையும் அருணசலம் செட்டியாரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். குமரப்பன், தன்னைநோக்கி அவசரமாக வந்ததைக்கவனித்த அண்ணாமலை செட்டியார் ஏதாவது விசேஷமுண்டோவென்று அவனிடம் கேட்டார். அதற்கு அவன் தான் ஐயாசாமி ஐயர் காபிக்கடைக்கு சமீபத்திலுள்ள மைதானத்தில் வரும்பொழுது அங்குள்ள ஓர் இடிந்த சுவரின் மறுபுரத்தில் நிற்கும் புளியமரத்தடியில் முத்தையாவும் சுப்பையாவும்வந்து நின்றுகொண்டு, சுப்பையாவின் கலியாண விஷயமாய்பேசஆரம்பித்தார்கள் என்றுகூறி, முந்தின அத்தியாயத்தில் கண்ட அவர்கள் சம்பாஷணையை விபரமாய் எடுத்துரைத்தான். அண்ணாமலை செட்டியாரும், அருணசலம்செட்டியாரும் இதைக்கேட்டபின் சற்றுநேரம் மௌனமாய் ஆலோசித்துக் கொண்டிருந்தனர். சில நிமிஷங்களுக்குப்பின் அண்ணாமலைச் செட்டியார்,—"முத்தையா செல்லம்மைக்கு உபபலமாகச் சேர்ந்திருக்கிறானே?" என்று

கேட்டார். "அப்படித்தான் தெரிகிறது. இதுவரை அவன் இவ்விஷயங்களில் தலைவிட்டவனல்ல. ஆனால் சிறு வயதிலிருந்து செல்லம்மை அவனை அருமையாக நடத்தி வந்தவளானதால் அவனிடத்தில் அவனுக்கு அன்புண்டு. செல்லம்மை இவ்விஷயமாய் அவனிடம் ஏதாவது சொல்லியிருக்கக்கூடும். இப்பொழுது நமது ஏற்பாடுகள் இனிது நிறைவேறுமுன், அவன் சுப்பையாவின் மனதைக் கலைக்க இடங்கொடுக்கக்கூடாது. இதற்கென்ன உபாயம் செய்யலாம்?" என்று அருணாசலம் செட்டியார் கேட்டார்.

"பையனை இரண்டொரு வாரத்துக்கு வெளியிடத்துக்கு அனுப்பி வைத்தாலே போதும். அப்படியாயின் முத்தையா அவனைக்காணவாவது, கலைக்கவாவது முடியாது" என்று அண்ணாமலை செட்டியார் சொன்னார்.

"ஆம் அது நல்லயோசனைதான் சுப்பையாவுக்கும் சென்ன பட்டணத்துக்குப்போகவேண்டுமென்று விருப்பமுண்டு. அவனை அங்கு நமது வள்ளியப்பன் இருக்கிறானல்லவா? அவனிடம் அனுப்பிவிடுகிறேன்." என்றுசொல்லி, அருணாசலம் செட்டியார் புறப்பட்டு நேராகத் தம் வீட்டுக்குப் போனார். போனதும் ஆளனுப்பி சுப்பையாவைக் கூட்டிவரச்செய்து அவனை உடனே சென்னைக்குப் பயணப்படுத்தி வைத்தார். சுப்பையாவுக்கு அங்கே போக ஏற்கனவே அவாவிருந்தபடியால் அவன் அருணாசலம் செட்டியார் பேச்சுக்கு அட்டிசொல்லாமல் இணங்கிவிட்டான்.

சுப்பையா போனபின் அருணாசலம் செட்டியார் வயிறாரவுண்டு, தாம்பூலந்தரித்து உள்வீட்டுப் பட்டகசாலையில் ஒரு திண்டின்மேல் சாய்ந்துகொண்டு தனக்குள் பின்

வருமாறு சிந்திக்கலானார்:—தமையனார் உயிரோடிருக்கும் பொழுது அவர் ஒரு ஸ்பயனை தம் புத்திரனாகச் சுவீகாரம் செய்துகொள்ள விரும்புவதாகச் சொல்ல, என் வாக்சாதுரியத்தினாலே அவர் விருப்பத்தை மாற்றினேன். அவருக்குப்பின் செல்லம்மை புத்திர சுவீகாரம் செய்யாதபடி தடுத்ததில், அவளிடம்தான் என் சாமர்த்தியம் பலிக்கவில்லை. அவள் தன் இஷ்டப்படியே ஒரு புத்திரனை சுவீகாரம் செய்துகொண்டாள். நான் மிகவும் கேவலமாய் தோல்வியடைந்தேன். அந்தத்தோல்வி இன்னும் என்னை நாணச் செய்கிறது. சரி அதுபோகட்டும். முடிந்த ஒரு காரியத்தைப்பற்றி இப்பொழுது நீள நினைத்துப் பார்ப்பதால் பலனில்லை. இப்பொழுது சுப்பையாவின் கலியாணத்துக்கு நான் ஒரு பெண்ணைத் தீர்மானித்திருக்க, அவள் அதை ஆட்சேபனை செய்து, தனக்கிஷ்டமான வேறு பெண்ணைக்கொள்ள வேண்டும் என்கிறாள். இதில் அவள் இஷ்டப்படி நடக்கப்போகிறதில்லை; என் சித்தமே நிறைவேறும்; நிறைவேறவேண்டும்; நிறைவேற்ற முயற்சிப்பேன். இதிலும் நான் அவளுக்குத் தோற்றுப்போனால் அதன்பின் நான் மனுஷன் என்று வெளிவருவதில் பயனில்லை.''

இவ்விதமாக அவர் தனக்குள் பேசிக்கொண்டிருக்கையில் பஞ்சாங்கக்கார நாராயண ஐயர் வந்து ''என்ன அருணசலம், பெரிய யோசனையில் மூழ்கியிருக்கிறாயே'' என்று கேட்டுக்கொண்டே உட்கார்ந்தார்,

அருணசலம் செட்டியார்.—''இல்லை, அவ்வளவுபெரிய யோசனை ஒன்றுமில்லை. அதிருக்கட்டும் நான் உங்களிடம் சில சங்கதிகள் கேட்கவேண்டுமென்றிருக்கிறேன்.''

நாராயண ஐயர்.—"ஆகா, தடையில்லாமல் கேள். அருணசலம்; என்ன சங்கதிகள் கேட்கப்போகிறுய்?

அருணசலம் செட்டியார்.—(தனக்குள்) "என்னைப் போன்றவர்கள் கொடுக்கும் பணத்தைக்கொண்டு ஜீவனம் செய்கிற இந்த பஞ்சாங்கப் பிராமணனை நான் "தாங்கள், உங்கள்" என்று மரியாதையாகப் பேசியும், அவனுக்கு அந்த மரியாதை தெரியாமல் "நீ" "உன்னை" என்று என்னைப்பற்றி ஏக வசனப் பிரயோகம் செய்து பேசுகிறுன். இவனைப் போன்ற பார்ப்பனர்களுக்காக எனது குலத்தார் பலவிடங்களிலும் சத்திரங்கள் ஸ்தாபித்து அன்னதானம் செய்து வருகிறுர்கள். அதற்குப் பிரதியாக அவர்களுக்குக் கிடைப்பதெல்லாம் இந்தமாதிரி அவமரியாதையும், அகௌரவமான பேச்சுந்தான். வர்ணுசிரமதர்மம் என்ற மிலேச்சக் கட்டுப்பாட்டுக்கு நாம் இணங்கியிருப்பதாலன்றோ நமக்கு இவ்வித மானபங்கம் உண்டாகிறது. நம் மனேரை யண்டி காலாலிட்ட வேலையைத் தலையால் செய்து காலங்கழிக்கும் பிராமணர், நம்மவர்களை இவ்விதமாக அவமானமாகப் பேசவும் நடத்தவும் விட்டு பார்த்துக்கொண்டிருப்பது என்ன ஒரு வெட்கக்கேடு. இதை இப்படி வளரவிட்டுக் கொண்டிருந்தால் நமது குலப் பெருமையே போய்விடும். பிராமணருடைய அகம்பாவத்தை, ஜாதிக் கர்வத்தை அடக்கவேண்டிய தவசியம். முதலாவதாக நானே இந்த ஜந்துவுக்கு சரியான மரியாதை படிப்பித்து வைக்கிறேன். ஆனுல், இவனுல் தற்சமயம் ஓர் காரியம் ஆகவேண்டியிருக்கிறது. அதை முடித்துக்கொண்டுதான் மற்ற விஷயத்தைக் கவனிக்க வேண்டும். (வெளியாங்கமாக) நீங்கள் ஜாதகம் பார்த்து

மணப்பொருத்தம் நிச்சயிக்கிறீர்களே. அந்தக் கலியாணங்களெல்லாம் எவ்வித இடையூறுமின்றிப் பொருத்தமாகவே நடைபெறுகின்றனவா? உங்களிடம் விவாகப் பொருத்தம் பார்த்துக் கலியாணம் செய்து கொண்ட எல்லாரும் பொருத்தமான வாழ்வு வாழ்ந்து வருகிறார்களா? விபரமாய்ச் சொல்ல வேண்டும்.

நாராயண ஐயர்.—"அதுக்கென்ன சொல்லுகிறேன். மணப்பொருத்தமெல்லாம் ஜாதகத்தைப் பார்த்துச்சொல்றதுதானே. ஜாதகத்தில் ஜன்ம நட்சத்திரம் சரியாக கணக்கிடப்பட்டிருந்தால் நாங்கள் சொல்வது சொன்னபடியே நடைபெறும். ஆட்சேபனையே கிடையாது. ஆனால் ஜன்மநட்சத்திரம் திட்டமாகக் கணிக்கப்படவில்லையானால், அது நிமிஷநேரம் முன் பின்னாக கணிக்கப்பட்டிருந்தால், எல்லாம் வித்தியாசமாகவே போய்விடும். ஜாதகமே திட்டமில்லையானால், அதைப் பார்த்துப் பொருத்தம் கணிக்கிற நாங்கள் மாத்திரம் திட்டமாயிருக்க முடியுமா? அதனாலே சில வேளைகளில் தவறுதல்கள் வருகிறதுண்டு"

அருணாசலம் செட்டியார்.—"சரி, ஒரு கலியாணம் நடக்க வேண்டியிருக்கிறது. ஜாதகப்படி மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் மணப்பொருத்த மில்லை என்று வைத்துக் கொள்வோம். அதை நீங்கள் பொருத்தமாக்கி வைக்க முடியுமா?"

நாராயண ஐயர்.—"ஆகா, ஜன்மநட்சத்திரம் சரியாய்க் கணிக்கப்பட்டதோ, இல்லையோ என்ற சந்தேகம் எப்பொழுதும் இருக்கவே இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு பொருத்தமாக்கி வைக்கலாம். ஆனால் கொஞ்சம் செலவு பிடிக்கும்.

அருணசலம் செட்டியார்.—"அப்படியா, சரி,ஜாதகப் படி ஒருபெண்ணுக்கும் பிள்ளைக்கும் நல்ல மணப்பொருத்த மிருக்கிறது. அதை இல்லையென்றாக்கி கலியாணம் நடை பெறுமல் செய்ய முடியுமா?"

நாருயண ஐயர்.—"ஆகா, தடையில்லாமல் செய்ய லாம். ஆனல் கொஞ்சம் ஜாஸ்தி செலவுபிடிக்கும். எதற்காக இதுகளை யெல்லாம் கேட்கிறுய்? சுப்பையனுக்குக் கலியா ணம் நடக்கப்போகிற தென்று கேள்விப்பட்டேன். அதைப் பற்றித்தானே?"

அருணசலம் செட்டியார்.—"ஆமாம். ஆனல் எதற் காக செலவு பிடிக்கும்? ஏதாவது பூசை, மந்திர தந்திரங் கள் செய்யவேண்டுமோ?

நாருயண ஐயர்.—"நீ வேண்டிய மனிதனுயிருப்பதால் உண்மையைச் சொல்லுகிறேன். எங்கள் குலதெய்வம் இருக்கிறுரே குப்பி பகவான், தொந்திநாதன், தெரியுமா? ஆயிரம் ஆமை வடைகளை அப்படியே அசையாமல் பலி கொள்ளத்தக்க தொப்பை தேவதை; அவர்தான் எங்கள் வயிற்றுச்சாமி. இப்பொழுது தெரிகிறதா? இந்த சுவா மிக்கு பூசை போடுவதற்காகத்தான் செலவு பிடிக்குமென் றேன். வேறென்றுக்குமல்ல. என்ன செய்யறது. வயிற் றுப் பிழைப்புக்காக இப்படியெல்லாம் செய்ய வேண்டியி ருக்கிறது.

அருணசலம் செட்டியார்.—"ஓகோ, தெரிந்துகொண் டேன். வயிற்றுப் பிழைப்புக்காக நீங்கள் எவ்வித வேலை யும் துணிந்து செய்வீர்களல்லவா?

நாருயண ஐயர்.—அது தெரிஞ்சே இருக்கிறது.

ஆனால் எந்த வேலையிலிறங்கினாலும் பிராமணன் பிராமணன் தானே."

அருணாசலம் செட்டியார்.—"ஆமாம், மற்றவர்களெல்லோரும் மண்டூகங்களாயிருந்தால் அப்படித்தான். சரி அதுகிடக்கட்டும். இப்பொழுது நான் சொல்லப்போகிறதை கவனித்துக் கேட்கவேண்டும். நமது பையன் சுப்பையாவுக்கு நான் முத்துப்பட்டணத்தில் ஒரு பெண் பேசியிருக்கிறேன். அவன் அந்தப் பெண்ணையே கலியாணம் செய்யவேண்டும். அப்படியிருக்க அவன் சுவீகாரத் தாய் செல்லம்மை இவ்வூர் லட்சுமணன் செட்டியார் மகளை அவனுக்கு கலியாணம் செய்விக்க வேண்டுமென்கிறாள். இதை நேராக ஆட்சேபிக்க எனக்கு இஷ்டமில்லை. உபாயத்தால் வெல்லவேண்டு மென்பது என் கருத்து. ஆகையால் லட்சுமணன் செட்டியார் மகளுக்கும் சுப்பையாவுக்கும் மணப்பொருத்தம் பார்க்கும்பொழுது நீங்கள் எவ்விதப் பொருத்தமுமில்லை யென்றும், அவர்களுக்குள் கலியாணம் நடந்தால் பலத்த கேடுகள் சூழுமென்றும் கூறி இந்தக் கலியாணம் நடைபெறாமலிருக்கச் செய்ய வேண்டும். இதற்காக எவ்வளவு செலவு பிடிக்கும்? சீக்கிரம் சொல்லுங்கள்."

நாராயண ஐயர்.—(கொஞ்சநேரம் யோசித்துக்கொண்டிருந்து விட்டு) "ஐந்நூறு ரூபா தரவேணும்"

அருணாசலம் செட்டியார்.—" அவ்வளவு கிடைக்க மாட்டாது உங்களோடு இவ்விஷயமாய் தருக்கம் பண்ண எனக்கு இஷடமில்லை. நான் ஒரே பேச்சாய்ச் சொல்லி விடுகிறேன். நான் 300 ரூபா கொடுக்கிறேன். நீங்கள் பொருத்தமில்லை யென்று இந்தக் கலியாணப் பேச்சை

ஒழித்துவிட வேண்டியது. இப்போது 100 ரூபா தருகி றேன். பொருத்தம் பார்க்கிற அன்று மீதம் 200 ரூபா வும் கொடுப்பேன் என்ன சொல்றிய?"

நாருயண ஐயர்.—"சரி அப்படியே, உன் சொல்லுக்கு நான் மறுசொல் சொல்றவனு? எல்லாம் முடிஞ்ச பிறகு நல்ல பட்டு நார்மடி வேஷ்டியாக எனக்கு ஒரு ஜோடி வேஷ்டி எடுத்துக் குடுத்திடணும். ஆத்துக்காரி உடுத்திக் கிட புடவை யில்லே. புடவையில்லெண்ணு ரொம்ப நாளா என்னை அரிச்சுக்கிண்டே யிருக்கிறு. நல்லதா ஒரு ஹைக் கோர்ட் பப்ளி புடவை ஒண்ணும் வாங்கிக் குடுத்தை யிண்ணு, இன்னர் கொடுத்தா என்னு உன்பேரைச்சொல்லி அவள் கையிலே கொடுப்பேன். மற்றக் காரியத்தைப் பத்தி நீ ஒண்ணுக்கும் கவலைப்பட வேண்டாம். நான் காரியம் பொருந்தாமலே பண்ணிப் போட்றேன்."

அருணசலம் செட்டியார்.—(தனக்குள்) இந்தப்பார்ப் பானுக்குப் பிடித்த போரசையைப்பார், ஒரு வருத்த மமில்லாமல் பொய்யைச் சொல்லி புளுகுவதற்காக ரொக் கமாக முன்னூறு ரூபா கொடுக்கிறது போதாமல் அவனு க்கு ஒரு ஜோடி வேஷ்டி வேணுமாம். ஆத்துக்காரிக்கு ஒரு ஹைக்கோர்ட் பப்ளி புடவை வேணுமாம். அதுவும் நல்லதா யிருக்கணுமாம். பேராசைக்காரன் பிராமணன் என்பது சரியாயிருக்கிறது. (என்று எண்ணிக் கொண்டு வெளியரங்கமாய்) வேஷ்டி, சேலை வாங்கிக் கொடுக்கமுடி யாது, நான் சொன்னபடி பணத்தைக் கொடுக்கிறேன். நீங் கள் காரியத்தை முடிக்கணும். சும்மா ஆசையை நீளத் தில் விடுகிறதில் பிரயோசனமில்லே."

நாருயண ஐயர்.—"என்னவோ பிராமணன் நான்

என் ஆசையைச் சொல்லிக் கிண்டேன். அப்பறம் உன்னிஷ்டம். நான் மறுத்துப் பேசிறவனல்ல. புடவை யில்லாட்டலும், ஒரு ஜோடி வேஷ்டியாவது கிடைச்சா உன்பேர் சொல்லிக் கட்டிக்கொள்வேன். அதுவும் இல்லே யெண்ணு லும் போகுது. நான் எப்போதும் இங்கே இருக்கிறவன் தானே. இப்போ இல்லாட்டால் இன்னொரு தடவை பெற்றுக் கொள்கிறேன். அதற்கென்ன, அருணுசலம், நீ சொன்னகாரியத்தை முடிச்சு வைக்கிறதுதான் எனக்குப் பெரிசு." என்ருர். அருணுசலம் செட்டியார் சொன்னபடி காரியத்தை முடிக்க வேண்டுமென்று பின்னும் ஒரு தடவை வற்புறுத்திக் கூறியபின் 100 ரூபா, நோட்டுகளாக எடுத்து நாராயண ஐயர் கையில் கொடுத்தார். அவர் அதை வாங்கி விடைபெற்றுக்கொண்டு மனக்களிப்புடன் வீடுசென்ருர்.

பதினேருவது அத்தியாயம்

"ஆத்துக்காரியை அழைச்சுகிண்டு போயிட்டானே"!

மூன்று நாட்களுக்குப்பின் அருணுசலம் செட்டியாரின் வேண்டுகோளின்படி சுப்பையாவுக்கும் லட்சுமணன் செட்டியார் மகள் வள்ளியம்மைக்கும் மணப்பொருத்தம் பார்க்கப்பட்டது. நாராயண ஐயர் வெகு நேரமாக ஜாதகங்கள் இரண்டையும் பரிசோதனே செய்தபின், தினப் பொருத்தம், யோனிப் பொழுத்தம், ராசிப் பொருத்தம், ராசி அதிபதிப் பொருத்தம், வசியப் பொருத்தம், ரஜ்ஜூப் பொருத்தம், வேதப் பொருத்தம், நாடிப் பொருத்தம்.

கிரகப் பொருத்தமாகிய பலவகை மணப் பொருத்தங்களில் ஒன்றேனும் ஜாதகக்காரப் பையனும் பெண்ணும் கலியாணஞ்செல்து கொள்வதற்கு சாதகமா யில்லை யென்றும், கலியாணம் நடந்தால் மகத்தாகிய கேடுகள் சம்பவிக்குமென்றும் லட்சுமணன் செட்டியார் மனத்தில் படும்படி வலியுறுத்திக் கூறினர். லட்சுமணன் செட்டியாருக்கு இதைக் கேட்கவும் மனம் மாறினது. அவர் வீட்டுஸ்திரிகள் இனியந்த விஷயமாய்ப் பேசினல் கூட தோஷமுண்டாகுமென்று எண்ணினவர்கள் போல சுப்பையாவுக்குப் பெண்கொடுக்கிறது என்ற பேச்சையே நிறுத்தி விட்டார்கள். கொஞ்சமும் கல்வியறிவில்லாத கோடங்கிக்காரன் சொல்லும் குறியைக் கேட்டுகுடல் நடங்கி நிற்கும் புருஷர்கள் அநேகர் வைசிய மண்டலத்தி லிருக்கின்றனரல்லவா? ஆகையால் லட்சுமணன் செட்டியாரும் அவர் வீட்டாரும் நாராயண ஐயர் சொன்ன சோதிடத்தைகேட்டு மனமருண்டு போனதைப் பற்றி நாம் ஆச்சரியப் படவேண்டியதில்லை. அருணுசலம் செட்டியார் தம்சூழ்ச்சி நிறைவேறினதைக் கண்டு ஆனந்தக் கடலில் முழுகிக்கிடந்தார். செல்லம்மாள் தனது விருப்பம் நிறைவேருது போனதைப் பற்றி மனவருத்தத்துட னிருந்தாள். முத்தையாமாத்திரம் தன் பெரிய தந்தையால் தான் இந்த விவாக ஏற்பாடு தவறிப் போயிற்றென்று சந்தேகப்பட்டான். ஆனுலும் அருணுசலம் செட்டியாரின் சூழ்ச்சியை அவன் அறிந்து கொள்ளவில்லை.

மணப் பொருத்தம் பார்த்த அன்று சாயந்தரம் நாருயண ஐயர் அருணுசலம் செட்டியார் வீட்டுக்கு வந்து அவருக்கு வரவேண்டிய 200 ரூபாய்யையும் வாங்கிக்கொ

ண்டுபோனார். தான் செல்லம்மையை ஜெயித்து விட்டதாக மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அருணாசலம் செட்டியார் அந்தமகிழ்ச்சியின் பெருக்கால் நாராயண ஐயர் கேட்டபடி ஒரு ஜோடுவேஷ்டி வாங்கிக் கொப்பதாகவும் வாக்களித்தார். இது நாராயண ஐயருக்கு சந்தோஷத்தை யளித்ததென்றாலும், மூந்நூறு ரூபாவில் சரிபாதியை யானைக்குட்டி வெங்கடராம ஐயருக்குக் கொடுக்கவேண்டுமே என்ற எண்ணம் அவர் மனதை அரிக்கத் தொடங்கினது. பேராசை என்னும் பேய் இதுதான் தருணமென்று மெல்லென வந்து அவர் மனதில் புகுந்தது. "நூற்றைம்பது ரூபாவையும் மொத்தமாக அந்தத் தடிக்கழுதைக்குக் கொடுக்கவா? ஐயோ என் வயிறு எரிகிறதே. எல்லா வேலையும் செய்தவன் நானாயிருக்க, இதைப்பற்றி உளவு மாத்திரம் சொன்னவனுக்கு சமபாகம் கொடுக்கவேண்டுமென்பது வேடிக்கையல்லதா? வேணுமானால் அவன் இந்த சங்தியைத் தெரிவித்ததற்காக ஒரு ஐம்பது ரூபாய் கொடுப்பேன். அவ்வளவு கொடுப்பதே என் தாராள குணத்தைக் காட்டுகின்றது. அன்றியும் அவன் தயவு இனிமேல் நமக்கு என்னத்துக்கு?" என்று நாராயண ஐயர் தமக்குள் எண்ணலானார். கடைசியில் ஐம்பது ரூபாவுக்குமேல் ஒரு செப்புச் சல்லிகூட கொடுப்பதில்லை என்று தீர்மானித்துக் கொண்டார். அவர் இந்தத் தீர்மானத்துக்கு வந்த சில நிமிஷங்களுக்குள் யானைகுட்டி வெங்கட்டராம ஐயர் வேர்த்து விதிர்ததுப் போய் மேல்மூச்சுவாங்கிய வண்ணமாய் அங்கு வந்து சேர்ந்தார்.

"வாரும், வாரும் இரண்டுமூன்று நாட்களாக எங்கே போயிருந்தீர்? என்று கூறி நாராயண ஐயர் அவரை

உபசரித்து உட்காரச் சொன்னார். வெங்கிட்டராம ஐயர் உட்கார்ந்து தன் தோள்மேல் கிடந்த வேஷ்டியினால் வெயர்வை சிந்தும் முகத்தை துடைத்துக் கொண்டே "நான் நாலாம் நாள் ஒரு அவசரகாரியமாக மதுரைக்குப் புறப்பட்டுப் போனேன். உம்மிடம் சொல்லிக்கொண்டு போகக்கூட அவகாசப்படவில்லை. இப்பொழுதுதான் மதுரையிலிருந்து திரும்பினேன். நீர் சுப்பையாவின் கல்யாண விஷயமாய் விவாகப் பொருத்தம் பார்க்கப் போயிருந்தீர் என்று ஆத்துக்காரி சொன்னாள். உடனே இங்குவந்தேன் அதிருக்கட்டும். இந்த சங்கதியில் கண்டுமுதல் எவ்வளவு என்று கேட்டார்".

நாராயண ஐயர்.—"துர் அதிர்ஷடவசமாய் நீர் இங்கேயில்லாமல் போய்விட்டீர். முந்தாநாள் அருணசலம் செட்டியார் என்னை கூட்டிவர ஆளனுப்பியிருந்தார். நான்போனதில் காரியத்தைச் சொல்லி இன்ன மாதிரி பொருத்த மில்லாமல் பண்ணிவைக்கணும் எவ்வளவு செலவு பிடிக்கும் என்று கேட்டார். நான் ஐந்நூறு ரூபாய் என்றுசொன்னேன். அவ்வளவு வராது என்று சொல்லிவிட்டார். நானூறு என்றேன் அதையும் ஒப்புக்கொள்ளவில்லை. முந்நூறு ரூபாயாவது கொடுக்கவேண்டுமென்றேன். அவர் சம்மதிக்காமல் நானூறு ரூபாவும் ஒரு ஜோடி வேஷ்டியும் கொடுப்பதாகவும், அதற்கு மிஞ்சி ஒன்றும் கொடுக்கமுடியாதென்றும் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார். நான் ஒத்தையிலே என்ன செய்யறது. நீர் இருந்தால் இருநூறு ரூபாய்க்காவது வழிபண்ணியிருக்கலாம். நான் கிடைச்சது லாபமென்று ஒப்புக்கொண்டு விட்டேன்." என்று சொல்லி எழுந்து உள்வீட்டுக்குள்

போய் ஐம்பது ரூபா, நோட்டுகளாக எடுத்துக்கொண்டு வந்து வெங்கட்ட ராமஐயரிடம் கொடுத்து வேஷ்டி யின்னும் வரவில்லை, வந்தவுடன் உமக்கு ஒரு வேஷ்டிகொ டுத்திடுறேன்'' என்றார்.

வெங்கட்டராம ஐயர்.—''இதை கேட்டதும் ஆச்சரி யமடைந்து நாராயண ஐயர் முகத்தை கூர்ந்துபார்த்துக் கொண்டு ''என்னகாணும் இந்த நூறுரூபாய்க்குத்தானா இவ்வளவு வேலை செய்தீர்? விளையாட்டுக்கு ஏமாற்றப் பார்க்கிறீரா? உண்மையைச் சொல்லும்'' என்று கேட்க நாராயண ஐயர் ''உண்மையைத்தான் சொன்னேன். விளை யாட்டுக்காவது அல்லது வேறு விதமாயாவது நான் ஏமாற்றவில்லை. வேண்டியசமயத்தில் நீர் போய்விட்டீர் நான் என்ன செய்யறது, செட்டிப் பிள்ளைகளும் முன் போல பிராமணன் சொன்ன சொன்னபடி யெல்லாம் ஆடு கிறவர்களாயில்லை. அவர்களுக்கு சுயமரியாதை உண்டாகி வருவதோடு, அறிவும் பெருகி வருகிறது. இனிமேல் நாம் அவர்களை ஏமாற்றி முன்போல கொள்ளையடிக்க முடி யாது. அதிலும் அருணாசலம் செட்டியார் இருக்காரே அவர் அறப்படிச்சவர். நீர் வந்து கோபிச்சுக்கொள்வீ ரென்று நான் பயந்துகொண்டுதா னிருந்தேன்'' என்று சொன்னார். வெங்கட்டராம ஐயர் இதில் ஒருவார்த்தை கூட நம்பவில்லை. நாராயண ஐயர் முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறாரென்று அவர் மனதில் பட்டது. ஆனால் சந்தேகத்தை ஆதாரமாகக்கொண்டு ஒரு மனிதனை நியாயந்தீர்ப்பது தகாதென்று எண்ணி எல் லாவற்றையும் தீரவிசாரித்துக்கொண்டு அப்புறம் மேல் நடவடிக்கை செய்யலாமென்று தீர்மானித்து, அந்த ஐம்

பது ரூபாவையும் எடுத்து தான் போட்டிருந்த சட்டைப் பையில் வைத்துக்கொண்டு, "சரி நான் நாளைக்காலையில் வருகிறேன். பேசிக்கொள்ளலாம்" என்று கூறி விடை பெற்றுப் போய்விட்டார். அன்றிரவெல்லாம் அவருக்கு தூக்கம் பிடிக்கவே இல்லை. நாராயண ஐயர் தனக்குச் செய்த நயவஞ்சகத்தைப் பற்றியே எண்ணிக்கொண்டு படுக்கையில் கிடந்தார். மறுநாட் காலையில் எழுந்ததும் வெங்கட்டராம ஐயர், அண்ணாமலைச் செட்டியார் வீட்டில் வேலை செய்பவனும் தனக்கு அந்தரங்க நண்பனுமான மாடசாமியைத் தேடிப்போய் அவனிடம் சங்கதியைக் கூறி நாராயண ஐயர் அருணாசலம் செட்டியாரிடமிருந்து எவ்வளவு தொகைவாங்கி யிருக்கிறாரென்ற கண்டுபிடிக்க வேண்டுமென்று சொல்ல, அவன் அதைப்பற்றி விசாரித்து அன்று சாயந்தரமே விபரம்சொல்வதாக ஒப்புக்கொண் டான். அருணாசலம் செட்டியார் வீட்டில் வேலை செய்யும் சின்னக்கருப்பன் மாடசாமிக்குச் சொந்தக்காரன். ஆகை யால் மாடசாமி அவன் மூலமாக அருணாசலம் செட்டியா ரிடமிருந்து நாராயண ஐயர் முன்னூறு ரூபா வாங்கிக்கொ ண்ட சங்கதியையறிந்து, வெங்கட்டராம ஐயருக்கு வெளிப் படுத்தினான். ஆனால் என்ன வேலைக்காக இந்தப்பணம் வாங்கிக்கொண்டு போனாரென்பதை சின்னக்கருப்பனும் மாடசாமியும் தெரிந்து கொள்ளவில்லை.

மாடசாமியிடம் இந்த விபரங்களைத் தெரிந்துகொ ண்டபின் வெங்கட்டராம ஐயர் கோபமூண்டவராய் அங் கிருந்து புறப்பட்டு நேராய் நாராயண ஐயர் வீட்டுக்குப் போனார். அவர் வீட்டிலில்லை. காலையிலே புறப்பட்டு காரைக்குடிக்குப் போய்விட்டதாக அவர் மனைவி கூறி

ளுள். அவளைக்கண்டதும் வெங்கட்டராம ஐயரின் கோபம் ஒருவாறு தணிந்தது. ஏனெனில் இவ்விருவருக்கு மிடையில் ஏற்கனவே அந்தரங்கக்காதல் இருந்துவந்தது. இது நாராயண ஐயருக்குத் தெரியாது. அப்படியிருக்க, இந்தச் சமயத்தில் அவளைக் கண்டதும் வெங்கட்டராம ஐயருக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

"இந்த நாராயணன் நயவஞ்சகமாய் என்னை ஏமாற்றி விட்டான். வெங்கட்டராமனாகிய என்னை வெறும்பயலென்று நினைத்தல்லவா இந்த மூடக்கழுதை இவ்வளவு துணிந்து வேலை செய்திருக்கிறது. என்வாலை அவிழ்த்து விடுவேனானால் அப்பொழுதுதான் அதன் வல்லமை இவனுக்குத் தெரியும். இவனுக்கு சரியான பாடம்படித்துக் கொடுக்கவேண்டும். இவன் என்னை ஏமாற்றி கேவலம் ஒரு நூறு ரூபா எடுத்துக்கொண்டான். அதற்குப் பதிலாக என்மீது காதல் செலுத்தும் இவன் பெண்டாட்டியையும், வீட்டிலிருக்கிற ரொக்கரோசனை, நகை நட்டுகளையும் அனுப்பிக்கொண்டுபோக நான் முயற்சித்தாலென்ன? "தன்னைக் கொல்லவந்த பசுவையுங் கொல்" என்றொரு பழமொழி இருக்கிறது. என்னை மோசம்பண்ணின நாராயணனை நான் முழுமோசம் பண்ணலாமென்பதற்கு இந்தப் பழமொழியும் ஒரு ஆதாரமாகிறதல்லவா? ஆகையால் நான் நாராயணன் மனைவியிடத்தில் நளினமாகப் பேச்சுக் கொடுத்து அவளை என் நோக்கத்துக்கு இணங்கும்படி செய்வேன்." என்று அவர் தீர்மானித்துக்கொண்டு அவ்விஷயமாக அந்தப் பார்ப்பன ஸ்திரியிடம் சம்பாஷிக்கலாயினர். அவளுக்கு வெங்கட்டராம ஐயர் மீது அந்தரங்க காதலிருந்தமையால் அவர் பேச்சை மனமுவந்து

கேட்டாள். இருக்கிற பணம் காசுகளையும், நகைநட்டு களையும் எடுத்துக்கொண்டு தன்னோடு வந்துவிடவேண்டு மென்றும், இருவரும் தூரவிடத்தில் போய் சுகமாய் வாழ்ந்திருக்கலா மென்றும் வெங்கட்டராம ஐயர் வற்புறு த்தினார். அவள் இதைக் கேட்டவுடனே சற்று மனந் தயங்கினாளென்றாலும் கடைசியில் இணங்கிவிட்டாள். நாராயண ஐயர் அருணாசலம் செட்டியாரிடமிருந்து 300 ரூபா வாங்கிக் கொண்டு வந்தது உண்மைதானென்றும் அதில் இருநூறு ரூபா பெட்டியிலிருக்கிறதென்றும், வேறு பணமும் முன்னூறு ரூபா வரையில் ரொக்கமுண் டென்றும், அன்றியும் ஆயிரம் ரூபாவரை பெறுமதியுள்ள தன் சொந்தநகை நட்டுகளுண்டென்றும், அவை எல்லா வற்றையும் எடுத்துக் கொண்டு வருவதாகவும் துணிந்து கூறினாள். ஆனால் இந்தப் பணங்களையும் நகைகளையும் அபகரித்துக் கொண்டு தன்னை வெண்ணிலையில் விட்டு விடாமல் தான் சாகிற பரியந்தம் சௌகரியமாக வைத்து க்காப்பாற்றுவதாக உறுதி மொழி கூறவேண்டுமென்று அவள் கேட்டாள். அப்படியே அவர்கள் ஒருவருக்கொரு வர் சத்திய பிரமாணிக்கம் செய்து கொண்டார்கள். அதன் பின் அந்தப் பாபிகளின் செயல்களையும் வசனங்க ளையும் இங்கு விவரிக்க நமக்கு இஷ்டமில்லை, அவர்கள் எப்படியும் கெட்டுக் கீழ்மை யடையட்டும், உலகத்தில் இப்படியும் நடக்கிறதல்லவா? கடைசியில், வெங்கட்டராம ஐயர் மறுநாட்காலை நாலுமணிக்கே வண்டி கொண்டுவருவ தாகவும், பயணத்துக்குத் தயாராயிருக்கவேண்டுமென்றும் அந்தஸ்திரியிடம் சொல்லிவிட்டு தம் வீடுதிரும்பினார். மறுநாட்காலை சூரியன் உதயமாகுமுன் வெங்கட்டராம

ஐயரும், நாருயண ஐயர் மனைவியும் தேவகோட்டையை விட்டு வெகுதூரம் சென்று விட்டார்கள்.

அன்றுமாலை காரைகுடிக்குப் போயிருந்த நாராயண ஐயர் திரும்பி தேவகோட்டை வந்து வீட்டுக்குப் போய் பார்த்தபொழுது வீடுபூட்டியிருந்தது. அண்டை அயலில் விசாரித்ததில் ஒருவரும் தங்களுக் கொன்றும் தெரியா தென்று சொல்லி விட்டார்கள். சோதிடருக்கு மிகவும் ஆச்சரியமா யிருந்தது. பூட்டையுடைத்து, கதவைத்திற ந்து வீட்டுக்குள் போய்ப்பார்த்ததில் சாமான்கள் தாறு மாருய்க் கிடக்கக்கண்டார். மனைவியைக் காணும். பெட்டிக் குள்ளிருந்த சாமான்களையும் காணவில்லை. யாரோ திருடர் வந்து தம் மனைவியையும், மற்றும் சாமான்களையும் கொள்ளை கொண்டுபோய் விட்டார்களென்று பெருங் கூச்சலிட்டார். அனேக ஜனங்கள் வந்து கும்பு கூடினர். அந்தக் கூட்டத்தில் முன்னொரு நாள் நாருயண ஐயரின் புடலங்காயை எடுத்து ஒளித்து விட்டு வேடிக்கை பார்த்த பையனும் வந்திருந்தான். அவன் நாருயண ஐயரைப் பார்த்து “நீங்கள் சோதிட சாஸ்திரத்தை ஆராய் ந்து இங்கு என்ன நடந்ததென்றும், வீட்டு அம்மாளும் சாமான்களும் என்னகதி யாளுர்களென்றும் கண்டு பிடிக் கலாமே, உடனே சோதிடம் பாருங்கள்” என்று கூறினுன். வேறு சிலரும் அப்படிச் செய்வதுதான் நல்ல தென்றூர் கள். ஆனுல் சோதிட சாஸ்திரம் மூடஜனங்களை ஏமாற் றிப் பொருள்பரிக்க உதவுமேயன்றி இப்படிப்பட்ட விஷ யங்களுக்கு உதவாதென்பது நாருயண ஐயருக்குத் திட்ட மாய்த் தெரியுமாதலால், அவர் அதற்கு இணங்கவில்லை. அவர் தமது நண்பர் வீடுகளுக்கெல்லாம் சென்று இந்த

சங்கதியைக் கூறினார். அனைவரும் ஆச்சரியமடைந்து அவர்பால் பரிதாபப்பட்டார்கள். ஒருவருக்காவது நடந்த சங்கதி இன்னதென்று தெரிந்திருக்கவில்லை. வெங்கட்டராம ஐயர் வீட்டுக்குப் போய் அவரைத் தேடினார். அவர் வீட்டிலில்லை. அன்று காலை இருட்டோடு எழுந்து மதுரைக்குப் போகிறதாய் சொல்லிக் கொண்டு போனார் என்று அவர் மனைவி கூறினாள். நாராயண ஐயர் தம் வீட்டுக்குத் திரும்பி, பித்தம் பிடித்தவர் போல விதியைத் தூஷித்துக்கொண்டே, தூங்காமல் இராவெல்லாம் விழித்திருந்தார்.

மறுநாட்காலை பதினொரு மணியிருக்கும். நாராயண ஐயர் ஊரெல்லாம் சுற்றி தமது கதையை விளம்பரம் பண்ணிவிட்டுத் திரும்பி வருகையில், ஒருவண்டி வருகிறதைக்கண்டு "அடே, வண்டி எங்கே போய்விட்டு வருகிறது?" என்று வண்டிக்காரனைக் கேட்க அவன் "சாமி, வெங்கட்டராம ஐயரும் அவர் பொஞ்சாதியும் தனபுரிக்குப் போனாக அவர்களைக் கொண்டிவிட்டுட்டு வாறேன்" என்றான்.

"வெங்கட்டராம ஐயரும் அவர் பெண்டாட்டியுமா? அவன் பெண்டாட்டி இங்கே யிருக்கிறாளடா செக்குலக்கைபோல. உளறாதே சரியாய்ச் சொல்லடா"

"சரியாத்தான் சொன்னேஞ்சாமி அவரும் அவர் சமுசாரமும் தான் போனாக" என்றான் வண்டிக்காரன்.

இதைக்கேட்டதும் நாராயண ஐயருக்கு திடீரென்று ஒரு எண்ணம் தோன்றி "எந்த வீட்டிலிருந்து அவர்கள் வந்தார்கள்?" என்று கேட்டார். வண்டிக்காரன் "காலம்பர கோழி கூப்பிடுற சமயம் வெங்கட்டராம ஐயர்

வந்து என்னை வண்டி பூட்டச் சொல்லி கூடவே அழைத்து வந்தார். அதோ யிருக்கே வீடு அந்த வீட்டுக்கு வந்து அவர் சம்சாரத்தையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டுப் போனோம்; என்று கூறி, நாராயண ஐயரின் வீட்டைச் சுட்டிக்காண்பித்தான். அப்பொழுதுதான் நாராயண ஐயருக்கு நடந்த விஷயமின்னதென்று விளங்கினது.

"அடே வெங்கட்டராமா, தடிக்கழுதே, நாயின் மகனே, உன் உயிரை வாங்கிட்றேன் பாரடா, தறுதலைப்பட்டி மகனே" என்று வெங்கட்டராமன் தன் எதிரில் இருப்பது போல, நாராயண ஐயர் கோபித்துக் கூச்சலிட்டார்.

வண்டிக்காரன்.—"யாரை வையிறிய சாமி என்னத்துமாக வையிறிய்?"

நாராயண ஐயர்.—"அடே நீகாண்பித்த வீடு என்னுடைய வீடடா; அந்த வெங்கட்டராமன் என்பெண்டாட்டியை அழைச்சுக்கிண்டு, வீட்டிலிருந்த சாமான்களையும் எடுத்துக்கொண்டு போயிட்டான். நான் இதற்கு என்ன செய்யறது?"

வண்டிக்காரன்.—"ஐயோ, சாமி! அவர் உங்க பாவத்திலேயா கையை வைச்சிட்டாரு. எனக்குத் தெரியாதே, நான் அது அவர் சம்சாரமெண்ணல்லோ நினைச்சிருந்தேன்." என்று சொல்லிவிட்டு வண்டியை நடத்திக் கொண்டு போகையில் "வெங்கட்டராம ஐயர், யார் பெண்டாட்டியைக் கூட்டிக்கொண்டு போனாலும் போகட்டும். எனக்கு இரண்டு ரூபாய்க்கு நாலு ரூபாய் வாடகை கொடுத்தாரே. அவர் நல்லாயிருக்கணும்" என்று எண்ணிக் கொண்டுபோனான்.

நாராயண ஐயர் உடனே திரும்பி இராமசுவாமி

தீக்ஷிதர் வீட்டுக்குப்போய் அவரைக்கண்டு"கேட்டியளோ சங்கதியை, அந்தப்பயல் வெங்கட்டாராமன் ஆத்துக் காரியை அழைச்சுக்கிண்டு போயிட்டானே. நான் என்ன செய்யறது" என்று ஓலமிட்டார்.

இராமசுவாமி தீக்ஷிதர்.—"என்ன? வெங்கட்டாராமன் ஆத்துக்காரியை அழைச்சி கிண்டு போயிட்டானு? அவன் ஆத்துக்காரியை அழைச்சி கிண்டு போறுன் அல்லது சும்மா போறுன். உமக்கென்ன காணும் நீர் என் கத்துறீர்?"

நாருயண ஐயர்.—"நீங்களுமா என்னைப் பரியாசம் பண்றீயள்? அவன் ஆத்துக்காரியைப் பற்றியா நான் சொல்றேன் (பல்லைக் கடித்துக்கொண்டு) ஐயோ அந்த நாசமாய்போற பயல் என் பெண்டாட்டியையல்லோ அழைச்சிக்கிண்டு போய்விட்டான். இருந்த பணம், நகையெல்லாம் அந்தமுண்டை தூக்கிக்கிண்டு போயிட்டாளே. நான் இனிஎன்ன செய்யப்போகிறேன்?" என்று கூச்சலிட்டார். இராமசாமி தீக்ஷிதர் ஆச்சரியடைந்து, நாருயண ஐயரை உட்கார வைத்து பலகேள்விகளால் நடந்தன யாவும் அறிந்துகொண்டு, அவருக்கு ஆறுதல் சொன்னுர். கடைசியில் அவ்வூர்வீரபாலன் சேர்வையிடம் சங்கதியைத் தெரிவித்து, ஓடிப்போன துரோகிகளைத் தேடிப்பிடித்து, பணத்தையும், நகைகளையும் மீட்டு வரும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

பன்னிரண்டாவது அத்தியாயம்

"கிழட்டுநாரி ஒழிந்தால்தான் சுகம்"

ஒருவாரத்திற்குப் பின் சுப்பையாவுக்கும் சொக்கலிங்கம் செட்டியார் மகளுக்கும் முத்துப்பட்டணத்திலே கலியாணம் நடந்தது. நகரவைசியர் கலியாணங்களில் காணப்படும் பலவகைச் சிறப்புகளுடனும் வைபவங்களுடனும் அக்கலியாணம் இனிது நிறைவேறிற்று. விவாகச்சடங்குகளெல்லாம் முடிந்தபின் மாப்பிள்ளையும் பெண்ணும் தங்கள் சொந்த வீட்டுக்கு வந்தார்கள். சிலவாரங்கள் வரை எல்லாரும் சந்தோஷமாய் வாழ்ந்திருந்தனர்.

ஆனால் அந்த நிலைமை நீடித்திருக்கவில்லை. சீக்கிரமே செல்லமைக்கும் அவள் மருமகள் கண்ணம்மாளுக்குமிடையில் ஓர்வித யுத்தநிலைமை ஏற்பட்டு விட்டது. நாள் தவறுவல் சில்லறைச் சண்டைகள் நடந்துவந்தன. தன் மருமகள் என்னென்ன வழிகளில் சிறுபாடு சேர்க்கிறாள் என்று ஆராய்ச்சி செய்வதே செல்லம்மையின் தத்துவ ஆராய்ச்சியாயிருந்தது. சுப்பையாவோ இவைகளையெல்லாம் கவனியாதவனாக ஐயாசாமி ஐயர் காபிகிளப்பில் போய் சூதாடுவதிலும், மஞ்சிவிரட்டு, நாடகம் முதலிய வைகளுக்கு விஜயம் செய்வதிலும் தன் காலத்தைக் கழித்து வந்தான். இப்படிச் சில மாதங்கள் சென்றன. செல்லம்மை வேலையொழிந்த நேரங்களில் செய்கிற ஓலைப் பெட்டிகளையும், பாய்களையும் கரையான்களுக்கு விருந்தாக ஓர் அறையில் போட்டு பூட்டிவைப்பது வழக்கமென்று ஏற்கனவே கூறியுள்ளோம். இந்த அறை தனக்குக்

7†

கிடைத்தால் அதில் சாமான்கள் நிறைத்து வைக்கலா மென்று கண்ணம்மாளுக்கு எண்ண முண்டாயிற்று. உடனே வீட்டுவேலை செய்யும் சிறுபெண்ணை செல்லம்மை யிடம் அனுப்பி அந்த அறையைக் காலிசெய்து தரும்படி சொன்னாள். இதைக் கண்ணம்மாளின் குறும்புத்தன மென்றே சொல்லவேண்டும். செல்லம்மாளுக்கு இதைக் கேட்கவும் தலைகால் தெரியாமல் கோபம் வந்து விட்டது. நேற்றுவந்த சிறுக்கி, நான் சாமான் வைத்திருக்கும் அறையைக் காலிசெய்து கொடுக்கச்சொன்னாளே. என்ன ஒரு நெஞ்சுத்துணிகாம்' என்றுகூறி நாகம்போல்சீறி அந்த வீடெல்லாம் எதிரொலிக்கும்படி பேரிரைச்சல் போட்டு காரசாரமான வார்த்தைகளைப் பிரயோகித்துக் கர்ணகடூரமாய்ப் பிரசங்கிக்க ஆரம்பித்து விட்டாள். செல் லம்மாள் தன் பிரசங்கத்துக்கு முன்னுரைகூறி முடியுமுன் கண்ணம்மாள் ஆச்சி கனல்போல் கொதித்தெழுந்து அரைச்சேலையை வரிந்துகட்டி மேல்சேலையைக் காற்றில் விட்டு அட்டகாசம் செய்து அதட்டினாள் மாமியாரை. எதிருக்கு எதிராக இரைந்துமே கூச்சலிட்டாள். சொக்க லிங்கம் செட்டியார் மகள் கண்ணம்மாள் எந்தனுக்குச் சொல்லுவாயோ வசையென்று சுருக்கென்று தைக்கும் திட்டுகளைச் சொரிந்து நின்றாள். இதற்கெல்லாம் செல் லம்மை ஒரு சிறிதும் இளைக்கவில்லை. அரைச்சேலை அரை யிலிருக்க, மேல்சேலை தரையில் புரள, அவள், முற்றத் தில் நின்றுகொண்டு திட்டுக்குத்திட்டு தவறாமல் திருப்பி விட்டாள். மாமிக்கும் மருகிக்கும் மகா சண்டை நடக் கிறது. கடலொலிபோல இந்தச் சண்டையொலி கேட் கிறது. இருவர் குடும்பங்களிலும் பாட்டன் பூட்டன்

வரை வாழ்த்துதல் போகிறது. அப்பனுக்கும் ஆத்தாளு க்கும் அருமையான உறவினருக்கும் அன்புடனே ஏச்சு களைப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். ஊரிலுள்ள ஆண்களை யெல்லாம் ஒருவருக்கொருவர் மாப்பிள்ளை முறையாக மனமுவந்து மாற்றிக்கொண்டார்கள். இப்படி சண்டை போட்டுக்கொண் டிருக்கையில் செல்லம்மைக்குக் கோபம் அதிகரித்து அடுப்பண்டை நின்றிருந்த கண்ணம்மாளின் தலைமயிரைப் பற்றியிழுத்தாள். உடனே இவள் கொண் டையைக் கண்ணம்மாள் பற்றியிழுக்க இருவரும் கீழே விழுந்தார்கள். விழுந்ததில் அடுப்பிலிருந்த உலைப்பானை உடைந்து அதிலிருந்து வெளிப்பட்ட கொதிதண்ணீர் இருவர் காலையும் சுட்டுவிட்டது. இதற்குள் இவர்கள் போடுங் கூக்குரலைக்கேட்டு அண்டை அயலார் ஓடிவந்து, அன்புடனே ஒருவரை யொருவர் கட்டிப்புரளும் மாமி யையும் மருமகளையும் விலக்கிவிட்டு சண்டையை அமர்த்தி னார்கள். இருவர் காலிலும் சுடுதண்ணீரால் கொப்பளம் கண்டிருந்ததால் அந்த எரிச்சலில் இவர்கள் மனவெரிச் சல் மறைந்து போயிற்று.

அன்று மத்தியானம் சுப்பையா சீட்டுக்கச்சேரி முடி ந்து வீட்டுக்கு சாப்பாட்டுக்கு வந்தபொழுது கண்ணம் மாள் நடந்த விஷயத்தை தன்னிஷ்டம்போல் மாற்றியும் திரித்தும்கூறி செல்லம்மாள்மேல் அபாண்டமாய்த் தோ ஷாரோபணம் செய்து, தன் அருமை சாமான்களெல்லாம் வைக்க இடமின்றிக் கெட்டுப்போவதாகவும், அவைகளைப் பத்திரப் படுத்துவதற்கு செல்லம்மை தற்சமயம் ஓலைப் பெட்டி யடைந்து வைத்திருக்கிற அறையைக்கொடுக்கும் படி செய்யவேண்டுமென்றும் கேட்டாள். இதைக்கேட்ட

தும் சுப்பையா, தன் மனைவிக்கு இவ்வளவு மனவருத்தம் உண்டாக்கினுளே யென்று செல்லம்மைமீது கோபங் கொண்டு அவளைக் கூப்பிட்டு அந்த அறையின் திறவு கோலை கொடுக்கும்படி கேட்டான். செல்லம்மாள் திறவு கோலை கொடாமல், திரள்திரளாகத் திட்டுகளைத் தான் கொடுத்தாள். சுப்பையாவுக்குக் கோபம் மூண்டது. அவன் எழுந்துபோய் செல்லம்மைக்கு ஒரு உதைகொடுத்தான். அவள் கூச்சலிட பின்னும் அவளை அடித்து உபத்திரவம் செய்து அவள் ஓலைப்பெட்டிகள் வைத்திருந்த அறைச்சாவியை அவளிடமிருந்து பலவந்தமாய்ப் பிடுங்கிக்கொண்டுவந்து கண்ணம்மாளிடம் கொடுத்துவிட்டான். அவள் உடனேபோய் அந்த அறையைத்திறந்து அதனுள்ளிருந்த ஓலைப்பெட்டிகளையும் பாய்களையும் எடுத்து முற்றத்தில் எறிந்துவிட்டு தன் சாமான்களைக் கொண்டுபோய் அதனுள்வைத்து கதவைப்பூட்டி சாவியை வேறொருவருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்துக்கொண்டாள்.

அடியுண்ட செல்லம்மை பெருங்கூச்சலிட்டு அழுது கொண்டுபோய் அருணாசலம்செட்டியாரிடம் முறைப்பாடு செய்தாள். அவர் தனக்குள்"அடிபட்டாளா முண்டை, சரி சரி, அப்படித்தான் படவேண்டும்" என்று அன்பொழுக நினைத்துக்கொண்டு, வெளியாங்கமாய் "துஷ்டப்பயல் இப்படியும் செய்வானு? நான் இதையெல்லாம் உத்தேசித்துத் தான் சுவீகாரம் செய்ய வேண்டாம், வேண்டாமென்று கிளிப்பிள்ளைக்குச் சொன்னமாதிரி சொன்னேன். அதைக் கேட்டீர்களா? நான் சொன்னதெல்லாம் கெடுதிக்குச் சொன்னேனென்று விபரீதமாய்த் தோன்றினது. இப்பொழுது என்ன செய்கிறது. படவேண்டியதைப் பட்டுத்

85601

தான் தீரவேண்டும். "கழுதைக்கு வாழ்க்கைப்பட்டு உதைக்கு அஞ்சலாமா?" என்று மரமேறி விழுந்தவனை கிடாவேறி மிதிப்பதுபோல ஆறுதலான வசனங்களைப்புகன்றார்.

சுப்பையாவின் அடிகளைவிட அருணாசலம் செட்டியாரின் ஆறுதல் மொழிகள் செல்லம்மைக்கு அதிகவருத்தத்தை தந்தன. அவள் அதனைப் பொறுக்கமாட்டாதவளாக கண்ணீரை ஆறாகப் பெருக்கினாள். தன் தலைவிதியை நொந்து தூஷித்தாள். "இப்படியெல்லாம் நான் கஷ்டப்படவேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கிறதா? எனக்கு அறிவுவந்த பிராயமுதல் இதுவரையில் துக்கத்தையன்றி நான் சுகத்தைக் கண்டதில்லையே. எனக்கு கலியாணஞ்செய்து வைப்பதாகக்கூறி என் அருமைப் பெற்றோர் என்னை முப்பதினாயிரம் ரூபாவுக்கு ஒரு புருஷனுக்கு விற்றுவிட்டார்கள். என்னை விலைக்குவாங்கின அதாவது கலியாணம் செய்துகொண்ட என் நாயகர் பணந்தேடுவதிலேயே கண்ணுங் கருத்துமாய் பரதேச சஞ்சாரஞ்செய்து வந்தார். நான் வீட்டிலே இல்லாளாக—இல்லறவாழ்வும் பேறுகளும் இல்லாளாக—வெறுமே என் காலத்தைக் கழித்துவந்தேன்.

இல்வாழ்வின் கஷ்டத்தையேயன்றி இன்பங்களைநான் கண்டதில்லை. குதலைமொழி பேசும் குழந்தைகளைப் பெற்றதில்லை. தாலியைச் சுமந்து திரிந்த கஷ்டமொன்று தவிர எனக்கும், கணவனைத்துறந்த ஓர் கைம்பெண்ணுக்கும் கடுகளவு வித்தியாசமு மிருக்கவில்லை. கடைசியில் என்னை விலைக்குக்கொண்ட என் கணவனும் விண்ணுலகுபோய் விட்டார். என் தாலிச் சுமையும் அதோடு இறங்கிற்று. என் கணவனுடைய சொத்துகளுக்கெல்லாம் நானே எஜ

மானியானேன். அதனால் என் மைத்துனருக்குப் பகையு மானேன். அவர் செட்டி குல யோக்கியதைவிடுத்து என் சொத்துக்களை அபகரிக்க எண்ணங்கொண்டார். இந்தச் சொத்துக்களை ஆண்டனுபவிக்க ஒரு பிள்ளை வேண்டு மென்று சுவீகாரஞ் செய்தேன். அவனுக்கு நாளொரு நல்லபெண்ணைக் கலியாணம் செய்து வைக்கலாமென முயற்சித்ததில் அது தடைப்பட்டுப் போயிற்று. என் மைத்துனன் என்ன எண்ணத்தோடேயோ இந்தப் பட்டிக் கழுதையைக் கொண்டுவந்து கலியாணம் செய்து வைத்து அதனால் இந்தக்கோரணிகளெல்லாம் உண்டாயிருக்கின்றன. அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டு, இந்தப்பயல் என்னைக் கைநீண்டி அடித்து விட்டான். குடிக்கக் கஞ்சியற்றுக் கிடந்த இந்தக் கழுதையை என் சொத்துக் கெல்லாம் அதிபதியாக்க, அது என்னையே அடித்து அவமானஞ் செய்துவிட்டது. நான் வளர்த்த கடாவே என் மார்பில் பாய்ந்தது. ஈசனே நான் இதற்கென்ன செய்வது? இது மாத்திரமா? என் புருஷன் பாடுபட்டுத் தேடின பணத்தை யெல்லாம் இந்தப் பாவிப்பயல் கண்ட படி செலவு செய்து அழிக்கிறான், என் மைத்துனரோ தனக்கு வராத சொத்து அழிந்துபோகட்டும் என்று எண்ணினவர்போல இதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார்." என்று செல்லம்மை எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள்.

அதன் பின் செல்லம்மை குடும்ப விஷயங்களை வெகு கண்டிப்பாய்க் கவனித்து வரலானாள். கண்ணம்மாளின் போக்கும், வரவும், பேச்சுகளும் செல்லம்மாளின், கூர்மையான புலன்களுக்கு மறைவாயிருந்ததில்லை.

சுப்பையாவின் செலவு கணக்குகளெல்லாம் செல்லம்மையால் பரிசோதிக்கப்பட்டன. சூதாட்டம், நாடகம், முதலியன முக்கியமான காரியங்களுக்கு பெருந்தொகை செலவாகியிருந்ததைக் கண்டு, செல்லம்மை பேரிரைச்சல் போட்டாள். ஆனால் அதெல்லாம் செவியுடன் காதில் ஊதின சங்குபோல பயனற்றதாய் முடிந்தது. சுப்பையா தன் மாமனுருக்கு முப்பதினுயிரம் ரூபா கடன் கொடுத்தான். இது சங்கதி செல்லம்மைக்குத் தெரியாமலிருந்தது. செலவு குறிப்பைப் பரிசோதித்த பொழுது தான் இந்த ரகசியம் வெளிப்பட்டது. இதற்காக செல்லம்மை மூன்று நாலு நாள் இடைவிடாமல் வாய்ச் சண்டை நடத்திக்கொண்டிருந்தாள். சுப்பையாவுக்கு வீட்டுக்குள் காலெடுத்து வைக்க முடியாதபடி அவ்வளவு மும்முரமாய் சண்டை நடந்தபடியால், அவன் அந்த நாலு நாட்களும், அங்குள்ள ஓர் பார்ப்பன சாப்பாட்டு விடுதியில் சாப்பிட்டு விட்டு ஐயாசாமி ஐயர் காபிகிளப்பில் போய் படுத்துக் கொள்வான். சில தினங்களுக்குப் பின் செல்லம்மை கானுடுகாத்தானிலிருக்கும் தன் தங்கையைப் பார்த்து வரப்போனுள். அவள் போய் விட்டாளென்று கேள்விப்பட்ட பிறகுதான் சுப்பையா வீட்டுக்குப்போனுன்.

கண்ணம்மாள் தன் மாமியாரைப் பற்றி பலமான முறைப்பாடு செய்தாள். செல்லம்மை, இருக்கும் வரை தங்களுக்குத் தொந்தரவு தான் என்றும் ஊரிலே நடக்கிற எந்தக் கொள்ளை நோயாவது அவளைக்கொண்டு போகாதாவென்றும், இந்தக் கிழட்டு நாரி ஒழிந்தால் தான் சுகமென்றும் அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். சுப்

யையா அவள் ஒழிந்தால் நல்லதென்று மாத்திரம் சொன்னுனே தவிர அதற்கதிகமாய் ஒன்றும் எண்ணவில்லை. கண்ணம்மாளோ வென்றால், தன் மாமியார் சீக்கிரம் தொலைய வேண்டுமென்றும், அப்படிச் செய்யாமல் அவள் இன்னும் பல்லாண்டுகள் உயிரோடிருப்பதாகப் பிடிவாதம் செய்வாளேயானல் அவளைப் பலவந்தமாயாவது எமபுரம் அனுப்பிவைக்க வேண்டுமென்றும் தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள். ஆனல் இந்தத் தீர்மானத்தைப் பற்றித் தன் புருஷனிடம் சொன்னவளல்ல.

இது இப்படியிருக்க. செல்லம்மை வீட்டுக்கு அடுத்த வீட்டின் முன் தாழ்வாரத்தில் கண்ணைய முதலியார் என்ருெருவர் குடியிருந்தார். இவருக்கு ஏறக்குறைய இருபத்தைந்து வயதிருக்கலாம். ஐந்தரையடி உயரமும், அதற்கேற்ற பருமனும் சிவந்த மேனியுள்ளவராய்ப் பார்க்க லட்சணமாயிருப்பார். எப்பொழுதும் சிறப்பாக உடுத்திக் கொண்டிருப்பார். "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பதுபோல இவர் காலில் மாட்டியிருக்கும் கிறுக்கு ஜடா இவர் அடுத்த வீதியில் வரும் பொழுதே இவருடைய வருகையைப் பற்றி எல்லாருக்கும் விளம்பரஞ் செய்துவிடும். இவர் சேலை வியாபாரஞ் செய்து வந்தார். தமக்கு சித்த வைத்தியம் தெரியுமென்றும் இவர் சொல்லிக் கொள்வதுண்டு. செட்டி நாட்டில் தான் யாரும் வைத்தியரெனத் திரியலாமே. விஷபேதிக்கு நேர்வாள மாத்திரை கொடுக்கிற சமர்த்தர்கள் கூட தாங்கள் தான் தன்வந்திரிக்கு வைத்திய உபதேசம் செய்ததாகக் கூறிக்கொண்டு திரிவதை இங்கு காணலாம். எனவே கண்ணைய முதலியின் சித்தவைத்தியத்தை ஆதரிக்க பல பித்த

வைத்தியக்காரர் இல்லாமல் போகவில்லை. ஆனாலும் சேலை வியாபாரம் தான் அவருக்கு மெத்த பிரீதி. ஏனெனில் அவரிடம் ஜவுளி வாங்க வரும் வாடிக்கைக்காரர்களெல்லா ரும் ஸ்திரிகள். அதிலும் பெரும்பாலோர் இளம் வயதுள்ள பெண்களாயிருப்பர். அவர்களுடன் உல்லாசமாய்ச் சல் லாபித்துக்கொண்டே சேலைகளின் விலையை இரண்டு மூன்று பங்கு உயர்த்தி வைத்து அவர்கள் தலையில் கட்டி விடுவார்.

விக்கிரமாதித்த ராஜனைப்போல யாராவது அந்தச் சேலைகளின்மேல் ஒரு வேதாளத்தை அல்லது குட்டிசாத் தானை ஏற்றி, அவற்றின் சரித்திரங்களைச் சொல்லச் செய் தல் அந்தச் சேலைகள் கண்ணைய முதலியாரையும், அவரி டம் ஜவுளி எடுக்கும் பெண்களையும் பற்றிப் பல விநோத விஷயங்களையும், வெறுக்கப்படத்தக்க விபரங்களையும் தெரி விக்கக்கூடும். அவர் சேலை வியாபாரத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வந்தார். வைத்தியத் தொழிலை விருத்தி செய்ய முயற்சிக்கவில்லை. அதனால் பல நோயாளிகள் அகால மரணத்துக்கு ஆளாகாமல் தப்பினார்கள். கண்ணம் மாள் இவரிடம் பல தடவைகளில் வந்து ஜவுளி யெடுத்துக் கொண்டு போயிருந்தாளாகையால் இவரை நன்றாயறி வாள். எனவே தன் மாமியாரை எமபுரம் அனுப்ப வேண்டு மென்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவளுக்கு கண் ணைய முதலியின் ஞாபகம் வந்தது. உடனே அவரிடம் சென்று தனது நோக்கத்தைத் தெரிவித்துத் தன் மாமியை ஒழிப்பதற்கு நல்ல வைகுண்ட மாத்திரை தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டாள்.

கண்ணைய முதலியார் வைத்திய சாமர்த்தியத்தினால்

சில சமயல்களில் நோயாளிகள் மாணமடைந்த துண்டென் ருலும், ஒரு ஆளைக் கொல்லவேண்டுமென்று மருந்து கொடுக்க அவர் மனம் இணங்கவில்லை. கண்ணம்மாள் மேல் அவருக்கு அத்தியந்த அருவருப்புண்டானது. அப் படிப்பட்ட மருந்து செய்து கொடுக்க முடியாதென்று கூறினர். கண்ணம்மாள் கொஞ்ச நேரம் யோசனை செய்து கொண்டிருந்து விட்டு, "கொடுக்கமுடியாதா? என்று கேட்டாள்.

"ஆம். அதற்கு சந்தேகமே கிடையாது."

கண்ணம்மாள் அவரைக் கூர்மையாய்ப் பார்த்துக் கொண்டு "சரி, நான் கேட்டபடி மருந்து செய்து தாமுடி யாவிட்டால், நீரும் இந்த ஊரில் குடியிருக்க முடியாது." என்று கோபமாய்ச் சொன்னாள்.

"என்ன காரணத்துக்காக?" என்று கண்ணைய முதலி யார் கேட்டார்.

"நான் விபரமாகச் சொல்ல வேண்டுமா?"

"ஆமாம். விபரமாகச் சொன்னால் தானே எனக்கு விளங்கும்."

"சரி, சொல்லுகிறேன். நீர் இந்த வீட்டில் குடி யிருந்து வருகிறீர். பெண்கள் இருக்கிற வீடுகளில் இந்த மாதிரி அன்னிய புருஷர் குடியிருக்கும்படி இடங் கொடுப் பதே சரியல்ல. இதனல் சிலவிடங்களில் கெடுதியான சம் பவங்கள் நேரிட்டிருக்கின்றன. அப்படியிருக்க, நீர் சேலை வியாபாரம் செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு உம் மிடம் சேலை வாங்கவரும் பெண்களிடம் பரிகாசம் செய்து பேசுவதும், சிரிப்பதுமாக நடந்து வருகிறீர். இன்னும் சில விஷயங்களும் நான் கேள்விப் பட்டதுண்டு. இதை

யெல்லாம் வெளியிட்டால் நீர் உமது ஜவுளி மூட்டையைக் கட்டிக்கொண்டு ஊரை விட்டு ஒருவருக்கும் தெரியாது போய்விட வேண்டியதுதான். ஆகையால் நான் கேட்ட படி ஓர் நல்ல மருந்து தயாரித்து கொடுத்தால் இந்த ஊரி லிருக்க முடியும். இல்லாவிட்டால் உம்மை இந்த ஊரை விட்டுத் துரத்த வழி தேடுவேன்." என்று கண்ணம்மாள் வெகு கண்டிப்பாய்ச் சொன்னுள்.

நாராசத்தைக் காய்ச்சி வார்த்ததுபோல இந்த வார்த் தைகள் கண்ணைய முதலியாரின் செவியில் புகுந்தன.

கண்ணம்மாள் தன் சொன்னபடி நிறைவேற்ற வல் லாளென்பதும் அவர் மனதில் பட்டது. தான் உல்லாச மாக வாழ்ந்து வரும் அந்த ஊரைவிட்டுப் போய்விட அவருக்கு சிறிதும் மனமில்லை. ஆகையால் இந்தக் காத கிக்கு ஏதாவது ஒருபோக்குக் காட்டி அவளைச் சமாதா னப்படுத்தவேண்டுமென்று தனக்குள் எண்ணிக்கொண்டு,

"சரி கண்ணம்மாள் ஆச்சி. எனக்கு இந்த ஊரை விட்டுப்போக இஷ்டமில்லை. ஆகையால் நீங்கள் சொன்ன படி மருந்துசெய்து தருகிறேன். அதற்காக நீங்கள் நூறுரூபா கொடுக்கவேண்டும்" என்ருர்.

கண்ணம்மாள் அப்படியே நூறு ரூபா கொடுப்ப தாக ஒப்புக்கொண்டாள். நூறு ரூபாவையும் வாங்கிக் கொண்டு கண்ணைய முதலியார் சிறிது அபினை எடுத்து கண்ணம்மாளிடம் கொடுத்து அது மிகவும் கொடிய ஓர் பாஷாணமென்றும், அது உட் சென்ருல் உடனே மயக்க முண்டாகி வெகு சீக்கிரத்தில் காரியம் முடிவடைந்துவிடு மென்று கூறினர். அவள் அதை வாங்கிக்கொண்டுபோய் செல்லம்மாள் தின்பதற்கென்று வாங்கிவைத்திருந்த வெல்

லத்திலூட்டிவைத்து விட்டாள். மறுநாள் கண்ணம்மா ளின் தூண்டுதலால் சுப்பையாவும் அவளும் முத்துப்பட் டணம்போய் விட்டார்கள். அவர்கள் போன இரண் டாம் நாட்காலையில் செல்லம்மாள் தான் வாங்கிவைத்தி ருந்த வெல்லத்தில் ஒருதுண்டு எடுத்துச் சாப்பிட்டாள். துர்அதிர்ஷ்டவசமாய் கண்ணம்மாள் அபினியூட்டிவைத் திருந்த வெல்லக் கட்டியே அதுவாயிருந்தது. சிறிது நேரத்துக்குள் அவளுக்கு ஓர்வித மயக்கம்தோன்ற அவள் கதவைச் சாத்தி தாளிட்டுக்கொண்டு ஓர் அறையில் போய்ப் படுத்துக்கொண்டாள். அன்றெல்லாம் சிறிதும் பிரக்ஞை யில்லாமல் கிடந்தாள். மறுநாட் காலையில்தான் அவளுக்கு தன்னுயிர் வந்தது. ஆனால் மயக்கம் முழுவ தும் தீரவில்லை. தலைப்பளுவாய்த் தோன்றியது. எழுந் திருக்க முடியாமல் முனங்கிக்கொண்டு படுத்திருந்தாள். அதன்பின் நடந்தனவற்றை முதல் அத்தியாயத்தில் விவ ரித்திருக்கிறோம்.

பதிமூன்றாவது அத்தியாயம்

"சிங்கக்குட்டி அப்படித்தானிருக்கும்"

ஒரு நாட் காலை 11-மணியிருக்கும். ஐயாசாமி ஐயர் காபிக்கடையில் சீட்டுக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. ஓர் எளிய மனிதன் அங்கு வந்து தனக்கு மிகவும் பசியா யிருக்கிறதென்றும் ஏதாவது ஆகாரம் கொடுத்தால் பெரி தும் புண்ணிய முண்டாகுமென்றும் பரிதாபமாய்க் கேட் டுக் கொண்டான். அவன் கண்கள் இரண்டும் குழிவிழுந்து

கன்னங்கள் வற்றி, பசியினால் மெலிந்து நிற்கக்கூடப் பலமில்லாதவனாக யிருந்தான். அப்பொழுது அங்கிருந்த ஒருவர் அவனைப் பார்த்து "சத்திரத்துக்குப் போனால் சாப்பாடு கிடைக்குமே?" என்றார்.

ஏழை—ஐயா, சத்திரத்திலே எங்களுக்கு யாரையா சோறு கொடுக்கப் போகிறார்கள்? பிராமணாளுக்குத்தான் அங்கு சாப்பாடு கிடைக்கும்."

முதலில் பேசினவர்.—"நீ சொல்வது வேடிக்கையாயிருக்கிறது. ஏழைகளுக்குத்தானே சத்திரம் வைத்து நடத்துகிறார்கள்?"

ஏழை.—"இல்லை, ஐயா, பிராமணர்களுக்குத்தான் சத்திரத்திலே சாதம் கொடுக்கிறாக? மற்றவர்களுக்கு, இராத்திரியிலே பிராமணாள் சாப்பிட்டு முடிந்தபின் மிச்சம் மீதி யிருந்தால் போடப்படும். அதை மனுஷன் சாப்பிட முடியாது.

முதலில் பேசினவர்.—"இது விபரீதமாயிருக்கிறது. ஏழைகளுக்குத்தான் சத்திரத்தில் சாதம் போடவேண்டுமே தவிர ஏழைகள் பசியினால் மடியும்படி விட்டு ஏழைகளல்லாத பிராமணருக்கு சாதம்போடுவது தருமமல்லவே.

இதைக்கேட்ட ஐயாசாமி ஐயர் ஆத்திரத்துடன் சொல்லுவார்.—"ஏனையா இப்படிச் சொல்றீர்? பிராமணர்களுக்காகத்தான் சத்திரங்கள் வைத்து நடத்தப் படுகின்றன. பிராமணருக்கு அன்னதானம் செய்வதுதான் புண்ணியமென்று சாஸ்திரம் சொல்றதே. அப்படியிருக்க நீர் ஏழைகளுக்கு மாத்திரம் சத்திரத்தில் சோறுபோட வேண்டுமென்று சொன்னால், குடிக்கக் கஞ்சியற்ற சூத்

திரக் கழுதைகளெல்லாம் வந்து நிறைஞ்சு போமே. அப்போ பிராமணன் என்ன செய்யறது ?"

முதலில் பேசினவர்.—"பிராமணன் என்ன செய்கிறது என்ற கேள்விக்கு இங்கு இடமே இல்லை. விஷயம் சத்திரத்தைப் பற்றியது. ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் உண்ணச் சோறும், உறங்கஸ்தலமும் கிடைக்கும்படியாகத் தான் சத்திரங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த தர்ம ஸ்தாபனங்களுக்கு ஏழைகளே உரிமையுள்ளவர்கள் "வறியார்க்கொன்றீவதே ஈகை"என்று ஆன்றோர் கூறியிருக்கிறார்கள். ஆகையால் சத்திரங்களில் ஏழைகளுக்குத்தான் சோறு போடப்பட வேண்டும். மற்ற சௌகரியங்களும் கொடுக்கப்படவேண்டும்."

ஏழை.—"ஏழையெளியது சத்திரத்துக்கிட்ட நெருங்க முடியாது. அப்படிப்போனாலும் அங்கேயிருக்கிற பிராமணாள் திட்டித் துரத்துகிறார்கள். ஐயா, நேற்று சாயந்திரம் இந்தவூர் சத்திரத்துப்போய் சாதம் கேட்டேன். அவ்வளவுதான் அங்கிருந்த ஒரு ஐயருக்குக் கோபம்வந்துவிட்டது. "சூத்திரக் கழுதைகளுக்கு அவிச்சுக்கொட்டத் தான் எங்களுக்கு வேலையோ ? சாதமுமில்லை கீதமுமில்லை. போபோ" என்று கடுகடுத்துத் துப் பேசினார். பேசினவர் நல்லாயிருந்திட்டுப் போறார். நான் பசியோடு தெய்வமே என்று திரும்பி வருகையில், வழியில் ஒரு செட்டியார் வீட்டில்போய் பசிக்குதென்று, வெளித்திண்ணையிலிருந்த செட்டியாரிடம் சொன்னேன். அந்தப் புண்ணியவான் நல்லாயிருக்கணும்; உடனே எனக்கு சாதம் கொடுக்கச் செய்தார்."

முதலில் பேசினவர்.—"சிவ சிவா இப்படியும் நடக்

குமா? பிச்சைக்காரன் சோற்றில் சனீஸ்வரன் புகுந்தாற் போல, ஏழைகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய பிச்சை சோற்றை இந்தப் பிராமணர்கள் ஆக்ரமித்து சாப்பிட்டு வயறு வளர்ப்பது கேவலம். கேவலம் மாத்திரமல்ல மகா பாதகமுமாகும். சத்திரம் வைத்து நடத்துகிற புண்ணிய சீலர்கள் இதனைக் கவனித்தல் வேண்டும். ஏழைகள் பசித்திருக்க - பட்டினியால் மடிய - அதைக் கவனியாமல் தொந்தி விரிந்து உப்பிப்போயிருக்கும் பிராமணருக்கு திருப்திகரமான சாப்பாடுபோடுவது தருமமா?"

ஐயாசாமி ஐயர்.—"சூத்திராருக்கும் சாப்பாடுபோடப் படுகிறது. இராத்திரி காலத்தில் போய்ப் பார்த்தாலல்லவா தெரியும்"

ஏழை.—"இராத்திரியிலும், பிராமணர் சாப்பிட்டு மீதமிருந்தால்தான் மற்றவர்களுக்கு ஏதும் கிடைக்கும். இரண்டுநாள் மூணு நாளைக்கு முன்னுள்ள மிச்சம் மீதிகளை ஒன்ருய்ச் சேர்த்துவைத்திருந்து கொண்டுவந்து போடுவதுமுண்டு."

ஐயாசாமி ஐயர்.—(கோபத்துடன் ஏழையைப் பார்த்து) "சரி உனக்கென்ன வேணும்?

ஏழை.—"ஐயா, பசியாயிருக்கிறது தயவு செய்து ஏதாவது பசிக்குக் கொடுக்கவேணும்"

ஐயாசாமி ஐயர்.—" இங்கு ஒண்ணுங் கிடையாது. வேறு எங்காவது போய்ப் பார். சரி, எழுந்து நட, போ போ" என்று அவனைத் துரத்தினர்.

முதலில் பேசினவர் நாலு அணுவை அந்த ஏழையிடம் கொடுத்து "இதைக்கொண்டுபோய் சாப்பாடு வாங்கிச் சாப்பிடு" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு

ஐயாசாமி ஐயரைப் பார்த்து "ஏழைகளெல்லாம் இப்படிக் கஷ்டப்பட, நீங்கள்போய் சத்திரத்திலே தொப்பை விரிந்துபோகும்படி சாப்பிடுகிறீர்களே இது உங்களுக்கு பாவமில்லையா ?" என்று கேட்டார்.

ஐயாசாமி ஐயர் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு "எங்களுக்கு ஏன் பாவம் வருகிறது. சத்திரத்தைக்கட்டி வைத்து எங்கள் காலிலே விழுந்து கூப்பிட்டுக் கொண்டுபோய் சம்பிரமமாயிருக்கச்செய்து சாதம் போடுகிறார்கள். நாங்கள் விலாப்புடைக்க சாப்பிடுகிறோம். ஏழைகளுக்கு சாப்பாடு நடக்கிற சமயத்தில் நாங்கள் போய் அந்தச் சாப்பாட்டைப் பிடுங்கிக்கொள்ளுகிறோமா? கிடையாது. வலிய வருகிற சீதேவியை நாங்கள் ஏன் காலால் உதைத்துத் தள்ளவேண்டும். நீங்கள் சொல்றது சரி. ஏழைகளுக்கு இரங்குவதுதான் தருமம். ஏழைகளுக்குத் தான் இப்படிப்பட்ட உதவிகள் செய்யப்படவேண்டும். ஆனால் சத்திரம்வைத்து நடத்துகிறவர்களல்லவா பாத்திரமறிந்து பிச்சையிடவேண்டும். அவர்களுக்கல்லவா இந்த யோசனை வேண்டும். அவர்கள் பிராமணருக்குச் சோறு கொடுத்தால்தான் தங்களுக்கு சொர்க்கவாசல் திறக்குமென்று நம்பிக்கொண்டு இவ்விதமெல்லாம் செய்து வருகிறார்கள். அதற்கு நாங்களென்ன செய்கிறது?" என்றார்.

அப்பொழுது சீட்டாடிக் கொண்டிருந்தவர்கள் கைதட்டி ஆரவாரஞ் செய்வதைக் கேட்டு ஐயாசாமி ஐயரும் மற்றவர்களும் தங்கள் பேச்சை நிறுத்தி விட்டு, என்னத்துக்காக அப்படி ஆரவாரம் செய்கிறார்களென்று பார்த்தபொழுது சுப்பையாவின் வலது காதில் ஈருள்ளி மாலை போடப்பட்டிருப்பதையும், எல்லாரும் சிரித்து

அவனைக் கேலி செய்வதையும், அவன் பல்லைக்காட்டிக் கொண்டு சிட்டுக் கலைத்துக்கொண் டிருப்பதையும் கண்டார்கள்.

ஐயாசாமி ஐயர் சுப்பையாவைப்பார்த்து, சுப்பையா இந்த மாலையைக்கொண்டுபோய் அந்தக் கதைசெய்கிற பெண்ணிருக்கிறாளல்லவோ அவளுக்குப்போடு. போட்டு நான் இன்று சீட்டாடி வெற்றிமாலை சூடினேன். அந்த மாலைதான் இது என்று சொல்லு'' என்றார்.

அதைக்கேட்டு வள்ளியப்பன் செட்டியார் என்பவர் "எந்தப் பெண், யார் அது? " என்று கேட்டார்.

"ஒருபெண் வந்து அடுத்தவூரில் கதா காலட்சேபம் செய்யப் போகிறாளாம். ஓர் தாசியின் மகளாம். நாளைக்கு காலட்சேபம் நடக்கிறதாம். அதற்கு நமது சுப்பையாபோகிறான். இந்தமாலையைக் கொண்டுபோய் அவளுக் கொடுத்தானென்றால், அவள் மயங்கிடுவாள் என்று சொல்றேன்'' என்றார் ஐயாசாமி ஐயர்.

சுப்பையா.—"ஏன் உளறுகிறீர். வாயை மூடிக் கொண்டு சும்மாவிரும். நான் இந்தமாலை போட்டுக் கொண்டு போகாவிட்டால், அவள் மயங்கமாட்டாளோ? உம்மைப் போல தொங்திவிழுந்த கிழமானால் விரும்பமாட்டாள். என்னைப்போல சிங்கக்குட்டியைக் கண்டவுடனே அவள் மயங்கிக் கீழேவிழுந்திட மாட்டாளா ?''

ஐயாசாமி ஐயர்.—"சிங்கக்குட்டிதான் சிங்கக்குட்டி. அன்றைக்கு டிராமாக்காரன் வள்ளியப்பனையும், உம்மையும் பார்த்து "உங்களுக்குப் புத்தியே யில்லையென்று சொன்னானே அப்பொழுது இந்தச் சிங்கக்குட்டி என்ன செய்து கொண்டிருந்தது?''

விளையாடிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர், "அப்பொழுது இந்தச் சிங்கக்குட்டி குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தது," என்றார். எல்லாரும் நகைத்தார்கள்.

சுப்பையா.—"அந்த கிராமக்காரப் பயலுக்கு நல்ல பாடம் படிப்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறது" என்றான்.

அன்று சாயந்திரம் சுப்பையாவும் அவனுடைய சினேகிதன் வள்ளியப்பனும் வண்டி போட்டுக் கொண்டு தாசிப் பெண் கதாகாலட்சேபம் செய்கிற அடுத்தவூருக்குப்போனார்கள். இவர்கள் மாத்திரமல்ல இன்னும் அனேக வைசிய வாலிபரும், ஆடவரும், அங்குசென்றார்கள். ஓர் இளம் பெண் அதிலும் தாசிமகள் கதாப்பிரசங்கம் செய்கிறாளென்றால், அந்தப் பிரசங்கத்துக்குப் போகாமல் தாமதிப்பவர்களும் உண்டோ? பிரசங்கம் எப்படி யிருந்தாலும் சரி, பிரசங்கம் செய்கிற பெண்ணின் அழகையாவது கண்குளிரப் பார்த்துவிட்டு வரவேண்டு மென்று பலர் போனார்கள்.

கதை நடத்தின பெண்ணுக்கு பதினேழு அல்லது ஒன்றிரண்டு அதிகமான வயதிருக்கலாம். கமலாவதி என்பது அவள் பெயர். அழகிய உருவமும் சிவந்தமேனியுமுள்ளவள். கதை நடத்துவதற்குவேண்டிய கல்வி சாமர்த்தியம் அவளுக்கு கிடையாது. ஆனால் வைசிய மண்டலத்திலே பெண் பாகவதர்கள் என்றால் அபிமானம் அதிக மல்லவா? ஆகையால் ஒருவரும் சரித்திரத்தின் குணம், குறைகளைப் பற்றிக் கவனிக்கமாட்டார்களென்று நம்பியே அவள் வந்திருந்தாள். அவள் நம்பிக்கையை கெடுக்கக்கூடாதென்று எண்ணியோ, அல்லது வேறெந்தக் கார

ணத்தினுலோ, அந்தக் காலட்சேபத்துக்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் அவள் நடத்தின சரித்திரத்தைக் கவனியாமல் அவளது அங்கலட்சணங்களையும், நடைநொடி பாவனைகளையுமே பார்த்துக் கொண்டிருந்தனர். கதைக்கு முன்னுரை கூறியபின் அவள் தன் கண்களைப் பூரண வல்லமையோடு அந்தச் சபையார்மீது திருப்பினுள். அந்தப் பார்வையினுல் பலருக்கு படுகாயமுண்டாயிற்று. பின்னர் அவள் தன்கைகளை ஆட்டியும், நீட்டியும் குலுக்கியும் பிரசங்கித்தபொழுது, நெஞ்சிழந்தவர்களும், மனஞ் சிதைந்தவர்களும், புத்தி சோர்ந்தவர்களுமாக சபையோரில் பலர் பட்டுவிழுந்தனர். வெற்றிலை மென்று கொண்டிருந்த சிலர் தங்கள் வெற்றிலையையும் மறந்து, கதை நடத்தும் பெண்ணேடு மனேவெளியின்கண்ணே சாயுஜ்யபதவியடைந்து விட்டமையால், அவர்கள் வாய்பிரதேசத்தில் வெற்றிலை நீர் பெருக்கெடுத்து கடைவாய் வழியோடி தோளின்மேல் கிடந்த வெள்ளிய பட்டு சால்வைகளை இரத்தாம்பர நிறமாக்கிக் கொண்டிருந்தது. ஒரு வாலிபனுடைய மனம் அவளைக் கண்டமாத்திரத்திலே எங்கோ காணுமற் போய்விட்டது, அது இருந்தவிடத்தில் கமலாவதியின் உருவமே நிறைந்து நின்றது. அவன் அவளைப் பார்த்தவண்ணமே உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒருவன் அவனைப்பார்த்து, "சுப்பையா சுப்பையா" என்று கூப்பிட்டும் அவனுக்கு கேட்கவில்லை. அப்படிக் கூப்பிட்ட வள்ளியப்பன் இதைப்பற்றி பின்வரிசையிலிருந்த ஐயாசாமி ஐயரிடம் சொல்ல, அவர் சிங்கக்குட்டி அப்படித்தா னிருக்கும் என்று கூறிச் சிரித்தார். வள்ளியப்பனும் புன்னகை செய்தான்.

பதினான்காவது அத்தியாயம்

சுப்பையாவும் கமலாவதியும்

இரண்டு நாட்களுக்குப் பின் கமலாவதியும் சுப்பையாவும் சென்னை பீச்ரோட் வழியாக மிகவும் விரைவாய்ப் போகிற ஒரு மோட்டார்காரில் போய்க்கொண்டிருந்தார்கள். இவர்கள் எப்படி இங்கு வந்தார்களென்றால், அன்று கமலாவதி கதாப் பிரசங்கம் செய்து முடிந்தபின், சுப்பையா, வள்ளியப்பன், ஐயாசாமி ஐயர் ஆகிய மூவரும் பல ஜித்து வித்தைகள் செய்து அவளைக்கண்டு பேசினார்கள். சுப்பையா மறுநாளும் அவளைச் சந்தித்துப் பேசி இருவரும் சென்னைக்குப் போவதென்று தீர்மானித்துக் கொண்டார்கள். அதற்காக சுப்பையா வீட்டுக்குப்போய் பதினாயிரம் ரூபா கொண்டுவந்தான். அந்தப் பணத்துடன் இருவரும் புறப்பட்டு சென்னைக்கு வந்து மோட்டார் வண்டியில் ஊர் சுற்றிக்கொண்டிருந்தனர். அப்படி மோட்டரில் போய்க் கொண்டிருக்கிறபொழுது கமலாவதி சொல்லுகிறாள்.— இந்தப் பட்டணத்தைச்சுற்றி மோட்டரில் வந்ததில் என்ன சுகம். இளைப்பும் தவிப்புந்தான் கண்ட பலனாயிருக்கிறது. சமீபத்தில் சமயபுரம் என்றோர் கிராமமுண்டு. அதில் என் தாய் வழி பந்துக்கள் இருக்கிறார்கள். கிராமம் சின்னதாயிருந்தாலும், எங்கேபார்த்தாலும் தென்னந் தோப்புகளும், வாழைத் தோட்டங்களும் நெல்வயல்களும் காணப்படும். சாலை மரங்களே ஓர் சோலைபோல தெரியும். வெள்ளாண்மைக்கோ, வீட்டு உபயோகத்துக்கோ, தண்ணீர் தட்டு கிடையாது. அந்தவூரில் நமக்கு ஒரு வீடு வாங்கிக்

கொண்டு அங்கு குடியிருந்தால் மிகவும் ஆனந்தமாயிருக்கும்" என்றுசொன்னாள். அப்படிச் சொல்லிக்கொண்டே அன்று காலையில் தான் முண்டனம் செய்து மழமழ வென்றிருந்த சுப்பையாவின் தலையில் தன்னிருகைகளாலும் மிருதுவாகத் தடவிக்கொடுத்தாள். கமலாவதியின் கைகள் தலையில் பட்டவுடனே சுப்பையாவின் நெஞ்சில் சங்கடமுண்டாயிற்று. தலை, கால் தெரியாமல் மயங்கினான். தான், காலைத் தரையில் ஊன்றியிருக்கிறானோ அல்லது சிரசுதான் தரையிலிருக்கிறதோ வென்று சுப்பையாவுக்கு சந்தேகம் ஏற்பட்டு அதை நிவர்த்திக்கும்படி கமலாவதியிடம், தன் கால் தரையிலிருக்கிறதா அல்லது தலை தரையிலிருக்கிறதா வென்று கேட்டான். இவனுடைய மயக்கத்தைக் கண்டு கமலாவதி கலுக்கென்று நகைத்து "உம்முடைய கால்கள் மோட்டரில் இருக்கிறது. ஆனால் தலையில் மண்தானிருக்கிறது என்றாள். சுப்பையா அவள் சொன்ன கருத்தை யுணராமல் தலையில் மண்ணிருக்கிறதோ வென்று பார்க்கும்படி தன்கைகளால் தலையைத் தடவிப்பார்த்து, தலை ஆகாயவெளியிலிருக்கிறது என்றான்.

கமலாவதி—"ஆமாம் நீர் சொல்வதும் சரிதான். உமது தலையில் ஆகாய வெளிதான் இருக்கிறது. வேறொன்றுமில்லை" என்றாள். இதைக்கேட்டதும் சுப்பையா மிகவும் சந்தோஷித்து, ஒரு பெண்ணால் இவ்விதம் பேசப்படும் பாக்கியத்தைப் பெற்றேனே என்று அகமகிழ்ந்து, அதை அடக்கமாட்டாதவனாய், நடுவீதியில் மோட்டரில் பேசுகிறதையும் மறந்து "கமலாவதி நீ மிகவும் சமர்த்தாய் பேசுகிறாய் என்று சொல்லி அவளைக்கட்டி ஆலிங்கனம் செய்ய எத்தனித்தான். அவள் நாணமடைந்து தன்னை விடுவித்

துக்கொள்ள முயற்சித்தாள். இப்படி இவர்கள் செய்து கொண்டிருக்கும் நடுவீதி யாலிங்கனத்தைக்கண்ட மோட்டர் டிரைவர் வாலிபனானதால், அவனுக்கு தேகமெங்கும் ஓர்வித கதகதப்புண்டாகி, நெஞ்சுக்குழியில் பலத்த சங்கடமேற்பட்டது. உடனே அவன் மோட்டரையும், மோட்டரை நடத்தும் சக்கரத்தையும் மறந்து இந்த விநோதத்தைக் கண்குளிரப் பார்க்கும்படி பின்பக்கம் திரும்பினான். அந்த அவசரத்தில், அவனே அறியாமலே அவன் கைகள் மோட்டரை ஓட்டும் சக்கரத்தை ஒரு பக்கமாய் திருப்பி விட்டன. இதனால் நடுவீதியில் நேராகப் போய்க்கொண்டிருந்த மோட்டர் இரதம் ஒருபக்கமாய் திரும்பி நடைபாதை மேட்டின்மேல் எகிறிப்பாய்ந்தது. அப்பொழுது சுப்பையாவின் ஆலிங்கனத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும்படி முயற்சித்த கமலாவதியின் வலதுகை சுப்பையாவின் தலையில் மோத, அந்தக் கையில் கிடந்த கண்ணாடி வளையல் உடைந்து, அவன் தலையில் வெட்டி இரத்தம் பெருகச்செய்தது. இதெல்லாம் இரண்டொரு விநாடிகளுக்குள் சம்பவித்தன. மோட்டர் டிரைவர் சமர்த்தனானதால், மனஞ் சிதறாமல் தன்னைச் சமாளித்துக்கொண்டு, மேட்டின்மேல் துள்ளிக் குதித்த மோட்டரை திருப்பி சரியான பாதைக்குக் கொண்டுவந்தான். இல்லாவிட்டால், மோட்டரும் அதிலிருந்தோரும் பாதைக்குப் பக்கத்திலுள்ள மணல் வெளியில் தூராகிருதப் பிரவேசம்செய்து காடாலிங்கனம், கல்லாலிங்கனம், மணலாலிங்கனம், மோட்டாராலிங்கனம் முதலிய சாஸ்திர விரோதமான ஆலிங்கனங்களை இயற்றி மூர்ச்சையின்பம், ஆஸ்பத்திரி பதவி, முதலிய பேறுகளை அடைந்திருப்பர்.

சுப்பையாவின் தலையில் வளையல் வெட்டிக் காயப் படுத்தின பிறகு, அவனுக்கு விசாரணைப் புத்திவந்து நடு வழியில்தான் இவ்வாறு செய்தது தகாதென்று உணர்ந் தான். ஆனாலும் கமலாவதியின் கைவளையலால்வெட்டுப்படும் படி தன் தலைசெய்த பாக்கியமே பாக்கியமென்று அவனு க்கு உள்ளுக்குள் பூரிப்புண்டாயிருந்தது. இதற்குள் மோட் டார் வண்டி ஒரு வைத்தியசாலையைச் சமீபிக்கவே அங்கு தன் தலைக்காயத்துக்கு மருந்துபோடலாமென்று எண்ணி சுப்பையா வண்டியை நிறுத்தச்சொல்லி, அவனும் கமலா வதியும் இறங்கி அந்த வைத்தியசாலைக்குள் சென்றார்கள். அதன் தலைவாசலுக்கருகில் "டாக்டர் ஹரிஹர ஐயர், எல். எம். எஸ். மிலிட்டரி மெடலிஸ்ட்" என்று விளம்பரப் பல கைபோடப்பட்டிருந்தது. உள்ளே சென்றதும் சுப்பையா அங்கு வெறுமே உட்கார்ந்திருந்த டாக்டரிடம் தலையைக் காட்டி மருந்துபோடும்படி கேட்டான்.

டாக்டர்.—"இந்தக் காயம் எப்படி ஏற்பட்டது?"

சுப்பையா.—"இது சார்" என்று ஆரம்பிக்கிறதற்குள் கமலாவதியின் பார்வை அம்புபோல அதன் பிரமாந்தி ரத்தை ஊடுருவிச் செல்வதை யுணர்ந்து, அவள் முகத்தை ஏறிட்டுப்பார்த்து என்ன சொல்வதென்று அறியாமல் தயங்கினான். கமலாவதி, "வாயிற்படி தலையில் பட்டுவிட் டது" என்றாள். உடனே சுப்பையா—"ஆம் சார், வாயில் படியிலே தலை இடிச்சிட்டுது," என்க.

டாக்டர் அப்படியா வென்று தமது புஸ்தகத்தில் குறித்துக் கொள்ளும்படி அவன் பெயர் விலாசம் கேட் டார். சுப்பையா தன் பெயரைக்கூறி புரசவாக்கத்தி லிருப்பதாக விலாசம் கொடுத்தான்.

புரசவாக்கம் என்று விலாசம் கொடுக்கவும், டாக்டர், "புரசவாக்கத்தில் காயப்பட்டால் அங்கேயே மருந்து போட்டிருககலாமே. என் இவ்வளவு தூரம் வரவேண்டும்?" என்று கேட்டார். தாங்கள் எதிர்பாராத இந்தக் கேள்விக்குச் சரியான மறுமொழி சொல்ல முடியாமல் சுப்பையாவும் கமலாவதியும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தார்கள்.

இவர்களின் பேச்சையும், பாவனையையும் கவனித்து, காயம் புரசவாக்கத்தில் வாயிற்படிபட்டு உண்டானதல்ல வென்றும், ஏதோ ஓர் காரணத்துக்காக தன்னிடம் உண்மையை மறைத்து கூறுகிறார்களென்றும் டாக்டர் உணர்ந்து, இவர்கள் தன்னிடம் உண்மையை கூறாததற்காக, தன்னுடைய பில் தொகையை அதிகப்படுத்தவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார். அப்படியே, சுப்பையாவின் காயத்தைக் கழுவிச் சுத்தம் செய்து மருந்து போட்டபின் ஐந்து ரூபாவுக்கு பில் தயாரித்துக் கொடுத்தார். இது அவர் வழக்கமாய் வாங்கும் தொகையை விட பல மடங்கு அதிகமாயிருந்தது. ஆனால் சுப்பையா இதை ஆட்சேபிக்கவில்லை. அவன் ஐந்து ரூபாய் எடுத்துக்கொடுத்தால் அவ்வளவு கௌரவமாய் இராதென்று எண்ணி, ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக்கொடுத்துச் சில்லறை கேட்டான். டாக்டர் பிராமணனானதால் நூறு ரூபா நோட்டைக் கண்டதும் பேராசை கொண்டு "ஐயோ பத்து ரூபாவுக்கு பில் பண்ணினேனில்லையே" என்று தன்னை நொந்து கொண்டார். அவரிடம் அவ்வளவு பணமில்லாததால் பக்கத்திலுள்ள ஓர் பெரிய ஜவுளிக் கடைக்குப்போய் மாற்றிக் கொண்டுவந்து கொடுத்தார்.

அதை வாங்கிக்கொண்டு சுப்பையாவும் கமலாவதியும் மோட்டார் ஏறி புரசவாக்கத்தில் அவர்கள் இறங்கியிருந்த வீட்டுக்குப் போனார்கள். சாப்பாடு தயாராயிருந்தது. சாப்பிட்டு முடிந்ததும் சுப்பையா ஒரு திண்டில் சாய்ந்துகொண்டு வயிற்றை தடவிக்கொண்டிருக்கையில் கமலாவதி வெற்றிலைத் தாம்பாளத்துடன் வந்து அவனுக்கு வெற்றிலை மடித்துக்கொடுக்க ஆரம்பித்தாள். அப்பொழுது அவன் கமலாவதியைப் பார்த்து நீ மோட்டரில் வரும்பொழுது ஒரு கிராமத்தைப்பற்றிச் சொன்னாயே அதென்ன?'' என்றாள்.

கமலாவதி.—"சமயபுரம் என்று சமீபத்தில் ஒரு கிராமம் இருக்கிறது. என் தாய்வழி ஜனங்கள் அங்கே இருக்கிறார்கள். நல்ல செழிப்பான இடம். குடியிருப்புக்கு செம்பவசதி. அங்கே நமக்கு ஒரு வீடு கட்டினால் சௌகரியமாயிருக்குமென்று சொன்னேன்.

சுப்பைய்யா: — "அதற்கென்ன அப்படியே செய்வோம்.''.

கமலாவதி.—"ஒரு வீடு கட்டவும், ஒரு தென்னந்தோப்பும், சில ஏக்கர் நிலமும் வாங்கவும் குறைந்து இருபதினாயிரம் ரூபா பிடிக்கும், அவ்வளவு செலவு செய்வீர்களா'' என்று சொல்லிக்கொண்டே அவன் கால் விரல்களை கையினால் பற்றி மிருதுவாக சுணக்கெடுக்க முயற்சித்தாள்.

இதனால் ஆனந்த மடைந்த சுப்பையா "இதுதானா, பிரமாதம். இன்றைக்கே உண்டியலனுப்பி பணம் தருவித்து, வந்த உடனே வேலையை ஆரம்பித்து விடுவோம்'' என்று சொன்னான்.

அன்று மாலையே சுப்பையா இருபதினாயிரம் ரூபா

வுக்கு ஒரு உண்டியல் எழுதி அருணாசலம் செட்டியாருக்கு அனுப்பினான்.

இரண்டு நாட்களுக்கு பிறகு அருணாசலம் செட்டியாரிடமிருந்து அவனுக்கு ஓர் கடிதம் வந்தது. அதில் தற்சமயம் கையில் அவ்வளவு ரொக்கப் பணமில்லையென்றும், நேரில்வந்தால் வேண்டிய ஏற்பாடு செய்யலாமென்றும் எழுதியிருந்தது. அதைப் படித்ததும் சுப்பையாவுக்கு எரிச்சலுண்டாகி அருணாசலம் செட்டியாரை மனதுக்குள்ளே திட்டிக்கொண்டிருந்தான். கமலாவதியைப் பிரிந்துபோக அவனுக்கு இஷ்டமில்லை. அவன் போகாவிட்டால் பணம் வருவதற்கு வழியுமில்லை. ஆகையால் ஊருக்குப்போய் வருவதாய் கமலாவதியிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு தேவகோட்டை வந்தான். அருணாசலம் செட்டியாரைக்கண்டு பேசினதில் அவர் ஏற்கனவே கையிலுள்ள ரொக்கமெல்லாம் செலவாகிவிட்டதாகவும், இனிமேல் நிலங்களை விற்றால்தான் பணம் கிடைக்குமென்றும் கூறினார்.

"கையிலுள்ள ரொக்கமெல்லாம் செலவாய் விட்டதா" என்று சுப்பையா கேட்க அருணாசலம் செட்டியார் சூதாட்டம், தாசிகமனம், டிராமா பார்த்தல், ஊர் சஞ்சாரம், பிராமண சமாராதனை முதலியவைகளுக்காக சுமார் இரண்டு லட்ச ரூபா செலவாகியிருக்கிறதென்று கணக்குக் காட்டினார்.

சுப்பையா இதற்குமுன் செலவு கணக்குகளைப் பற்றிக் கவனிக்காததால் அவனுக்கு இவ்வளவு தொகை செலவழிந்ததென்று கேட்கவும் அத்யந்த ஆச்சரியமுண்டாயிற்று. அருணாசலம் செட்டியார் அதைக்கவனித்து,

அவனுக்கு செலவு கணக்கின் ஒவ்வொரு அம்சங்களையும் பற்றி விபரம்கூறி அத்தனைபணமும், அவனே செலவழித்ததாக அவன் மனத்தில் படும்படி செய்தார். அவன் கணக்கு விஷயத்தில் சுத்த மண்டூகமா யிருந்தால் அதையெல்லாம் சரியென்று ஒப்புக்கொண்டான். உண்மையில் அவன் அவ்வளவு பணம் செலவுசெய்யவில்லை. கணக்கில் கண்ட தொகையில் மூன்றிலொரு பாகந்தான் அவன் கையால் செலவானது. மற்றத் தொகையெல்லாம் அவன் பேரில் எழுதி அருணாசலம் செட்டியாரே அபகரித்துக்கொண்டார். சிறுவயதிலிருந்தே அவன் திருவிளையாடல்களுக்கு ஆட்சேபனை செய்யாமல் கேட்டபொழுதெல்லாம் பணம் கொடுத்து வந்தாராகையால், அவன் அருணாசலம் செட்டியாரிடத்தில் பூர்ண நம்பிக்கை வைத்திருந்தான். செல்லம்மை ஆட்சேபனை செய்தாலும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அருணாசலம் செட்டியார் சுப்பையாவை அவனிஷ்டப்படி நடக்கும்படிவிட்டுவந்தார். சொத்து பரிபாலனம் இன்னும் அவர் பொருப்பிலேயே இருந்தது. எனவே அவர் சுப்பையாவுக்குப் பணங்கொடுக்கும் பொழுதெல்லாம், அவனுக்குக் கொடுக்கிற தொகையைவிட சிறிது அதிகமான தொகையை தமது சொந்தத்துக்கு எடுத்துக் கொள்வது வழக்கம். இந்தப் பணத்தையெல்லாம் அவர் தமது நண்பர் வைரவன் செட்டியார் கடையில் போட்டு வைத்திருந்தார். நிற்க,

சுப்பையா கொஞ்சநேரம் யோசனை செய்துகொண்டிருந்து விட்டு, "எனக்கு எப்படியாவது இருபதினாயிரம் ரூபா வேண்டும். நீங்கள் சொல்லுகிறபடி நிலத்தை விற்றால் அவ்வளவு தொகை கிடைக்குமா?" என்று கேட்டான்.

அருணுசலம் செட்டியார்.—"நிலத்தை யெல்லாம் விற்ருல் ஏறக்குறைய ஐம்பதினுயிரம் ரூபா கிடைக்கும்"

சுப்பையா.—"சரி, அப்படியானுல் நிலத்தையெல் லாம் விற்றுவிடுங்கள்."

அருணுசலம் செட்டியார் அப்படி செய்வதாகக்கூற, சுப்பையா நிலத்தை விற்பனைசெய்து பணமுழுவதையும் தன்பேருக்கு தபாலில் அனுப்பிவிடச் சொல்லிவிட்டு, சென்னைக்குத் திரும்பிவிட்டான்.

எட்டு நாட்களுக்குப்பின் அவனுக்கு ரிஜிஸ்டர் தபா லில் இருபதினுயிரம் ரூபா நோட்டுகளாக, அருணுசலம் செட்டியாரிட மிருந்துவந்தது. அதில் ஐயாயிரத்தைச் செலவுக்கு வைத்துக்கொண்டு, மற்ற பதினையாயிரத்தை யும் கமலாவதியிடம் கொடுத்து "நீ கேட்டபடி பணம் வந்துவிட்டது. இனி வீட்டுவேலை தொடங்கவேண்டியது தான்" என்ருன்.

கமலாவதி கனசந்தோஷத்துடன் அவனைக் கட்டி யணைத்து ஆலிங்கனம் செய்து (நல்லவேளையாய் இந்தச் சமயத்தில் அவள் கைகளில் வளையல் இருக்கவில்லை) கொஞ் சின வண்ணமாய்ச் சொல்லுவாள், "சொன்னசொல் தவ ருத சோணகிரி வள்ளல் என்ருல் உங்களைத்தான் சொல்ல வேண்டும். எனது விருப்பத்தை நிறைவேற்றிவைக்க எவ் வளவோ கஷ்டம் எடுத்துக் கொண்டீர்கள். இவ்வளவு பொன்பூண்ட தங்களண்டை அனவரதகாலமு மிருந்து பாத பணிவிடை செய்யும் பாக்கியமே பாக்கியம். இவ் விஷயமாய், இனிமேல் நீங்கள் சிரமப்படுவதை நான் ஒருக் காலும் பார்த்திருக்க மாட்டேன். வீடுகட்டுகிறது, நிலம் வாங்குகிறது, முதலிய வேலைகளை நடத்த வேண்டுமானுல்

என் தாய் மாமன் இங்கே யிருக்கிறார். அவரைத் தருவிக்கிறேன். அவரிடம் பணம் கொடுத்தால், என் தாயாரும் அவருமாக அந்த வேலைகளை யெல்லாம் முடித்துவிடுவார்கள். உங்களுக்கு ஒருவருத்தமும் பிராது. நீங்கள் எப்பொழுதும் என்னண்டையிலேயே இருக்கவேண்டும். இந்த வரம் தான் எனக்குவேண்டியது" என்று பிரார்த்தித்தாள்.

சுப்பையாவுக்கு இதை யெல்லாம் கேட்கவும் ஆனந்தம் தலைக்கேறியது. "உன்னிஷ்டபடியே செய்" என்று சொல்லிவிட்டான். அன்று மாலை கமலாவதியின் தாயும், இன்னொரு மனிதனும் வந்து சேர்ந்தார்கள். அந்த மனிதனைத் தன் தாய்மாமனென்று கமலாவதி, சுப்பையாவுக்கு அறிமுகப் படுத்திவைத்தாள். இந்த விஷயமாய்க் கலந்து பேசி முடிவுசெய்தபின் பதினையாயிரம் ரூபாவையும் கமலாவதி தன் தாயிடம் கொடுத்து அவர்களை அனுப்பி விட்டாள். சில தினங்களுக்குப் பின் கமலாவதியின் தாய் வந்து தாங்கள் போய் நிலவிஷயமாய் விசாரித்ததாகவும், விசாரித்ததில் தென்னந்தோப்பும், நெல்வயலுமாக மணிபோல நிலமிருப்பதாகவும், சொந்தக்காரன் அதற்கு 25000 ரூபா விலை கேட்பதாகவும், அதைவாங்கினால் லாபமென்றும் கூறினாள். கமலாவதி இவ்விஷயத்தை சுப்பையாவிடம் கூறி, அந்த நிலங்களை வாங்கிவிட வேண்டுமென்று அவனைத்தூண்ட, அவன் நல்லதென்று சம்மதித்தாள். அன்றே நிலம் விற்றதில் மீதமிருக்கிற பணத்தையெல்லாம் தனக்கு அனுப்பும்படி அவன் அருணாசலம் செட்டியாருக்குத் தந்தி கொடுத்தான்.

பதினைந்தாவது அத்தியாயம்

செல்லம்மாளின் மரணம்

ஒருமாதகாலம் கனவைப்போல கழிந்துபோயிற்று. இன்னும் சுப்பையாவும் கமலாவதியும் சென்னையில் தான் இருக்கிறார்கள். நிலம் வாங்குகிற விஷயம் இன்னும் முடிவு பெறவில்லை. அப்படியிருக்க ஒருநாள் சுப்பையாவுக்கு தேவகோட்டையி லிருந்து ஒரு தந்திவந்தது. அதைக் கொண்டுபோய் பக்கத்துவீட்டுக்காரரிடம்கொடுத்து வாசிக்கும்படி கேட்டான் அதில் "செல்லம்மை மரணமடைந்து விட்டாள். உடனே புறப்பட்டுவா" என்றெழுதியிருந்தது.

அதைக்கேட்கவும் அவனுக்கு எரிச்சலா யிருந்தது. "நான் இங்கு பேரின்ப வெள்ளத்தில் முழுகிக்கிடக்கிற பொழுது இந்தக்கிழட்டு முண்டை சாகவேண்டுமா? இந்த இழவுக்காக நான் என் அருமைக் கமலாவதியை விட்டுப் பிரியவேண்டும் போலிருக்கிறதே" என்று எண்ணிக்கொண்டேபோய் கமலாவதியிடம் இந்தச் சங்கதியைக்கூற அவள் மிகவும் விசனமடைந்தவள்போல் பாவனைசெய்து, சுப்பையா உடனே புறப்பட்டுப்போய் சாவு சடங்குகள் சர்வமும் நிறைவேற்றி வரும்படி துரிதப்படுத்தினாள். சுப்பையாவுக்குப்போக இஷ்டமில்லை யென்றாலும், கமலாவதியின் பேச்சுக்கு எதிர்சொல்ல மாட்டாமல் புறப்பட்டுப் போனான்.

மாணச் சடங்கெல்லாம் நிறைவேறின மூன்றாம் நாள் அருணாசலம் செட்டியார் சுப்பையாவைப் பார்த்துச் சொல்லுகிறார்.—" இதுவரைக்கும் அண்ணியார் இங்கே

யிருந்ததினுல் நான் எல்லாக் காரியங்களையும் மேற்பார்த்து வந்தேன். நீ உன்னிஷ்டம்போல சுற்றித் திரிந்தாய். இப்பொழுது எல்லாம் மாறிவிட்டது. ஆகையால் இனிமேல் நீ என்தலையில் பொறுப்பைச்சுமத்திவிட்டு, வாளா அலைதல் கூடாது. கணக்குகளைப் பரிசோதித்து குடும்ப காரியங்களை நீயே கவனிக்கவேண்டும். நீ சிறு பிள்ளைத்தனமாய் லட்சக்கணக்கான பணங்களை அழித்து விட்டாய். நிலம் விற்பனை செய்ததில் ஏற்கனவே ஐம்பதினுயிரம் ரூபா பற்றிக்கொண்டாய். அதையெல்லாம் என்ன செய்தாயென்று எனக்குத் தெரியாது. மீதம் ஐம்பதினுயிரம் ரூபா என்னிடமிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு இனியாவது செட்டாய்ப் பிழைத்து சிறப்படையப்பார்" என்று பிரசங்கித்தார்.

இந்த சமயத்தில் அண்ணுமலைச் செட்டியார் அங்கு வர, அருணுசலம்செட்டியார் அவரை "அண்ணன் வாங்க" என்றழைத்து உட்க்காரவைத்து, அவரைப்பார்த்து "நீங்கள் நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள். இப்பொழுதுதான் நான் சுப்பையாவிடம் கணக்குகளைப் பரிசோதித்து ஒப்புக்கொள்ளும்படி சொல்லிக்கொண்டிருந்தேன். அதற்கு உங்களைப்போல ஒரு மத்தயஸ்தாள் கூடவிருப்பது உசிதம்." என்று சொல்லிக்கொண்டு போய், எழுத்துப் பெட்டியை எடுத்துக் கொண்டுவந்து சுப்பையாவின் குடும்ப சொத்துக் கணக்குக் குறிப்புகளை புத்தகம் புத்தகமாய் எடுத்து அவ்விருவர் முன்னிலையில் பரப்பிவைத்தார்.

சுப்பையா ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தான். சில நேரம் கழித்து அண்ணுமலைச் செட்டியார், அருணுசலம் செட்டியாரைப் பார்த்து, "சரி, நீர் கணக்குவிபரத்

தைச் சொன்னால் அவன் ஒப்புக் கொள்ளுகிறான். கணக்கு புஸ்தகங்களைப் பரப்பிவைத்துக்கொண்டு வெறுமே பார்த்துக் கொண்டிருந்தால் காரியம் முடியுமா?'' என்க, அருணசலம் செட்டியார், ரொக்கப்பணம், வட்டிக்கு விட்டிருந்தபணம், நிலச்சொத்து முதலியவைகளின் கணக்குகளை இம்மிகூட விடாமல் கிரமமாய் எடுத்துக் கூறி, செலவு அழிவு எல்லாம் நீக்கி தற்சமயம் கையிருப்பு ஐம்பதினாயிரம் ரூபாயும், இராமநாதன் செட்டியார் கட்டிய மெத்தை வீடுந்தானென்று, வெகுதிட்டமாய் கணக்குக் காண்பித்தார். சுப்பையாவுக்கு கணக்கென்றால் பிணக்காகையால் வாயைத்திறக்காமல் மறுவார்த்தை சொல்லாமல் சும்மாவிருந்தான். அதன்மேல் அண்ணாமலைசெட்டியாரும் வீண்செலவைப்பற்றி அவனுக்கு ஓர் சிறு பிரசங்கம் செய்து, இனிபுத்தியாய்ப் பிழைக்கும்படி புத்தி புகட்டினார். கடைசியில் அந்தக் கணக்குக்குறிப்புகளும், ஐம்பதினாயிரம் ரூபா ரொக்கமும் சுப்பையாவிடம் கொடுக்கப்பட்டன. அவன் சனியன் ஒழிந்ததென்று அவற்றைபெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான். அங்கு அவன் மனைவி கண்ணம்மாள், வீட்டு வேலைக்காரியுடன் எதற்காகவோ இரைச்சலிட்டுச் சண்டை பிடித்துக் கொண்டிருந்தாள். சுப்பையா அவளைக் கமலாவதியுடன் ஒப்பிட்டு பார்த்து, கமலாவதியிடம் காணப்பட்ட அன்பும், ஆசாரமும் கண்ணம்மாளிடமில்லையென்று அவளை வெறுத்துப் பின்வருமாறு யோசிக்கலானான்.

“அழகாவது, அன்பாவது இல்லாத இந்த அசட்டு நாரியை நான் ஏன் கலியாணம் பண்ணிக்கொண்டேனோ தெரியவில்லை. இவளுக்காகக் கொடுத்த முப்பதினாயிரம்

ரூபாயை என் கமலாவதிக்குக் கொடுத்திருந்தால், எத்தனை நலமாயிருந்திருக்கும். இனி இவளோடு வாழ என்னால் முடியாது. வீட்டுக்குக்காவலாகவும், சோற்றுக்குச் செலவு மாக இந்த முண்டம் இங்கேதானே இருக்கட்டும். இவள் கெட்ட கேட்டுக்கு பதினையாயிரம் ரூபா பெருமான நகைகள் என்னத்துக்கு? இவள் அவைகளைப் போட்டுக் கொள்வதில்லை. அவை அலங்காரத்துக்காகப்போட்டுக் கொள்ளத் தக்க நகைகளுமல்ல. அவற்றை யெல்லாம் இவளுக்குப் பூட்டி விட்டால் இவள் சாட்சாத் பத்திரகாளி சொரூபமாகவே விளங்குவாள். இந்தநகையெல்லாம் யாதொரு பிரயோசனமுமில்லாமல் பெட்டியில் கிடந்து தூங்குகின்றன. நான் இவைகளை யெடுத்துக் கொண்டு போய் உருக்கி என் கமலாவதிக்கு தகுதியான ஆபரணங்கள் செய்துகொடுப்பேன். ஓகோ, இப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. கமலாவதியின் கைகளில் கனகத்தாலாய காப்பு இல்லாததாலல்லவா அன்று அவள் கையில் கிடந்த கண்ணாடி வளையல் என் தலையில் வெட்டிற்று. அதன் அருத்தம் இப்பொழுதுதான் எனக்கு விளங்குகிறது. "அட மூடா, நீ இன்னும் கமலாவதியின் கமலக் கைகளுக்கு சொர்னத்தால் காப்புச்செய்து போடவில்லையே. உன் தலையில் என்ன களிமண்ணா இருக்கிறது" என்று சொல்வது போல என்தலையில் இரத்தம் வரக் குட்டின அந்த வளையலின் அறிவே அறிவு. அன்று நான் இதை உணராமற் போனேனே. என்னைப்போன்ற மூடனும் இவ்வுலகிலிருப்பானோ? இப்பொழுது எனக்கு அறிவு வந்துவிட்டது. இனிமேல் கமலாவதியின் கைகள் வெறுமையாயிருக்க நான் ஒரு சிறிதும் சகியேன். இன்றிரவே இந்த

எட்டேகால் லட்சணத்திடமிருந்து நகைப்பெட்டிச்சா வியை என்கைவசப்படுத்தி, நகைகளையெடுத்து ஒளித்து விடுவேன்," என்று தனக்குள் தீர்மானம் செய்து கொண்டான். இவன் சங்கதி இப்படி யிருக்க.

கண்ணம்மாள் தன் புருஷன் ஒரு தாசிப்பெண்ணைக் கூட்டிக்கொண்டு சென்னைக்கு சென்று விட்டதைக் கேள்விப்பட்டது முதலே அவன் மீது அடங்காக்கோபம் கொண்டிருந்தாள். "அவர் வீட்டுக்கு வரட்டும். அவர் மொட்டைத்தலையைச் சுக்கல் சுக்கலாக்கி விடுகிறேன்" என்று தனக்குள் சபதம் செய்து கொண்டிருந்தாள். ஆனால் சுப்பையா திரும்பிவர பல வாரங்கள் சென்றமையால், அவள் கோபம் ஒருவாறு தணிந்துபோயிற்று. அவன் நிலத்தை விற்பனை செய்வதற்காக முந்தி ஒரு தடவை வந்தபொழுது வீட்டில் தாமதிக்காததால், அவனிடம் தன் சுரூபத்தைக்காட்ட கண்ணம்மாளுக்கு இடங்கிடைக்கவில்லை. அதனிடையில் மாமியார் சாகவும் அந்த மகிழ்ச்சியினால் சுப்பையாவின் மேலிருந்த வர்மம் அநேகமாய் ஒழிந்துபோய் விட்டது. அருணாசலம் செட்டியார் கணக்கு ஒப்புவித்துவிட்டதையும், ஐம்பதினாயிரம் ரூபா கொடுத்ததையும் பற்றி அறிந்து, அந்த ஐம்பதினாயிரம் ரூபாவைத்தான் எப்படியாவது கைவசப்படுத்த வேண்டுமென்றும், தவறினால்தன் புருஷன் கொண்டுபோய் தாசிகளிடம் அழித்து விடுவாரென்றும், எண்ணிக்கொண்டிருந்தாள். அந்த எண்ணத்துடனே புருஷனுக்கு என்றுமில்லாத உபசாரம் செய்து அன்னம் படைத்தாள். அன்றிரவு இருவரும் ஒருவரையொருவர் கொள்ளையடிக்கும்படி நெடுநேரம் விழித்திருந்தனர். கண்ணம்மாளுக்கு

இரவில் நெடுநேரம் கண் விழித்திருந்து வழக்கமில்லை யாதலால் நடுராத்திரிக்கு முன் தூங்கிவிட்டாள். அவள் தூங்கிவிட்டதை யுணர்ந்து சுப்பையா எழுந்து விளக்கைக் கொளுத்திக்கொண்டு கண்ணம்மாள் பெட்டிசாவியைக் கைப்பற்றி நகைப்பெட்டியைத்திறந்து, அதிலிருந்த நகைகளை யெடுத்து தன் பிரயாணப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டுப் படுத்துக்கொண்டான். உடனே அவனுக்கு தூக்கம் வந்துவிட்டது. சாவியை, மறதியினால் பெட்டிப் பூட்டிலே வைத்துவிட்டான்.

இரண்டு மணிநேரங்கழித்து, கண்ணம்மாளுக்கு விழிப்புண்டாகி தான் செய்ய நினைத்திருந்த காரியத்தை முடிக்காமல் தூங்கிவிட்டதைக்குறித்து ஆத்திரப்பட்டு துடித்தெழுந்து பார்த்தாள். இன்னும் விடியவில்லை என்று தெரிந்து அவளுக்குச்சற்று தைரியமுண்டாயிற்று. உடனே ஒருவிளக்கைக் கொளுத்திகொண்டு தன்புருஷன் தூங்கிவிட்டானே வென்று பார்த்தாள். அவன் குறட்டை விட்டுக்கொண்டு தூங்கினான். அவன்பெட்டியில் சாவி யிருப்பதைக்கண்டு சந்தோஷப்பட்டு பெட்டியை திறந்து பரிசோதித்தாள். தன்னுடைய நகையெல்லாம் அங்குவந் திருப்பதைக்கண்டு அவளுக்கு அத்தியந்த ஆச்சரிய முண்டாயிற்று. அன்றுபகல் பார்த்தபொழுது தன்பெட்டியிலிருந்தநகைகள் எப்படி இங்குவந்தன வென்று ஆலோசித்ததில், தான் தூங்கிக்கொண்டிருந்த சமயத்தில் தன்புருஷன் எடுத்திருக்கவேண்டு மென்று அவள்மனதில் பட்டது. "நான் அவரைக் கொள்ளையடிக்க நினைத்திருக்க, அதற்கு முன்னமே என்னை அவர் கொள்ளையடித்திருக்கிறாரே இதென்ன கொடுமை. என் நகைகளை யெல்லாம் எடுத்துக்

கொண்டுபோய் அந்தத்தாசி முண்டைக்குக் கொடுக்கவல்லோ துணிந்திருக்கிறார். துரோகி, சண்டாளன்" என்று நினைத்து மிகவும் கோபமடைந்து, அந்தநகைகளையும், பணத்தையும் எடுத்துக்கொண்டு பெட்டியைப் பூட்டிச் சாவியை சுப்பையாவின் தலைமாட்டில் வைத்துவிட்டாள். அந்தப்பணத்தையும் நகைகளையும் கொண்டுபோய் தன் பெட்டியில் வைத்துப்பூட்டி சாவியை வெகுபத்திரமாய் வைத்துக்கொண்டு படுத்துறங்கினாள்.

காலையில் சுப்பையா சென்னைக்குப் புறப்பட்டான். பிரயாண உபயோகத்துக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் ஒரு பிரயாணப் பையில் அடக்கம் செய்து வைத்திருந்ததால் அவன் போகுமுன் மற்றப் பெட்டியைத் திறந்து பார்க்கவில்லை.

மறுநாள் சென்னபட்டணம் போய்ச்சேர்ந்தான். கமலாவதி அவனை எதிர்கொண்டழைத்து வீட்டுக்குள் கூட்டிப்போய் உபசாரம் செய்தாள். குளிப்பதற்கு வெந்நீர் வைக்கவும், ஆகாரம் தயார்க்கவும் அவசரம் அவசரமாக ஓடித்திரிந்தாள். பின்பு சுப்பையா ஸ்நானம் செய்து, உண்டுதாம்பூலந்தரித்து ஒரு திண்டில் சாய்ந்து கொண்டிருக்கையில் கமலாவதியைப் பார்த்து,

"நான் உனக்குச் சில நகைகள் செய்து கொடுக்க எண்ணியிருக்கிறேன். வேண்டுமான தங்கமும் பணமும் கொண்டுவந்திருக்கிறேன். யோக்கியனான ஒரு தட்டானைத் தருவிக்கவேண்டும்" என்றான். நகைப் பேச்சைக் கேட்டதும் கமலாவதியின் முகம் கமலம்போல சோபித்தது. அவள் கிட்டவந்து சுப்பையாவைக்கட்டி ஆலிங்கனம் செய்தாள். உடனே தன் தாயை அழைத்து

ஒரு நல்ல தட்டான் வேண்டுமென்று செட்டியாரவாள் கேட்பதாகக்கூற, அவள் பக்கத்துத் தெருவில் தனக்குத் தெரிந்த தட்டானிருப்பதாகக் கூறிப்போய் சிறிதுநேரத்துக்குள் ஒரு தட்டானைக் கூப்பிட்டுக்கொண்டு வந்தாள். அவன் வந்தவுடனே சுப்பையா தான் கொண்டு வந்துள்ள தங்க நகைகளை யெடுத்து அவனுக்குக் காண்பிக்கும்படி பெட்டியைத் திறந்தான். பெட்டிக்குள் நகைகள் இல்லை. ஒரு கட்டாகக் கட்டிவைத்திருந்த ஐம்பதினாயிரம் ரூபா நோட்டுகளும் காணப்படவில்லை.

பதினாறாவது அத்தியாயம்

சுப்பையாவின் புதிய ஜீவியம்

நகைகளையும், பணத்தையும் காணாமையால் சுப்பையா பிரமித்து ஒன்றும் தோன்றாமல் பித்தனைப் போல விழித்துக்கொண்டு அங்குதானே உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் அப்படி பெட்டியண்டை உட்கார்ந்து கொண்டே யிருப்பதைக்கண்ட கமலாவதி பின்பக்கமாய்ப்போய் அவன் தோளின்மேல் தன்கைகளை ஊன்றிக்கொண்டு பெட்டிக்குள்குனிந்து பார்த்து "என்ன பேசாமல் பெட்டியண்டை உட்கார்ந்திருக்கிறீர்களே?" என்று கேட்டாள். கமலாவதியின் குரலைக்கேட்கவும் அவனுக்குதன்னுணர்வுவந்து, நடந்தனயாவும் அறிந்தான்.

சுப்பையா.—"பன்னிராயிரம் ரூபா பெறுமான தங்க நகைகளும், ஐம்பதினாயிரம் ரூபா நோட்டுகளும் இந்தப் பெட்டிக்குள் வைத்திருந்தேன். அவைகளை இப்பொழுது

காணவில்லை. அவை எப்படிப் போயிற்றென்று விளங்க வில்லை.''

கமலாவதி.—(ஆச்சரியத்துடன்) ''நீங்கள் கொண்டு வந்த நகைகளும், பணமுமா போய்விட்டது. களவு போயிற்ருே, அல்லது நீங்கள் அவைகளை வீட்டில் வேறெந்தப் பெட்டியிலும் வைத்துவிட்டு வந்தீர்களோ? வீட்டுக்கு உடனே ஒரு தந்திகொடுத்தால் தெரிந்துவிடுகிறது. வழியில் ஏதேனும் விபரீத சம்பவங்கள் நடந்ததோ?''

சுப்பையா.—''வழியில் ஒன்றும் விபரீதமாய் நடக்க வில்லை. வீட்டிலிருந்து புறப்பட்டு நேரே இவ்விடம் வந்து சேர்ந்தேன். இந்தப் பெட்டிக்குள் நான்தானே அவைகளை வைத்தது; என் கையிருப்பெல்லாம் அவ்வளவு தானே. அதை வைத்து இங்கே தொழில் நடத்திக் கொண்டு நாம் சுகமாயிருக்கலாமென்று எண்ணிக்கொண்டு வந்தேனே. என் எண்ணத்தில் இடிவிழுந்து விட்டதே. நானென்ன செய்யப்போறேன்''

என்று சுப்பையா இரைச்சலிட்டுக்கொண்டிருந்தான். பிள்ளையாண்டான் கையிலுள்ளதை பறிகொடுத்துவிட்டு, பிச்சைக்கார நிலைமையி லாகிவிட்டானென்று கமலாவதியின் தாய் உணர்ந்து, அங்கு வந்திருந்த தட்டானிடம் சில வார்த்தைகளை இரகஸ்யமாய்ச்சொல்லி அவனை அனுப்பிவிட்டாள். உடனே வீட்டுக்குத் தந்தி கொடுத்துக் கேட்கும்படி கமலாவதி கூறினுள். சுப்பையாவிடம் அப்பொழுது ஒரு ரூபாய்கூட இல்லை. தந்தியனுப்ப பணத்துக்கு எங்கே போவான். தன்னிடம் பணமில்லை என்று சொல்லவும் அவனுக்கு வெட்கமாயிருந்தது. இதைக் கமலாவதி கவனித்து தன்னிடம் பணமிருக்கிறதென்றும்,

அதைக்கொண்டு தந்தி யனுப்ப வேண்டுமென்றும்கூறி சுப்பையாவிடம் பத்து ரூபா கொடுத்து அவனை தந்தி யாபீசுக்கு அனுப்பினாள். அப்படியே அவன் போய் தந்தியனுப்ப, அதற்குப் பதில் மறுநாள் கிடைத்தது. ஐம்பதினாயிரம் ரூபாவைப்பற்றி ஒன்றும் தெரியாதென் றும், ஆனால் கண்ணம்மாளின் நகைகளெல்லாம் காணாமல் போய்விட்டன வென்றும், ஆகையால் உடனே புறப்பட்டு வரவேண்டு மென்றும் அதில் எழுதியிருந்தது. சுப்பையா வுக்கு இதனால் எவ்வித ஆறுதலு முண்டாகவில்லை. "தந்தி யில் கண்ணம்மாளின் நகைகள் காணாமல் போய்விட்டன வென்று எழுதியிருக்கிறதே. அதென்ன விபரம்?" என்று கமலாவதி கேட்டாள். சுப்பையா முதலில் உண்மையைக் கூறாமல் மாறுபாடாகப் பேசிப்பார்த்தும் கமலாவதிக்கு திருப்தியுண்டாகவில்லை. கடைசியில் உண்மையை வெளி யிட்டான். தனக்காக, கலியாணம் செய்த மனைவியின் நகைகளைக் கொண்டுவந்தா னல்லவாவென்று கமலாவதி சுப்பையாமீது சந்தோஷப் பட்டாள்.

இப்படிச் சிலநாட்கள் கழிந்தன. காணாமற்போன நகைகளையும், பணத்தையும் பற்றி ஒருதுப்புந் துலங்க வில்லை. அவற்றைத் திரும்பக் காணலாமென்ற நம்பிக்கை குறைந்துபோயிற்று. இவ்விதமே கமலாவதி சுப்பையா வுக்கு காண்பித்த வேஷஅன்பும் குறைந்துகொண்டு வந்தது. நாளொரு வண்ணமாக சுப்பையா இதை உணர் ந்து வந்தானென்றாலும், கமலாவதியின் மேலிருந்த மோக த்தால் அவன் மனம் இதற்கெல்லாம் மழுங்கிக்கொடுத்துக் கொண்டிருந்தது. ஒருநாட் காலையில் சுப்பையா வெளி யில் சென்றிருந்தான். அப்பொழுது கமலாவதியின் தாய்

அவளைப்பார்த்தும் செட்டியாரை வழியனுப்பி விடாமல் பேசாமலிருந்தால் எப்படி? இப்படி இருத்தி வைத்துக் கொண்டிருந்தால் நம்மிடம் கொடுத்த பணத்தை திரும்பக் கேட்டாலும் கேட்பான். ஆகையால் உடனே துரத்தி விடவேண்டும் என்றாள்.

கமலாவதி.—"காணாமல் போனபணம் திரும்பிக் கிடைத்து விடாதா என்ற எண்ணத்தால் இவ்வளவு நாள் இடங்கொடுத்தேன். இப்பொழுது, அந்தப்பணம் திரும்பக் கிடையாது என்று தெரிந்துவிட்டது. இனி செட்டியாருக்குச் சீட்டுக்கொடுத்து அனுப்பிவிட வேண்டியது தான்."

தாய்க்கிழவி.—"நான் இப்பொழுதே ஒரு தந்திரம் செய்கிறேன். நீபோய் உள்ளறையில் இருந்து கொள்."

என்று சொல்லிவிட்டு தலைவாயிலில் போய் நின்று கொண்டிருந்தாள். சற்றுநேரம் கழித்து சுப்பையா அங்கு வர தாய்க்கிழவி அவனை எதிர்கொண்டுவந்து சாடையாகக்கூப்பிட்டு "தம்பி, யாரோ ஒரு ஐயா வந்து கமலாவதியிடம் பேசிக்கொண்டிருக்கிறார். ஆகையால் நீங்கள்போய் எங்கேயாவது சுற்றிவிட்டு சாயந்திரம் வாருங்கள். சாப்பாடும் தயாராக்கவில்லை. அந்த ஐயா, ஹோட்டலிலிருந்து சாப்பாடு தருவித்து எங்களுக்கெல்லாம் விருந்து செய்யப் போகிறார். இந்தாங்க இந்த எட்டணாவுக்கும் நீங்கள் சாயந்தரம் வரும்பொழுது நல்ல கற்கண்டு வாங்கிக் கொண்டு வாருங்கள். அந்த ஐயா இராத்திரி இங்கே தங்குவார்போலிருக்கிறது. அவருக்கு கற்கண்டுபோட்டு பால்காய்ச்சிக் கொடுக்கவேண்டும்" என்று இரகசியமாய் அவன் கையில் ஓர் எட்டணா நாணயத்தைக் கொடுத்தாள். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அவன் மனம் புழு

வாய்த் துடித்தது. அவன் மனதில், மானம், ரோஷம், ஆண்மையாதிய குணங்கள் ஒருங்கே திரண்டெழும்பி கமலாவதியின்மேல் அவனுக் கிருந்தமோகத்தை எதிர்த்துச் சண்டைசெய்தன. அவள் கையிலிருந்த எட்டணு நாணயம் தவறிக் கீழேவிழுந்தது. தாய்க்கிழவி கீழேவிழுந்த நாணயத்தை எடுத்துக்கொண்டு தலைவாயிலைச் சாத்திவிட்டு வீட்டுக்குள் போனதையும் உணராமல் அவன் அங்கு நின்றுகொண் டிருந்தான். அவன் மனதில் இன்னும் சண்டை நடந்துகொண் டிருந்தது. சில நிமிஷங்களுக்குள் மானம் ரோஷமாகிய குணங்கள் வெற்றிபெற்றன. தன் நிலைமையைப்பற்றி அவனுக்கு சொல்லொணு அருவருப்புத் தோன்றியது. அந்த வீட்டுக்குள் ளிருக்கும் தன் பெட்டி முதலிய சாமான்களை எடுக்கவும் அவனுக்கு இஷ்டமில்லை. அந்தவீட்டை ஏறெடுத்துப் பார்க்கவும் விரும்பாமல் திரும்பி சரேலென்று நடந்தான். போகுமிடம் எங்கே யென்றும், செய்வதின்ன தென்றும் சிந்தியாமலே சென்று கொண்டிருந்தான். இப்படி வெகுநேரம் நடந்தபின் எதிரில் ஒருபெரிய கட்டிடமிருப்பதைக் கண்டான். அது எழும்பூர் ரெயில்வேஸ்டேஷன். அதைக் கண்டதும் உடனே ரெயிலேறி ஊருக்குப் போகவேண்டுமென்று அவனுக்கு எண்ண முண்டாயிற்று. ஆனல் அவன் கையில் ஒருகாசுகூட இல்லை. என்னசெய்கிறது? அப்பொழுது அரையில் ஒரு தங்க அரைநாண் கிடக்கிற தென்ற ஞாபகம் அவனுக்கு வந்தது. அடர்ந்த காட்டில் புக்கி வழி தெரியாமல் அலைபவனுக்கு ஒரு கொடிவழிப் பாதை தென்பட்டாற்போல, அவனுக்கு மன வெழுச்சி யுண்டாயிற்று. ஒரு தட்டான் கடைக்கு சென்று அதை

இருபது ரூபாவுக்கு விற்பனைசெய்து அந்தப்பணத்தைக் கொண்டு ரெயில் ஏறி தேவகோட்டை வந்து சேர்ந்தான்.

அவன் வந்தபின் பல நாட்களாக கண்ணம்மாளின் வாய்ப்பீரங்கிப் பிரயோகத்துக்கு இலக்காயிருந்தான். தாசியின் நன்றியற்ற நடத்தையும், அவளுக்காக கண்ணம்மாளின் நகைகளை கவர்ந்து சென்றோமே என்ற எண்ணமும் அவன் மனதை வருத்தின. ஆகையால் கண்ணம்மாளின் ஏச்சு பேச்சுகளெல்லாம் தனக்கேற்ற தண்டனைகளென்று எண்ணி, அந்த இடிமுழக்கங்களும், பிரசண்ட மாருதமும் நின்று சமாதானம்ஏற்படாதா வென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். கையிலுள்ள பணத்தையும், கண்ணம்மாளின் நகைகளையும் கொண்டு போய்த் தாசிக்கு அழித்து விட்டு வெறுங் கையனாய் வீடுவந்திருக்கிறானென்று ஊரெங்கும் சுப்பையாவைப்பற்றி பிரஸ்தாபமுண்டாயிருந்தது. ஜெயிலுக்குப் போய் வந்தவனைப் போல, வெளியில்வர யோக்கியதையின்றி வீட்டுக்குள்ளே யிருந்தான். கண்ணம்மாள் ஏற்கனவே தன் நகைகளையும் அந்த ஐம்பதினாயிரம் ரூபாவையும் தன் தகப்பனாரிடம் கொடுத்து வைத்திருந்தாள்.

கடைசியில், சிலருடைய சிபாரிசினால் சுப்பையாவின் மாமனார், தான் வாங்கியிருந்த கடன் தொகையில் இருபதினாயிரம் ரூபாகொடுப்பதாகவும், அதைக்கொண்டு சுப்பையா ஏதேனும் தொழில் நடத்தி ஜீவிக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. சுப்பையா இருபதினாயிரம் ரூபாயைக்கொண்டு மதுரையில் போய் வியாபாரம் செய்ய ஆரம்பித்தான்.

இப்பொழுது சுப்பையா புதுமனிதனாகமாறி விட்

டான். "பட்டறி, கெட்டறி, பத்தெட்டிருந்தறி" என்ற பழமொழிப்படி அவன் பட்டுக்கெட்டு பணம் செலவழித்து உலகத்தின் போக்குகளை ஒருவாறு உணர்ந்திருந்தானுகை யால், அவன் தொடங்கின வியாபாரத்தை விருத்தி செய்யப்போதிய ஞானமும் மனுேபக்குவமும் அவருக்கிருந்தன. எனவே வெகு சீக்கிரத்திலேயே அவன் ஓர் பிரபல வர்த்தகனுனன். அதன்பின் கண்ணம்மாள் அவனிடத்தில் அன்பாய் நடந்து கொண்டாள். இருவரும் மனமொத்து வாழ்ந்துகொண்டிருக்கிறுர்கள். பணமும், நகைகளும் காணுமற்போன வரலாறெல்லாம் அவனுக்குத் தெரியவந்தது. அதற்காக அவன் கண்ணம்மாளைப் புகழ்ந்து கொண்டாடினன்.

இது இவ்வாறிருக்க, சிலகாலத்துக்குப் பின் அருணுசலம் செட்டியாருக்கும், அண்ணுமலைச் செட்டியாருக்கும் பலத்த மனஸ்தாப முண்டானதில், அருணுசலம் செட்டியார் செல்லம்மையையும், சுப்பையாவையும் கெடுக்கும்படி செய்த சூழ்ச்சிக ளெல்லாம் வெளிப்பட்டு ஊரெங்கும் அதே பேச்சாயிருந்தது. சுப்பையாவுக்கும் தெரியவந்தது. இந்தச் சங்கதிகள் வெளிப்பட்ட மறுவாரத்திலே பினுங்கில் அருணுசலம் செட்டியார் சுப்பையாவிடம் அபகரித்த பணங்களையெல்லாம் போட்டிருந்த கடை முறிந்துபோனதாக சமாச்சாரம் எட்டினது. அருணுசலம் செட்டியார் அந்த ஏக்கத்தினுல் சிலமாதங்களுக்குப்பின் மரணமடைந்தார்.

சுப்பையாவுக்கு நற்புத்தி கூறும்படி முயற்சித்த முத்தையாவைப் பற்றி முன்னெரு அத்தியாயத்தில் கூறியுள்ளோம், அவன் அதன்பின் பர்மாவுக்குக் கொண்டு

விற்கப்போய் மிகவும் திருப்திகரமாய் தொழில் நடத்திக் கொண்டிருப்பதாய்த் தெரிகிறது.

சுவீகார புத்திரன்

முற்றிற்று.

PRINTED AT THE GUARDIAN PRESS, BROADWAY, MADRAS.

எவர் எவ்விதக் கெடுதி செய்தாலும், அதனை உடனே மறந்து விடுதல் நல்லது. எண்ணங்களெல்லாம் அன்பு மயமாயிருக்கவேண்டும்.

காலையிலெழுந்து கடவுளைத்தியானித்து நற்கருமங்களை இயற்றச் சிந்தையில் கருதவேண்டும். நற்சிந்தையே நல்வசனங்களும். நற்கருமங்களுக்கும் தாய். மனதிலெழும் எண்ணங்களைத் தூய்மையாக்குவதே முக்தியேற்றத்தின் முதல்படி.

படுக்குமுன் பகவத்தியானம் செய்து, பாருலகில் வாழும் பலவித ஜீவர்களுக்கும் பாக்கிய வாழ்வை அருளும்படி பரமனை இறைஞ்சவேண்டும். நம்மை யாட்கொள்ளும் ஈசனிடம் நம் சுய நன்மைக்காக மாத்திரம் கேட்பது போதாது.

தைரியம், விடாமுயற்சி, ஊக்கம், வீரம் ஆகிய நற்குணங்கள் மனதினில் வளரும்படி முயலவேண்டும். இந்த நற்குணங்கள் தான் முன்னேற்ற ஓட்டத்தில் நம்மை வெற்றி பெறச்செய்யக் கூடியவை.

ஆசைக்கு எல்லைபோட்டு, அளவுமீறுமல் அவனை அடக்கவேண்டும். 'அதிக ஆசை அதிக நஷ்டம் என்ற பழமொழி அனைவரும் அறிந்ததே.

பொதுவாக ஜீவர்களுக்கும், சிறப்பாக மனிதருக்கும் இம்சை செய்யாதிருப்பதே சிறந்த மானிட இலக்கணம்.

வேலைக்குத் தக்கதாக, வேளை தவருமல், வேண்டிய அளவு—மிதமாக—உண்ணவேண்டும். ஐஸ்வரியவான்கள் அளவுமீறி உண்பதாலும், ஏழைகள் போதிய ஆகாரம் கிடையாமையாலும் மடிந்து போகிறுர்களே.